


கல்கி

KALKI 31-5-81 ரூ. 1.20

Only for those who like to be sure





The VIP label. Your guarantee of comfort and confidence. Confidence that your anatomy demands from scientifically designed underwear.

Made from the choicest fabric. With the softness, the smoothness... and the feel that gives the VIP feeling.

Durable underwear from VIP. A complete price range... because every person is important.

VIP®
UNDERWEARS

CASHH-1-203

*Distributors for the State of Tamil Nadu

Modern Distributors, 21, Balfour Road, Kilpauk (Near Kellys), Madras-600 010





சென்னை டி.வியில் தாய்லாந்து நிகழ்ச்சி!

- பங்களாதேஷ்: டாக்கா டி. வி. கோபுரமும் செய்திகள் என்ற அறிவிப்பும்.
- பிந்து பதேஜி.

பல உலக நாடுகளின் டி. வி. நிகழ்ச்சிகளைப் பார்ப்பதுதான், பிந்து பதேஜியின் பொழுது போக்கு! சென்னை ரெமிங்டன் ராண்டு அலுவலகத்தில் பணிபுரியும் இந்த ஐம்பத்திரண்டு வயதுக்காரர் வீடு முழுவதும் ஏதோ ரிகார்டிங் அறை மாதிரி பூதாகாரமான கருவிகள். பிந்து பதேஜி கூறுகிறார்:

''எங்கள் கம்பெனி அகில இந்திய ரீதியில் ஒரு விற்பனைப் போட்டி வைத்தது. அடித்தது யோகம் எனக்கு. வெற்றி பெற்றேன். பரிசு: இந்தியா முழுதும் சுற்றிவர இரண்டு பேருக்கு டிக்கெட்டுகள் அல்லது ஐயாயிரம் ரூபாய் ரொக்கம். நான் பணத்தைப் பெற்றுக் கொண்டு முதல் வேலையாக டி.வி. வாங்கினேன்.

சென்னை டி.வி. நிகழ்ச்சிகளை ரசித்துவந்த எனக்கு ஒரு நாள் அதிர்ஷ்டம் அடித்தது. மாலை ஐந்து மணி இருக்கும். என் டி.வி.யில் தாய்லாந்து நாட்டு அரசர் தலைகாட்டினார். இரண்டே நிமிடம்தான்! அந்தச் சந்தோஷத்தை எப்படிச் சொல்வேன். இதையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு அயல் நாட்டு டி. வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கத் திட்டமிட்டேன். பிரிட்டிஷ் கவுன்ஸில் நூலகத்திலிருந்து பல புத்தகங்கள் டி.வி. சம்பந்தமாக வாங்கிப் படித்தேன். இது போல் அயல் நாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டுமானால் நமக்கு ரொம்பவும் பொறுமையும் முயற்சியும் வெற்றி பெறுவதில் அடக்க முடியாத ஆசையும் இருக்க வேண்டும்.

''சாதாரணமாக டி.வி. நிகழ்ச்சிகளை ஐம்பது மைல்கள் வரை உள்ளவர்கள் எளிதில் பார்க்கலாம். இது ஆன்டென்னாவின் உயரத்தைப் பொறுத்துள்ளது. இதற்கு மேல் படம் அழகாகத் தெரிய வாய்ப்பில்லை. பிரத்யேகமான திசை நோக்கும் ஆன்டென்னா, அதோடு கூடிய பூஸ்டர்கள் உதவியால் 100 முதல் 150 மைல்கள் வரை எளிதில் பார்க்கலாம். இதற்கு அதிகமான தூரத்தில் டி.வி. நிலையத்தின் நிகழ்ச்சிகளைப் பார்க்க ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

''பருவ நிலை நன்றாக இருந்தால்தான் வெளி நாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தேவையான சிக்னல் கிடைக்கும். இதனை டி.வி. டிக்சிங் என்று சொல்வோம்.

''ஒரு தனி நோட்டுப் புத்தகம் அமைத்து அதில் நாம் பார்த்த அயல் நாட்டு டி.வி. நிகழ்ச்சி, பார்த்த தேதி, நேரம், சானல் எண், அப்போதைய சீதோஷ்ண நிலை இவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

''எனது குறிப்புக்களின்படி பங்களாதேஷ் டி. வி. நிகழ்ச்சிகளைப் பார்க்க மார்ச்-ஏப்ரல் மாதங்கள் சரியானவை. பாங்காக் நிகழ்ச்சிகளைப் பார்க்க ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை சரியான காலம்.

''இடை விடா முயற்சியினால் பங்களாதேஷ், பாகிஸ்தான், மலேசியா, துபாய், பகரின், சீனா, ரஷ்யா முதலிய அயல் நாடுகளின் நிகழ்ச்சிகளையும் இந்தியாவில் டெல்லி, பம்பாய் டி.வி. நிகழ்ச்சிகளையும் பார்த்து ரசித்துள்ளேன். டி. வி. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் காண்பிக்கப்படும் அறிவிப்புக்கள் மூலம் அதனை எந்த நாடு என்று கண்டு கொள்ளலாம். புகைப்படம் எடுத்து வைத்துக்கொள்ளலாம்.

''அயல் நாட்டு டி.வி. நிகழ்ச்சிகள் பார்க்கப் பல சானல்கள் கொண்ட டி. வி. செட் ரொம்ப முக்கியம். அநேகமாக பான்ட் ஒன்று. சானல் இரண்டு, மூன்று, அல்லது நான்கில் வரும். நல்ல உயரமான ஆன்டென்னா பூஸ்டர் தேவை. ஆன்டென்னாவை நமக்குத் தேவையான திசைகளில் சுழற்ற வழி வகுத்துக் கொள்ள வேண்டும்.

''அயல் நாட்டு டி.வி.க்கான சிக்னல்கள் வரும்போது திரையில் குறுக்கே கோடுகள் விழுவதைக் காணலாம். உடனே ஆன்டென்னா அருகிலிருக்கும் நபர், டி. வி. பெட்டியின் அருகே உள்ள நபரின் சிக்னலுக்கு ஏற்றாற் போல் ஆன்டென்னாவைத் திருப்ப வேண்டும். அயல்நாட்டு நிகழ்ச்சிகள் ரொம்ப அற்புதமாகத் தெரியாது. மங்கலாகத்தான் இருக்கும். இதற்கு அரசிடம் லைசென்ஸ் பெறவும் வேண்டும்.''

பேட்டி: **''சிக்கி''**



COLLEGE CAMPUS

ஊட்டி அரசுக் கல்லூரி

தொகுப்பு — சு. பகவத்சிங்




[illegible] கல்லூரி

ஊட்டி — வரலாற்றோடு தொடர்புடையது ஊட்டி அரசு கலைக் கல்லூரி. அது செயல்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிடம், ஊட்டியிலேயே முதன் முதலாக எழுந்த கட்டிடம் என்ற பெருமை இருக்கிறது. 'ஊட்டியின் தந்தை' என்று புகழப்படுபவர் ஊட்டி நகரை நிறுவியதாகக் கருதப்படுபவர். அந்நாளில் கோவையில் கலெக்டராகப் பணியாற்றிய ஆங்கிலக் கனவான் திரு ஜான் சல்லிவன். ஊட்டியைக் கண்டறிந்து, தென்னிந்தியாவில் வாழும் ஆங்கிலேயர்க்கு உகந்த குடியிருப்பிடம் என்று அரசுக்குச் சிபாரிசு செய்து, இவ்வாறாக ஊட்டி நகர்த் தோற்றத்துக்குக் காரணமாக இருந்தவர். தாம் வாழ்வதற்கு முதல் இல்லத்தை அவர் கட்டிக் கொண்டது ஸ்டோன் ஹவுஸ் ஹில் என்று கூறப்படும் மலைப் பகுதியில்தான். ஸ்டோன் ஹவுஸ் என்ற இல்லத்தை யொட்டி அந்த மலைப் பகுதிக்கு அப்பேர் ஏற்பட்டது. இது நடந்தது கி. பி. 1823ல். அன்றிலிருந்து ஊட்டி வரலாறு தொடங்குகிறது.

அந்த ஸ்டோன் ஹவுஸ் கட்டிடத்தில்தான் ஊட்டி அரசு கலைக் கல்லூரி அமைந்து செயல் புரிந்து கொண்டிருக்கிறது. ஆங்கிலேயர் கட்டிடக் கலைத் திறனுக்கு அரிய சான்றாக விளங்கும் இக்கட்டிடங்களில் 1870 முதல் அரசு செயலகங்கள் இயங்கி வந்திருக்கின்றன. 1937ல் மூதறிஞர் ராஜாஜி தலைமையிலான முதல் காங்கிரஸ் மந்திரி சபை அமைந்த பின் அப்பழக்கம் கைவிடப் பட்டது ராஜாஜியின் எளிமை, சிக்கனப் பண்புகளை விளக்கிக் காட்டுவதாய் உள்ளது. இங்கு 1955 ஜூலையில் கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அரசுக் கலைக் கல்லூரி, இன்று வெள்ளி விழாப் பூரிப்பில் புதுக் கோலம் பூண்டிருக்கிறது. பேராசிரியர் இக்னேசியஸ் அப்சலாம், முத்து ராசாக்கண்ணனார், அச்சுத நாயர் போன்ற அரும் பெரும் முதல்வர்களைக் கண்ட இக்கல்லூரி, வெள்ளி விழா ஆண்டில் சிறந்த காந்தியவாதியும், பூதத்துவவியல் பேராசிரியருமான திரு அ.கி. கஸ்தூரி அவர்கள் தலைமையில் தன் பயணத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இவ்வூருக்கு மிகப் பயனுள்ளதான தாவரவியல் மேல் பட்டப் படிப்புடன் செயல் பட்டுக் கொண்டிருக்கும் இக்கல்லூரி வரும் ஆண்டில் தமிழ், பொருளாதாரம், கணிதம் ஆகிய பாடங்களிலும் மேல் படிப்புக்கு அனுமதி கோரி எதிர்பார்த்திருக்கிறது.

மாணவர்கள் தொகையில் மூன்றிலொரு பங்கு மகளிராக அமைந்து, பாரதி கண்ட கனவை நனவாக்குவதில் பொறுப்பு வகித்து வருகின்றனர். ''வினையாற்று; வீறுகொண்டு நில்'' என்று, இக்கல்லூரி தன் மாணவர்களுக்குக் கொள்கை வகுத்துத் தருகிறது. கடுங்குளிர், நடுங்கும் பனி என்றாலும் அலுவலகங்களில் பணிபுரியும் கல்வி ஆர்வலர்களுக்குத் தளராது மாலைக் கல்லூரி வகுப்பு வழங்கி வரும் இக்கல்லூரி, பாராட்டுக்குரிய ஒன்றே!

இவ் அறிவாலயம் வரலாற்றுப் பெட்டகமாகவும் விளங்கி வருகிறது. ஊட்டி வரலாறு கி. பி. 1823ல் தொடங்குவதாக முன்னர் பார்த்தோம் அல்லவா? அதை உறுதிப்படுத்தும் வரலாற்றுச் சான்று இக் கல்லூரியில் இருக்கிறது. கி. பி. 1923ல் ஊட்டி நூறு ஆண்டு நிறைவுற்றதைக் கொண்டாடியதற்கான கல்வெட்டும், நினைவாக நடப்பட்ட இரு ஓக் மரங்களும் இக்கல்லூரியில் பொறித்து போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



உலகம் பெறுவது கண்டதை — நாம்
இளைஞரின் காண்போம் நல்லதை
-க. மகேந்திரன்.
(பொருள் — இரண்டாம் ஆண்டு)

படுகர் பழமொழி

கஷ்டப்பட்டு காக பணத்தோடு வாழ்ந்தால், பட்டத்து யானையும் கை உயர்த்தி உன்னை வணங்கும். கெட்டிடிலோ, கட்டெறும்புங்கூட தன் கால்களால் உதைக்கும்.

— ம. செவனன் (வரலாறு மூன்றும் ஆண்டு)

கன்னிப் பருவத்திலே!

கன்னிப் பருவத்திலே தோழி
கல்லூரி வந்தோமடி தோழி
கால் பார்த்து வருவோமடி தோழி
கண்பார்க்க வேண்டாமடி தோழி!
கல்வி நாம் படிக்கப் படிக்க
அறிவு வளரும் தோழி. ஆனால்
கற்போ பிறர் பார்க்கப் பார்க்க
கருகும் சருகாகும் தோழி!
கற்பில் நாம் கண்டுக்கினியாவோம்
தோழி!

கல்வியில் நாம்
கலங்கரை விளக்கமாவோம் தோழி!
எம். ரேவதி
(தாவர இயல், இரண்டாம் ஆண்டு)



இரு கரங்கள் இங்கே இணையட்டும்!

(கோவை, மாணவர் — பல் தொழிலாளர் நட்புறவு மன்றக் கவிதைப் போட்டியில் பரிசு பெற்றது.)

இணைந்திடும் கரத்தில்
கத்தியை வைத்து
முதுகில் குத்தும் கயவர்களும்
அணைத்துப் பிடித்து
முத்தம் கொடுத்து
அதிலே விஷம்தரும் ன்மையரும்
வாழும் உலகில்
வாய்மை ஒன்றால்
வாழும் நாமும் இணைந்திடணும்.
மாணவர் நினைத்தால்
நடத்திக் காட்டுவார்
'நடத்துனர்' ஆவார் என்பதனால்
ஓடா(ன) உலகினை
ஓட்டிக் காட்டுவார்
'ஓட்டுனர்' ஆவார் என்பதனால்
ஒடும்நதி கடலோடு
இணைந்தே போவதனால்
நாடும் பல நன்மை


மறதி!


பரீட்சை அறாலுக்குள் நுழைந்து
கேள்வித் தாளை வாங்கிய பின்தான்
ஞாபகம் வந்தது — நேற்று இரவு
முழுவதும் விழித்திருந்து எழுதிய
'பிட்'டுக்களை மறந்து வந்து
விட்டேன் என்று.

—எல். மோகன் வேல்,
(வரலாறு — இரண்டாம் ஆண்டு)




பி. ராஜகோபால்
இரண்டாம் ஆண்டு பி.ஏ





சவான் பிரதமரைச் சந்தித்து இந்திரா-காங்கிரசில் சேருவது பற்றிப் பேசினார்!



தில்லுமுல்லு!

கருணாநிதி அமைச்சரவை மீது லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்கள் அன்றைய இந்திரா அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அந்தக் குற்றச் சாட்டுகளில் பெருமளவு உண்மை இருக்கிறது என்று பிரதமர் உணர்ந்ததனால்தான் சர்க்காரியா கமிஷனை நியமித்திருக்கவேண்டும். ஆளுனர் அறிக்கை அடிப்படையில் கருணாநிதி அமைச்சரவையை டிஸ்மிஸ் செய்திருக்கவேண்டும். அவ்வாறின்றி போதிய முகாந்திரம் இல்லாமலே அன்று இந்த நடவடிக்கைகளை இந்திரா எடுத்திருந்தாரானால் அது,

தில்லு முல்லு தில்லு முல்லு
உள்ளமெல்லாம் கல்லு முள்ளு!

சர்க்காரியா கமிஷன் நியமித்தாகி விட்டது. நீண்ட கால விசாரணையும் நடந்தது. சர்க்காரியா சில குற்றச் சாட்டுக்களைத் தள்ளி விட்டாலும் வேறு சில லஞ்ச ஊழல்களில் கருணாநிதியும் அவரது சக அமைச்சர்கள் சிலரும் சம்பந்தப் பட்டிருப்பதாகக் கருதப் போதிய அளவு சாட்சியங்கள் இருப்பதாகக் கூறினார். அவ்வாறே தீர்ப்பும் வழங்கினார்;

இதையொட்டி இரு வழக்குகளை - கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் வழக்குகளை — ஸி.பி.ஐ. தொடர்ந்தது. பிரமாண வாக்கு மூலங்களைப் பதிவு செய்து கொண்டது.

இதற்குள் தேச சரித்திரத்திலேயே பெரிய திருப்பம் நிகழ்ந்தது. இந்திரா தேர்தலில் தோல்வியுற ஜனதா ஆட்சி அமைந்தது. எமர்ஜென்சியின் போதும் அதன் பிறகு தேர்தலிலும் இந்திரா எதிர்ப்பாளருக்கு — ஜனதா தலைவர்களுக்கு- பல வகையிலும் உதவியாக இருந்தார் கலைஞர் கருணாநிதி. அவர் மீது இந்திரா அரசு சுமத்திய வழக்குகள் வாபஸ் பெறப்படுமா என்ற பத்திரிகை நிருபர்கள் கேள்விக்கு ''சட்டம் தன் கடமையைச் செய்யும்'' என்று கூறி விட்டார் மொரார்ஜி.

கலைஞர் மொரார்ஜியை நம்பிப் பயனில்லை என உணர்ந்தார். ஒரு குட்டிக் கரணம் போட்டு இந்திராவிடமே தஞ்சம் புகுந்தார். இந்திரா மீண்டும் பதவிக்கு வந்தார். நாளடைவில் ''அம்மா திமுக என்று வர்ணிக்கப்படுவதில் பெருமையடைகிறோம்'' என்று திமுக வட்டாரத்தினர் கூறுமளவுக்கு நிலைமை மாறியது.

தில்லு முல்லு தில்லு முல்லு
உள்ளமெல்லாம் கல்லு முள்ளு!

இப்போது திடும்மென கருணாநிதி மீது இருந்த வழக்குகள் வாபஸ் பெறப் பட்டு விட்டன. முன்னர் கூட்டத்துக்குக் கூட்டம் ''லஞ்ச ஊழல் பேர்வழி'' என்று கருணாநிதியை இழித்துரைத்த அதே இந்திரா இன்று வழக்குகளை வாபஸ் பெற அனுமதித்து விட்டார்!

தில்லு முல்லு தில்லு முல்லு
உள்ளமெல்லாம் கல்லு முள்ளு!

நேற்று கருணாநிதிக்கு எதிராகச் சாட்சி சொன்னவர்கள் இன்று பல்டி அடித்து விட்டதாக ஸி.பி.ஐ. காரணம் கூறுகிறது. யாராவது ஒரு சாட்சி பல்டி அடிக்கலாம். ஒட்டு மொத்தமாய் அனைவருமா? அல்லது ஒரே ஒரு சாட்சியை நம்பி ஸி.பி.ஐ. வழக்குத் தொடுத்ததா? அன்று சாட்சிகளை மிரட்டி ஸி.பி.ஐ. பொய்யான பிரமாண வாக்கு மூலம் பெற்றதா? அல்லது இன்று சாட்சிகளை யாரேனும் மிரட்டி பல்டி அடிக்கச் செய்தார்களா? எல்லாமே,

தில்லு முல்லு தில்லு முல்லு
உள்ளமெல்லாம் கல்லு முள்ளு!

விசாரணை என்ற பெயரில் மக்களின் வரிப்பணத்தை லட்சக் கணக்கில் விரயம் செய்வானேன், பிறகு வழக்குகளை வாபஸ் பெறுவானேன்? சுய நலத்துக்காக நாடகமாடி, பூசி மெழுகி, மக்களை ஏமாற்றி விடலாம் என நினைப்பது,

தில்லு முல்லு தில்லு முல்லு
உள்ளமெல்லாம் கல்லு முள்ளு!

1981 மே 31

துன்மதி வைகாசி 18

மலர்: 39 இதழ்: 44



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



ராஜிந்தர்புரி என்று ஒரு நகைச்சுவை எழுத்தாளர். குஷ்வந்த் சிங் அவரை நன்கு பயன்படுத்திக் கொள்வார். இப்போது ஹிந்துஸ்தான் டைம்ஸில் புரியின் அங்கத பாணி கட்டுரைகள் அடிக்கடி இடம் பெறுகின்றன.

சவான் ''யு'' காங்கிரஸிலிருந்து ''ஐ'' காங்கிரஸுக்குத் தாவப் போவது பற்றி ஒரு தமாஷ் கட்டுரை எழுதியுள்ளார் புரி. கடைசியில் சொல்கிறார்: ''இனி ''யு'' காங்கிரஸாவது ஒன்றாவது; எல்லாம் ''இயூ'' காங்கிரஸ்தான்! இந்திரா காங்கிரஸில் சேர எல்லாரும் ''இயூ''வில் நிற்கும் காங்கிரஸ் தான்!

● ● ●

''கொள்ளைக் காரர்கள் ஹரிஜனங்களைக் கொன்று குவிக்கிறார்கள்'' என்று ஒரு செய்தி தலைப்பு சில தினங்களுக்கு முன் பொறுப்பு வாய்ந்த பிரபல ஆங்கில நாளிதழ்களில் வந்தது. என்னடா வென்று பார்த்தால் கொள்ளைக்காரர்களை அந்த ஹரிஜனங்கள் போலீஸாரிடம் காட்டிக் கொடுத்ததாகச் சந்தேகித்ததன்பேரில் பழி தீர்த்துக்கொண்டார்களாம். இந்தகைய பழிவாங்கும் படலம் ஹரிஜனங்களுக்கு மட்டுமல்ல எந்த வகுப்பினருக்கும் நேர்ந்திருக்கும். காட்டிக் கொடுத்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நடத்த படுகொலையே யன்றி ஹரிஜனங்கள் என்பதற்காக அல்ல. தலைப்பை மட்டும் படித்துவிட்டு பஸ் பிடிக்க ஓடுகிறவர்கள், ஹரிஜனங்களை ஹரிஜனங்கள் என்பதற்காகவே கொன்று விட்டதாகத்தான் எண்ணுவார்கள்!

ஹரிஜனங்களுக்குச் சமூகம் இழைக்கிற அநீதிகள் போதும். பத்திரிகையாளர்கள் வேறு இல்லாத அநீதிகளையும் அவர்கள்மீது சுமத்த வேண்டாம்!

● ● ●

விபத்துக்களைத் தவிர்க்க போக்கு வரத்து சீர்படுத்த வேண்டிய டிராஃபிக் போலீஸாரே விபத்துக்குக் காரணமாகின்றனர் பல சந்தர்ப்பங்களில். சென்னையில் சாலைகளை இரண்டாகப் பிரிக்கிறேன் என்று ஆரம்பித்து கனமான சிமெண்டு கற்களை சாலை மையத்தில் வரிசையாக அடுக்கி விடுகிறார்கள். அவை மத்தியில் இருப்பதைக் குறித்து எச்சரிக்கை சிவப்பு விளக்கு எதுவும் எரிவதில்லை. சாலையின் இருபுறமும் உள்ள மங்கிய விளக்கொளி மத்தியில் பாய்வதில்லை. இரவில் கார்கள் அந்தச் சிமெண்டு கற்கள் மீது மோதி.....

இப்படித்தான் ராணி மேரி கல்லூரி அருகே ஒரு கார் சில தினங்களுக்கு முன் விபத்துக்கு உள்ளாகியது. அந்தக் காரின் ஆக்ஸில் உடைந்திருக்கும். அதைக் காண கார் சொந்தக்காரரின் இதயமும் உடைந்திருக்கும்!

● ● ●

நீதித் துறையைத் தாக்குவோரை வாங்கு வாங்கு என்று வாங்கி விட்டார் சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி சந்திரசூட். ''அவர்கள் ஏதோ கோட்டையில் வசிக்கிறார்கள்; சாமானியனின் பிரச்னை அவர்களுக்குப் புரிவதில்லை'' என்று தாக்குபவர்களை ''எங்கே இருக்கிறது கோட்டை?'' என்று திருப்பிக் கேட்டார். ''எங்களில் பெரும்பாலோர் சாமானியக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள்தான். கடும் உழைப்பாலும் தகுதியாலும் முன்னேறியிருக்கிறோம்'' என்று ஒரு போடு போட்டிருக்கிறார்.

ஏழைமையை ஒழிக்கவும், சோஷலிஸ சமதர்ம சமுதாயத்தை அமைக்கவும் நீதிபதிகள்தான் தடையாக இருப்பது போல் பேசுவது அபத்தம்.

அரசியல் சாசனமும் அதை அரசு மீறாமல் பாதுகாக்கிற நீதித் துறையும் ஏழைமை ஒழிப்புக்கு எதிரிகள் அல்லவே அல்ல.

ஏழைமை ஒழிப்புக்கு எதிரி அரசின் பொருளாதாரக் கொள்கைகள்தாம்.

● ● ●

உலகில் வறுமைப் பிணியை ஒழிக்க உதவாமல் செல்வத்தை ஆயுதக் குவிப்பில் முடக்குகின்றன வல்லரசுகள்.

அணு ஆயுதங்களை மட்டுமின்றி பயங்கரமான ரசாயன விஷ வாயுக்களை வெளிப்படுத்தும் குண்டுகளையும் அமெரிக்கா ஏராளமாகத் தயாரித்திருக்கிறது.

தயாரிப்பதுடன் பிரச்னை முடியவில்லை! குவித்து வைக்கப்படும் ஆயுதங்கள் நாளடைவில் பழுதுபட்டுப் போக, அவற்றிலிருந்து விஷ வாயுக்கள் ஒழுக ஆரம்பித்து விடுகின்றன! அப்போது அமெரிக்க மக்களுக்கே அது ஆபத்தாக முடியும். எனவே ஒரு கால வரம்பு கடந்ததும் அந்தக் குண்டுகளை யாருக்கும் தீங்கு நேராதபடி அழித்துவிட வேண்டும்! புதிய குண்டுகளைத் தயாரித்து அடுக்க வேண்டும்!

ஆக, ஆக்க ஒரு செலவு; அழிக்க ஒரு செலவு! தற்போது அமெரிக்காவில் குவிந்து கிடக்கும் விஷ வாயு குண்டுகளை அழிக்க 2960 கோடி ரூபாய் செலவாகும் என ஓர் அரசு அறிக்கை கூறுகிறது!

இதே நேரத்தில் புது மாதிரியான ஒரு விஷ வாயு குண்டைத் தயாரிக்க ரேகன் அரசு 16 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

முட்டாள்தனத்துக்கு அமெரிக்க மக்கள் தரும் விலை இது!

அந்த நாட்களை நினைத்தால் எனக்குச் சந்தோஷமும் கூடவே ஆச்சரியமாகவும் இருக்கும். காரணம் இந்த ஏழு ஆண்டு களில் நான் வெகுவாக மாறியிருக்கிறேன்.

திருமணமான புதிதில் வெளியில் போகாத நாட்களே மிகக் குறைவு. ஆனால் இப் பொழுது இவர் சினிமாவுக்குக் கூப்பிட் டால் கூட நான் மறுத்து விடுகிறேன். கார ணம் இந்தக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு போவதை விட வீட்டில் இருப் பதே ஆயிரம் மடங்கு மேல்.

அந்த நாட்களில் எங்களால் பிரிவுத் துயரைத் தாங்க முடியாது. ஒரு முறை ஆடி மாதமாகையால் வேலூரில் என் பெற்



★ ''இந்தியாவின் தோற்றங்கள்'' என்ற புத்தகத்தில் ஒரு புகைப்படம்

ஏழாண்டு இல்வாழ்க்கை


றோர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். ஒரு வாரம் ஆகியிருக்கும். இவரிடமிருந்து வந்த கடிதத்தில் தமக்கு ஓட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லை என்றும், வயிற்று வலி அதிகமாக இருக்கிறதென்றும் எழுதி யிருந்தார். என் பெற்றோரின் கோபத்தைப் பொருட்படுத்தாமல் துணைக்குத் தம்பி யுடன் சென்னைக்கு விரைந்து வந்தேன். பார்த்தால் வீடு பூட்டியிருந்தது. இவர் ஒரு வாரம் விடுமுறை எடுத்துக் கொண்டு என்னைக் காண வேலூர் போயிருக்கிறார். எப்படி இருக்கிறது! மறுபடி வேலூர் திரும்பி அவருடன் தனியே இருக்கும்போது, ''வயிற்று வலி எப்படி இருக்கிறது? டாக்டரிடம் காட்டினீர்களா?'' என்று கேட்டால் அவர் சிரித்துவிட்டு, ''சும்மா உன்னைப் பார்க்க வருவதற்காக ரீல் விட் டேன்'' என்று ஒரு போடு போட்டார்!

முன்பெல்லாம் நான் அவருக்கு ஒவ்வொரு கடிதத்திலும் ''வாரம் தவறாமல் எண்ணெய் தேய்த்துக் குளியுங்கள். இரவில் பால் சாப் பிடுங்கள். அதிகம் ஸ்மோக் செய்யாதீர்கள்'' என்றெல்லாம் எழுதுவேன்.

இப்பொழுது அவருக்கு எழுதும் கடிதங்கள் இந்த வகையில்தான் இருக்கிறது: ''நான் இல்லாததால் ரேஷன் சர்க்கரையை விட்டு விடாதீர்கள். அடிக்கடி போய்ப் பார்த்துக் கொண்டு இருந்தால்தான் எண்ணெய் எப்பொழுது வருகிறது என்பது தெரியும். வீணிலேயே வித்யாவின் பள்ளிப் புத்தகங்களை வாங்கிவிடுங்கள்.!''

நானே சில சமயம் யோசிப்பதுண்டு. இந்த ஏழு ஆண்டுகளில் அவரிடம் நான் கொண்ட காதலும் அன்பும் குறைந்து விட்டதா?

இல்லவே இல்லை. நான் தினமும் பூஜை செய்வதே அவர் நலத்துக்காகத்தான். ஆனால் முன்பு அவரிடம் நான் காட்டிய அக்கறை இப்பொழுது என்னால் முழுமையாகச் செலுத்த முடிவதில்லை. இதற்குக் காரணம் என் மூன்று குழந்தைகளைக் கவனிக்க வேண்டியிருப் பதும் மற்ற வேலைப் பளுவும் பிரசவத்தினால்



பல வீனமடைந்துள்ள என் உடல் நிலை யுமாக இருக்கலாம். ஆனால் மெய்யான அன்பு என்பது இந்தப் புற மாறு பாடுகளால் குறைவதில்லை.
—கீதா சந்திரன்

● எனக்கு இரண்டு முறை அபார்ஷன் ஆகி விட்டது. மூன்றும் தடவை false pregnancy அப்பப்பா! என்ன கஷ்டம்! டாக்டர் களுக்கே வியப்பும் வேதனையும் தந்தது. ஆனா லும் என் கணவர் அத்தனை கஷ்டங்களையும் தாங்கத் தைரியம் தந்தார். கணவர் எனக்குக் கொடுத்த நம்பிக்கையிலும் ஊக்கத்திலும் தான் நான் மறுபடியும் புத்துணர்ச்சி பெற் றேன். அபார்ஷன் ஆனதற்கான காரணங் களை டாக்டர்களோடு கலந்து விவாதித்தார். கடவுள் அருளால் 1978ல் சாருமதி—எங்கள் அருமை மகள் சேலத்தில் பிறந்தாள். 1979ல் இவருக்கு லாகோஸில் (நைஜீரியா) வேலை கிடைத்தது. இவர் இங்கு வந்த ஒரு மாதத் திலேயே நானும் சாருமதியும் லாகோஸ் வந்து விட்டோம்.

இவர் யாருக்காவது கஷ்டம் என்றால் பொறுக்க மாட்டார். பிறருக்கு உதவுவதில் சளைக்க மாட்டார். சின்னச் சின்ன விஷயங் களில் துளிக்கூடப் பொறுமையே கிடையாது. ஆனால் சோதனை என்று வந்து விட்டாலோ பொறுமை மலையளவு. வெளியே கிளம்பும் பொழுது நேரமாக்கினால் காரிலே உட் கார்ந்து கொண்டு ஹார்ன் கொடுத்து ஆளைக் கொன்றுவிடுவார். என் பெண் சாரு தூங்கா மல் ராத்திரி வேளையில் அடம் பிடித்தால் அசாத்திய கோபம் வரும். எனக்கும் கோபம் வரும்! எப்போது என்றால் இவர் அனாவசிய மாகச் செலவுகள் செய்யும்போதும், எனக்கு ஒன்றுமே தெரியாது என்பது போல் நடந்து கொள்ளும்போதும்.

இப்படி வருத்தமும் மகிழ்ச்சியும் கோபமும் மாறி மாறி வந்தாலும் என்னைப்பொறுத்த வரை யில் ஏழு வருடத் திருமண வாழ்க்கை மேலும் சந் தோஷமாக இருப்பதற்கு ஒரு அஸ்திவாரமாகத் தான் இருக்கிறது.
—வேதா பார்த்தசாரதி

சுவர்ணமுகி

ஸ்ரீவேணுகோபாலன்

The Portugese or Parangis were regarded (by the Indians) as vile and despicable, the basest in the world. BETRAND II

9

பதினேழாம் நூற்றாண்டின் மருத்துவம் வெகுவாகப் பின்தங்கி யிருந்தது.

நோய் நொடிகளின் தெளிவான காரணங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை.

விசித்திரமான ரசாயனக் கலவைகளான வைத்தியம் பாதியும் மீதி பாதி மந்திர தந்திரங்களாகவும் இருந்தது.

ஹோம்ஸ் தமக்குத் தெரிந்த எல்லா மருந்துகளையும் மாயங்களையும் பிரயோகம் செய்தார். ராஜருக்கு ஆயுசு கெட்டி. சீழ் வைத்த தோள்பட்டை பழுத்துச் சீக்கிரம் உடைந்தது.

சீழோடு குண்டின் இரும்புத் தூள்களும் வெளி வந்தன.

ஒரு வாரம் அவஸ்தையான இரவுகளைக் கழித்த பிறகு, ராஜர் குணமாகத் தொடங்கினான்.

அவன் தங்கியிருந்தது ஒரு காரைக் கட்டிடத்தில்! ஹோம்ஸின் தோட்டம் விஸ்தாரமானது. ஒரு மணி நேரம் சுற்றினாலும் முடிவு பெறாது. அதில் காவலுக்காகப் பல காரைக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன. அதில் ஒன்றில்தான் ராஜர் தங்கி யிருந்தான்.

ஒவ்வொரு காலையிலும் அவன் புது மனிதனாக எழுந்திருக்கும்போது.

முந்திய தினத்தின் அசௌகரியங்கள் குறைந்திருப்பதைக் கவனித்தான். வலிகளும் நெக்கு விட்டிருந்தன.

வெளியே மெல்லக் காலடி வைத்துத் தென்னம்பிள்ளைகளின் நிழல் சல்லடைகள் வழியே சலனமிடத் தொடங்கினான்.

தனது வாழ்க்கையை மற்றுமொரு தவணை நீடித்து வைத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தினான்.

சிலசமயம் குளிர்ச்சியான காலைக் காற்றில் நின்று, தூரத்தில் தெரிந்த சுவர்ணமுகியின் இருப்பிடத்தை ஆர்வத்தோடு நோக்கினான்.

அதைப் பார்க்கும்போதெல்லாம் உடனே போய் அவளைக் காண விருப்பம் தோன்றியது.

சுவர்ணமுகியின் கவிதை நீந்தும் விழி அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

ஆறாயிரம் மைல் தள்ளிக் கிடக்கும் தன் தாயகத்தில் எஸ்மெரல்டா அதே போல் தான் உருக்கமான கண்ணோடு தோற்றமளித்தாள்.

எஸ்மரல்டா அவன் காதலி!

கப்பலில் அவன் ஏறி விடை பெற்ற போது இரு ஏக்கக் கண்களையும் எவ்வளவு பெரிய மகா சமுத்திரங்களாக்கிக் காட்டினாள் அவள்!

அவைகளை நினைத்துப் பல தூங்காத இரவுகளைக் கழித்திருக்கிறான்.

இன்று இந்த இந்திய மண்ணில் சுவர்ணமுகியைப் பார்த்தபோது அந்த விழிகள்தான் அடிக்கடி நினைவுக்கு வந்தன. அவை சந்தோஷத்தையும் கொடுத்தன. துயரத்தையும் கொடுத்தன.

ஒருவிதமாக உடம்பு தேறி, நடக்கக் கூடிய நிலை வந்தபோது மூன்று முறை அவன் சுவர்ணமுகியைப் பார்த்திருக்கிறான்.

அவளுக்கு எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா என்று விசாரித்திருக்கிறான்.

சுவர்ணமுகி அதிகம் பேசியதே இல்லை.

அவள் பதில்கள் எப்போதும் அவள் கண்களில் , மிதந்தன.

கூடுதல் பட்சம் அவனுக்கு ஒரு திருப்தி அளிக்க வேண்டுமானால், மூன்றாவது பிறை போல் சிறு புன்னகை கீற விட்டிருக்கிறாள்.

அவள் புலம்புவது போல் கேட்பது ஒரே கேள்வி.

''என்னை ஏன் காப்பாற்றினீர்கள்? உங்களுக்குச் சிரமம்.''

ஒருமுறை அனுதாபப்பட்டுச் சொன்னான்.

''உங்கள் உடல் இன்னும் தேறவில்லை.



அதற்குள் நடந்து வருகிறீர்களே, ஓய்வு வேண்டாமா?''

அவனிடம் இரண்டே நிமிடங்கள் பேசி வந்த பிறகு மனாளனென்று கண்ணில் நீர் துளிர்க்கும்.

இந்திய மக்களை மட்டுமல்ல; உலகில் துன்பப்படும் எல்லா மக்களையும் நினைத்துக் கண்ணீர் உகுப்பான்.

அதுவும் வாயில்லாப் பூச்சிகளாக இருப்பது அவனுக்கு மிகவும் துயரத்தை உண்டாக்கும்.

கூட்டம் கூட்டமாய் இந்திய ஆண்களையும், பெண்களையும், சிறுவர்களையும் ஒலாந்தியர்கள் அடிமைகளாக நடத்திச் செல்வதை எத்தனை முறை பார்த்திருக்கிறான்!

சோக ஓவியங்கள் அவை.

அவர்களை நினைத்து இரக்கம் சுரப்பதில் மில்டனாக இருந்தால் விரிகல் அழகில் சோகங்களை உதிர்த்திருக்கலாம்.

அவன் வெறும் ராஜர்! ட்ரேக் ராஜர்! அவ்வளவுதான். அந்தஸ்தான ஒரு வாழ்வை விரும்பும் பாமரன். வெறும் உள்ள உணர்ச்சிகளை மட்டும் பொக்கிஷமாகக் கொண்டவன்.

காலையில் எழுந்ததும் அன்று அருமையாக வாய்க்கால் நீரில் குளித்து — ஹோம்ஸ் தோட்டத்தில் இரண்டு வாய்க்கால்கள் நிரந்தரமாக ஓடின — இந்திய வெய்யிலில் சிறிது உலாவிவிட்டு நேராக சுவர்ணமுகியின் இருப்பிடத்துக்குச் சென்றான்.

வாசலில் ரத்தினம்மா என்ற வேலைக்காரியைப் பார்த்து, ''இளவரசி இருக்கிறாரா?'' என்று கேட்டான்.

ரத்னம்மா உள்ளே போக, சுவர்ணமுகி சில விநாடிகளில் வெளியே வந்தாள்.

''நாம் நாளைக்குப் புறப்படுகிறோம்'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகியின் விழிகள் பெரிதாகின.

''எங்கே?''

''நீங்கள்தான் சொல்ல வேண்டும்.''

ராஜர் மயிற்கொன்றை மரத்தைப் பிடித்து நின்றான்.

அதன் க்ரிம்ஸன் நிறப் பூக்கள் கீழே நேர்த்தியான படுக்கை விரித்திருந்தன.



சுவர்ணமுகி சோகமான பிரமையில் நின்றாள்.

''ராஜர்!'' என்றாள். அவள் குரல் கலங்கியிருந்தது.

ராஜர் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

''நீங்கள் ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள்?'' என்றாள் நொந்தவாறு.

''அது என் கடமை இளவரசி! உங்கள் தந்தை எனக்கு எவ்வளவோ செய்திருக்கிறார். நான் இதைத் தவிர வேறு என்ன கைம்மாறு செய்வேன்?''

''ராஜர்! நான் எங்கே போகப் போகிறேன் என்பதுதான் என் யோசனை! அதனால் தான் விழிக்கிறேன்'' என்றாள் சுவர்ணமுகி.

''ஏன்! உங்கள் குடும்பத்துக்கு உறவினர்கள் யாராவது இருக்க வேண்டுமே. உங்கள் தந்தைக்கு நண்பர்கள் எத்தனை பேர் இருக்க வேண்டும்?'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகி துயரமாக முறுவலித்தாள். ''ராஜர்! இப்போது நாட்டின் நிலைமை உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள் அவள். ''இன்றைக்கு எங்களுடன் இருப்பவர்கள் நாளை எதிரிகளுடன் சேர்ந்து விடுகிறார்கள்.



திரிசூலம்

அதிக வசூலைக் குவித்த சிவாஜி படங்களுள் ஒன்று இது. சிவாஜியுடன் கே. ஆர். விஜயா, ஸ்ரீப்ரியா, மேஜர் போன்ற பிரபல நட்சத்திரங்கள் நடித்திருக்கிறார்கள். சில பத்திரிகைகள் பேசுகின்றன இங்கே!

கல்கண்டு

சிவாஜியின் 200வது படம் இது. ஆனால் ஏற்கனவே 1008 முறைகள் வந்த மசாலா பாணி கதை. சங்கர் குரு என்ற பெயரில் ராஜ்குமார் நடித்து கன்னடப் படமாக வந்து 300 நாட்களுக்கு மேல் ஓடிய படத்தைத் தான் சிவாஜி பிக்சர்ஸார் தமிழ்ப் படமாக எடுத்திருக்கிறார்களோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. மூச்சுத் திணறும் அளவுக்கு மசாலா காட்சிகள். ஏன்? எப்படி? எதற்கு? என்று மூன்று கேள்விகளைக் கேட்காமல் பார்க்க வேண்டிய 'பாமர ரஞ்சகப் படம்'.

அண்ணா

சிவாஜி கணேசன் மூன்று வேடங்களில் நடிப்பது அவருக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனால் இதில் மாறுதலாகவும் மேலும் மெருகூட்டும் வண்ணம் சிறப்பாகச் செய்துள்ளார். மனைவியிடம் கொஞ்சல்... குழைவு... நெருக்கம்... ஊடல்...!

மொத்தத்தில் சிவாஜி கணேசனின் கலைப் பயணத்தில் இது ஒரு (சாதனை) மைல் கல்!

அலிபாபா

சில வருடங்களாகவே வயதானவர் ரோலில் ஒரே மாதிரியாக நடித்து, ரசிகர்களை 'ச்சு' என்று சலிப்படையச் செய்துவந்த சிவாஜி 'திரிசூலம்' மூலம் 'பகுத் அச்சா' சொல்ல வைத்திருக்கிறார். ஒரு சிவாஜி வந்தாலே ப்ரேமுக்குப் பிரேம் நிற்பார். மூன்று சிவாஜிகள் ரசிகர்களுக்கு குலோப் ஜாமூன் ஆயிற்றே! Triple action அவரது ரசிகர்களுக்கு Full Satisfaction. யோவ், குரு — சிவாஜி, எங்கேயிருந்தய்யா இந்த இளமைத் துள்ளல் வந்தது? பைட்டிங் சீன்ஸ் ஜோரு வாத்தியாரே! இளைய தலைமுறை நடிகர்களின் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டீரே!

தொகுப்பு: ''செல்வி''

தொடர்ச்சியான உறவோடு ஒருவரில்லை, ராஜா!''

ராஜாவும் யோசித்தான்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்தக் கொரமாண்டல் பிரதேசத்தில் அரச குடும்பங்கள் ஒன்றுக் கொன்று மோதியவாறு இருக்கின்றன. சண்டை ஓயாது நடந்து கொண்டிருக்கிறது. ஜனங்களை யாரும் கவனிக்கவில்லை.

ஜனங்களை மட்டுமின்றி அவனைப்போன்ற ஐரோப்பிய வியாபாரிகளையும் யாரும் பொருட்படுத்தவில்லை.

அவர்களது சுயநலமான நடவடிக்கைகளை யாரும் கட்டுப்படுத்தவும் இல்லை.

''யோசியுங்கள் இளவரசி! நீங்கள் எப்படியும் இங்கே விட்டுப் புறப்பட வேண்டும். எனக்கு பிரான்ஸில் டேபிடம் பெயர் இன்னுமிருக்கிறது'' என்றான் ராஜா.

சுவர்ணமுகி இசைந்தாள்.

''ஏதாவது ஒரு சீமையின் நாயகரிடம் உங்களைக் கொண்டு சேர்ப்பித்து விடுகிறேன். நீங்கள் யார் என்று தெரிந்தால் நிச்சயம் பாதுகாப்புக் கொடுப்பார்கள்.''

இளவரசி முகத்தை மறுப்புக்காக அசைத்தாள். ''ராஜா நீங்கள் நினைப்பது போல் நான் இளவரசி என்று எங்கும் பறைசாற்றி விட முடியாது. அதில் நிறைய ஆபத்து. நீங்கள் கூட என்னை இளவரசி என்று வெளியில் யாரிடமும் சொல்லக் கூடாது. அழைக்கவும் கூடாது.''

''அதைப் பூரணமாக உணர்கிறேன்'' என்றான் ராஜா.

''இப்போது இருக்கும் நிலையில் எந்தச் சீமை நாயக்கர் எனக்கு உதவுவார் என்று தெரியவில்லை.''

''செங்கழுநீர்ப்பட்டு நாயகர்?''

''சந்தேகம்தான்.''

''கருங்குழிப்பாலம்?''

''அதையும் சொல்வதற்கில்லை.''

''இன்னும் எத்தனையோ நாயகர்கள் இருக்கிறார்களே. காட்டூர், கோலூர், காஞ்சி, வேலூர்!''

''யார் பேரிலும் எனக்கு நம்பிக்கை விழவில்லை.''

''வேறு எந்த இடம் வேண்டுமானாலும் சொல்லுங்கள். உங்களைக் கொண்டு விடுகிறேன். உங்கள் பாதுகாப்புத்தான் முக்கியம்.''

சுவர்ணமுகி யோசித்தாள்.

''எனக்கு ஒரு வழிதான் தோன்றுகிறது. ராஜா! வெங்கடகிரிக்குப் போய்விடுகிறேன்'' என்றாள்.

ராஜா யோசித்துவிட்டு 'சரி' என்றான்.

அர்ஜுன தேவன்மனோவேகத்தில் பறக்க அவனது பல்லக்குப் படு மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது.

அருணா ஆற்றின் வட கரை வழியாகக் கடும் வெயிலில் நடக்க, எங்கும் பூமி ஒரு வெய்யில் தகடாக மாறியிருப்பதை உணர்ந்தான்.

கிராமங்களில் மிக சொல்பமானவர்களே தங்கி யிருந்தார்கள்.


நீ யார்?
சந்திரநாத்
எழுதும் மர்மத்
தொடர்கதை
21-6-81
இதழில்
ஆரம்பம்

தங்களது தானியங்கள் எங்கே பறிக்கப் படுமோ என்ற பயத்தில் அவர்கள் வெளியில் தலைகாட்டாமல் இருந்தார்கள்.

அர்ச்சன தேவனிடம் போதுமான பொன் நாணயங்கள் இருந்தன.

அதனால் மிகையான விலை கொடுத்து எதையும் அவனால் வாங்க முடிந்தது.

வழியில் சில நாழிகைகள் இளைப்பாறிய பிறகு மாலை நெருங்கும்போது அவர்கள் நாகலாபுரம் சேர்ந்தார்கள்.

ஊர் நிசப்தமாக இருந்தது.

அந்தி ஆகியும் கோவிலில் விளக்கு வைக்கவில்லை.

திருமலாம்பா வீட்டை விசாரித்துப் போகிகள் பல்லக்கை அங்கே கொண்டு போய் இறக்கினார்கள்.

விசாலமான வீடு அது.

மாடங்களும், மரவேலைப்பாடான கதவுகளும் நிறைந்தது.

இரு போகிகள் அவனைத் தூக்கி உள்ளே நடையில் இறக்கினார்கள்.

''உள்ளே யாரு?'' என்று பலமுறை வினவியவாறு அர்ச்சனன் கைகள் உதவியால் நகர்ந்து நகர்ந்து உள்ளே போனான்.

கூடம் வந்தது.

நட்ட நடுவில் சச்சவுக்க வெளிச்சம். மேலே கூரையிலிருந்து விழுவது.

அந்த மந்தார வெளிச்சத்தில் கண்களால் உற்றுப் பார்க்க அங்கே ஓரத்தில் நிழலாக ஓர் உருவம் இருப்பது தெரிந்தது.

திருமலாம்பாளின் கணவர் ராஜுவா?

''ஐயா!'' என்று அழைக்க உருவம் எழுந்தது.

மெலிந்த உருவம்.

நெருங்க நெருங்க அது சிநேக பாவத்தில் வரவில்லை என்று தெரிந்தது.

ஒரு கணம் அந்தப் பனிச் வெளிச்சத்தைக் கண்டு அர்ச்சனன் திடுக்கிட்டான்.

பளபளத்த கத்தியோடு ராஜுதான் வந்தான். ''எடு! எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டு அர்ச்சனனை நோக்கி ஓங்கிக் கத்தியைத் தூக்கினான்.

(தொடரும்)

சினிமா சிரிமா!

உங்களுக்கு வயது 21? அப்படியானால் கவனியுங்கள்! ஜூன் மாதம் முழுவதும் 21ம் பக்கம் 21 வயதுக்காரர்களுக்குச் சொந்தம்.

இந்த வயதில் சினிமா பார்க்காதவர் யார்? பார்த்துவிட்டு ஜோக் அடிக்காதவர்தான் யார்?

மே 15 தேதிக்குப் பிறகு புதிதாக ரிலீஸ் ஆன ஒரு சினிமாவை வைத்து ஜோக் எழுதி அனுப்புங்கள். பிரசுரமானால் சன்மானம் உண்டு. உறையின்மேல் ''சினிமா, சிரிமா!'' என்று குறிப்பிடவும். ஒருவர் இரண்டு ஜோக்குகளுக்கு மேல் எழுதக் கூடாது. திருப்பி அனுப்புதல், கடிதப் போக்குவரத்து இல்லை.

கட்டணம் அதிகமாயிட்டதால் எங்களுக்கு வருமானம் குறைஞ்சு போச்சு. குடும்பமே பட்டினி கிடக்கும் நிலையில் இருக்கிறோம். சார்! எங்களுக்கு ஒரு உதவி செய்யணும்! கல்லூரிக்குப் போகும் வழியில் பஸ்ஸில் கலாட்டா செய்து கண்டக்டர் டிரைவருடன் ஒரு அடிபிடி நடத்தணும். பஸ் கார்ப்பரேஷன் முழுதும் ஸ்ட்ரைக் செய்வாங்க. நாங்கள் ஒருமாத வருமானத்தை ஒரே நாளில் சம்பாதித்துவிடுவோம்.!''





மருந்தில் மாயமா?

இவ்வருடம் ஆகஸ்ட் முதல் தேதியி லிருந்து ஐந்து அடிப்படை மருந்துகள், அவற்றைத் தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் அளிக்கும் வியாபாரப் பெயரைக் கொண் டிருக்கக் கூடாது என்று அரசு அறிவித் துள்ளது.

இதனால் மருந்து உற்பத்தியாளர்களி டையே போட்டி குறைந்து, விளம்பரச் செலவுகள் குறைந்து மருந்துகளின் விலை குறையும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

இது தொடர்பாக மூன்று பேர் அபிப்பி ராயங்களைக் கேட்டபோது:

தாம்பரம் ஏ. ஜி. மருத்துவமனை தலைமை மருத்துவ ரான டாக்டர் ஏ. கஜானன் ராவ்:

பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து பெரிய கம்பெனிகள் தாங்கள் தயாரிக்கும் மருந்து களின் தரத்தை உயர்த்திக் கொண்டுள்ளன. எல்லாக் கம்பெனிகளின் மருந்தும் ஒரே தரமாக இருக்காது. இந்நிலையில் குறிப்பிட்ட நோயாளிக்குக் குறிப்பிட்ட கம்பெனி மருந்து அதிக பயனளிக்கும் என்று டாக்டர்களுக்குத் தெரியும்.

அரசாங்க மருத்துவ மனைகளில் இம்மாதிரி பிராண்ட் பெயர் இல்லாத மருந்துகள்தான் அளிக்கப்படுகின்றன. அரசாங்க மருத்துவ மனைகளில் அளிக்கப்படும் மருந்துகள் குறித்து மக்கள் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளனர் என்பது அனைவரும் அறிந் ததே.

பெரிய மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் புதிய மருந்துகளைக் கண்டு பிடிக்கவும் இருக் கிற மருந்துகளின் தரத்தை உயர்த்தவும் ஏராளமான ஆராய்ச்சிகளை நடத்துகின்றன. அரசின் இதுபோன்ற உத்தரவுகளினால் அத் தகைய ஆராய்ச்சிகளில் நாட்டம் இல்லாது போகும்.

மருத்துவர்களிடம் நோயாளிகளுக்கு நம் பிக்கை குறையும்... பலவிதக் குழப்பங்கள் ஏற்படும்.....

வியாபாரப் பெயர்களில் மருந்துகள் வருவதை மருத்துவத் துறையின் வளர்ச் சியைக் கருதி நான் ஆதரிக்கிறேன்.

திருமதி எழிசைவல்லி, எம். ஏ.

மக்கள் நலன் நாடும் எந்த அரசும் நோய் நீக்கும் மருந்துகளையும், வலிவுதரும் டானிக்கு களையும் குறைந்த விலையில் தட்டுப்பாடின்றி மக்களுக் குக் கிடைக்கச் செய்ய வேண்டும். நம் அரசு இப் போது மேற்கொண்டுள்ள நடவடிக்கை இம்முயற்சி யில் முதல் படி. சிந்தித்துப் பார்த்தால் அரசின் புதிய உத்தரவால்சில நன்மைகள் நிச்சயம் கிடைப் பது புரியும்.

அனாவசிய விளம்பரத்தில் பணம் விரய மாவது தடுக்கப்படுவதால் மருந்துகளின் விலை நிச்சயம் குறையும். பிரபலமான நிறு வனங்கள் தயாரிக்கும் மருந்துகளுக்கு இணை யாகச் சிறு கம்பெனிகள் தயாரிக்கும் மருந்து களும் விற்பனையாகி, சிறு நிறுவனங்களும் வளரும். மக்கள் டாக்டர் தரும் மருந்துச் சீட்டு இல்லாமல் மருந்து வாங்கும் பழக்கம் குறையும். அத்தியாவசியமான மருந்துகள் விஷயத்தில் நடைபெறும் ஊழல்கள் மறை யும்.

ஜி.கே மெடிகல்ஸ் உரிமையாளர் திரு ஜி. கண்மல்

மருந்துகளின் விலை யைக் கட்டுப்படுத்தும் சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருக் கிறது. மருந்துகளின் விலையைக் கட்டுப் படுத்தவேண்டுமானால் இச்சட்டத்தைக் கொண்டே அரசு செயல்படலாமே!

வியாபாரப் பெயர் களை நீக்கிவிடுவதால் மக்களுக்கு ஒருவித லாபமும் வந்து விடாது. எல்லாக் கம்பெனிமருந்துகளின் தரமும் ஒரே சீராக இருந்து விடுவதில்லை. இந்நிலையில் பலவிதக் குழப்பங்கள் விளையும். நோயாளிகளுக்குடாக் டர்களிடமும் எங்க ளைப் போன்ற மருந்து விற்பனையாளர் களிட மும் நம்பிக்கை குறைந்து போகும்.

வியாபாரப் பெய ரைப் போடாமலே வடிவத்திலும், நிறத்திலும் மாறுபாடு களைப் புகுத்திக் குறிப் பிட்ட கம்பெனிகள் தங்கள் தனித் தன் மையைவெளிப்படுத்து வதை அரசு தடை செய்ய முடியாது!

பேட்டி: நாயகன்
புகைப்படங்கள்:
மன்னை மூர்த்தி



டாக்டர் ஏ. கஜானன் ராவ்



ஜி. கண்மல்



எழிசைவல்லி, எம். ஏ

ரசிகமணி ரசித்த மணிகள்

எது நல்ல தமிழ்?



'இன்தமிழ்.', 'செந்தமிழ்', 'தீந்தமிழ்' என்றெல்லாம் நாம் நம்முடைய தமிழ் மொழியைப்பெருமையோடு அழைக்கிறோம் அல்லவா? எந்த ஒரு பண்பைக் கொண்டு இப்படிச் சொல்கிறோம்?

தமிழ் உரைநடை இலக்கியம் அந்தக் காலத்தில் இருந்ததா, நம்முடைய இலக்கியம் எல்லாம் செய்யுள்தானே என்றும் ஒரு கேள்வி இருக்கிறது அல்லவா?

தமிழ் உரைநடை பற்றி டி.கே.சி. என்ன சொல்கிறார், பார்க்கலாம்.

''தமிழ் பாஷைதோன்றிய நாளிலிருந்தே வசனம்உண்டு என்று சொல்ல வேண்டும். தமிழ் மாத்திரம் அல்ல, பேசப்படுகிற எந்தப் பாஷையிலுமே வசனம் என்பது எப்போதும் உள்ளது.

பாஷை எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. பாஷை என்றாலே மக்கள் உள்ளத்தில் நிகழ்வதை வெளிப்படுத்துவதுதான்! கோபமோ, ஆத்திரமோ, சோகமோ, கருணையோ, மனசில்உண்டானால் அதை அப்படியே வாய் திறந்து மனிதன் சொல்லி விடுகிறான். அவ்வாறு சொல்வதே வசனம்.

தமிழ் மக்கள் தங்கள் உள்ளக் கிடைகளை ஆயிரக் கணக்கான வருஷங்களாக வெளியிட்டிருக்கிறார்கள். எத்தனையோ விதத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி வெளியிடுவதிலெல்லாம் ஒரு தொடர்பு, ஒரு முறை, நாளடைவில் ஏற்பட்டுத் தமிழ் வழக்கு என்றும் ஒன்று உண்டாகியிருக்கிறது. இந்தத் தமிழ் வழக்கு என்பது தமிழ் மக்கள் நாவிலேயே இருக்கிறது. உண்மையில் தமிழ் பாஷையே ஆடவர், பெண்டிர், பிள்ளைகளான தமிழ் நாவிலே கிடப்பதுதான். நாவை விட்டு ஏடுகளில் மாத்திரம் கிடக்குமானால் அது தமிழ் அல்ல.

பாஷைகளின் அமைப்பையும் மர்மத்தையும் ஆராய்ந்தறிந்த நிபுணர்கள் ''ஒரு வார்த்தையோ முடிபோ வழக்கிழந்து விட்டது என்றால், காரியத்தைச் சாதிக்க அதனால் முடியவில்லை என்று ஆகும். ஆகவே அது ஒழிந்து போனதே நல்லது!'' என்று சொல்லி யிருக்கிறார்கள்.

இப்படித் தமிழில் எத்தனை எத்தனையோ வார்த்தைகள் வழக்கிழந்து போயிருக்கின்றன. புதிதான வார்த்தைகளும் முடிவுகளும் நெடுகிலும் பாஷைக்குள் வந்து புகுந்து தங்கியிருக்கின்றன. இருந்தாலும் இந்த மாறுபாடுகளுக்கு ஊடேயெல்லாம் தமிழ்ப் பண்பு என்ற தனித்த பண்பு ஒன்று தொடர்ந்து வந்திருக்கிறது. இந்தப் பண்பு, வழக்கில் உள்ள சொற்களில் எல்லாம், இதர பாஷைகளிலிருந்து வந்த திசைச் சொற்களில் எல்லாங்கூட ஊறிநின்று தமிழர் செவிக்குச் சுவை தந்திருக்கிறது. இந்தத் தமிழ்ப் பண்போடு கூடிய சொல்லுக்கே – பேச்சானாலும் சரி, எழுத்தானாலும் சரி – இனிமையோ வேகமோ ஏற்படக் கூடும்.

இப்படிப்பட்ட தமிழ் வசனத்தை எழுபது வருஷத்துக்கு முன்பே (டி.கே.சி. இதை எழுதியது 1937ல்) மேல் நாட்டார் ஒருவர் நன்றாகத் தெரிந்து அனுபவித்திருக்கிறார். தமிழ் அகராதிக்கெல்லாம் அதிகார கர்த்தா என்று சொல்லக் கூடிய வின்ஸ்லோ ஆசிரியர் தமது தமிழ் அகராதியின் முன்னுரையிலே தமிழ் வசனத்தைப் பற்றிச் சொல்லி வருகையில், ''தமிழின் வளத்தையும் வலிமையையும் கருதும்போது அதோடு ஒப்பிடுவதற்குத் தற்கால ஆங்கில மொழியையும் ஜெர்மன் மொழியையுமே சொல்லவேண்டும்.'' என்று அழுத்தமாகச் சொல்லுகிறார். இதைத்தான் ''பழகு தமிழ்ச் சொல்லருமை'' என்று புலவர் ஒருவர் உடல் புளகித்துச் சொல்லியிருக்கிறார்!''

தமிழ் மொழி உரைநடையின் எழிலும் மரபும் பற்றி ரசிகமணியின் இந்த வாக்கியங்களைக் கல்கியின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகிய 'கணையாழியின் கனவு'க்கு டி.கே.சி. எழுதிய முன்னுரையிலே பார்க்கலாம்.

பழகுகிற தமிழ் என்றாலே பழக்கத்திலே வழங்குகிற தமிழ் என்றுதானே பொருள்? இத்தகைய தமிழ் நடையை ரசிகமணி மிகவும் அனுபவித்தார். பாராட்டினார். இதுவே உயிருள்ள தமிழ் என்று கொண்டாடினார்.

டி.கே.சி. அடிக்கடி சொல்லுவார், பேசுவதுபோல் எழுத வேண்டும் என்று! பேசுவதுபோல் என்றால் பளிச்சென்று ஒரு கேள்வி எழுகிறது. ஜாதி, வட்டாரம், அறிவுநிலை இவற்றிலே வேறுபட்டவர்கள் வெவ்வேறு நடையிலே பேசுகிறார்களே, நாம் எந்த நடையில், யார் பேசுகிற நடையில் எழுதுவது? நியாயமான கேள்வி. டி.கே.சி. சொல்லுவது இந்த வேறுபாட்டையே அல்ல.

மீ.ப.சோமு

அல்லவே அல்ல. பேசுகிற முறை என்று ஒன்று இருக்கிறதல்லவா? நேருக்கு நேராகக் கருத்துக்களை வெளியிடுகிற உத்தி. இதைத்தான் டி.கே.சி. ''பேசுவதுபோல்'' என்று வற்புறுத்தி வந்தார். கொச்சைச் சொற்களையோ மற்ற மாறுபாடுகளையோ அல்ல.

''பேசுவது போல் எழுத வேண்டும் என்பதே என் கட்சி!'' என்று தேசிய மகாகவி பாரதியாரும் சொல்கிறார். இதன் அடிப்படைக் கருத்தும் இதுவே.

பேசுகிறது எப்படி இயல்பாகப் பேசுகிறோமோ, அப்படி இயல்பாக எழுத வேண்டும். வாசகனை எதிரே மனக் கண்ணுக்கு முன்னால் நிறுத்தி வைத்துக் கொண்டு, ஒரு நேர்முக உறவோடு அவனுடைய மனத்துள் செல்லுமாறு தெளிவாக எழுத வேண்டும். அசுத்தமான தமிழில் எழுதவேண்டும் என்பதல்ல கருத்து!

மக்களின் நாவிலே வழங்கி வழங்கி நீண்ட நாளாக ஒரு தொடர்பு, ஒரு முறை, ஒரு பண்பு தமிழுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று டி.கே.சி. குறிப்பிடுவது எதை?

ஒவ்வொரு மொழிக்கும் இருப்பது போல் தமிழ் மொழிக்கும் ஒரு தனிப் பண்பு, ஒரு தனி மணம் இருக்கிறது. இது எழுத்திலே துலங்க வேண்டும் என்று சொல்வார் டி.கே.சி. ஆங்கிலத்திலிருந்து ஒரு வாக்கியத்தைத் தமிழிலே மொழிபெயர்த்தால் கூட அந்த மொழி பெயர்ப்பில் தமிழ் மணம் இருக்க வேண்டும். ஆங்கில வாடை வீசக் கூடாது என்று அவர் அடிக்கடி சொல்லுவார்.

அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பாரதியாரும் இந்த ஆங்கில வாடையைப் பற்றி எழுதினார்:

''....பத்திரிகைகள் (மேனாடுகளில்) பல விஷயங்களையும் மொழிபெயர்த்து எழுதுகின்றன. ஆனால் அந்த மொழிபெயர்ப்பில் ஸ்வபாஷையின் வழக்கங்களையும் பிரயோகங்களையும் கைவிட்டு, அன்னிய பாஷையின் வசன நடையைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது. ஆனால் தமிழ் நாட்டிலோ முழுதும் தமிழ் நடையை விட்டு, இங்கிலீஷ் நடையில் எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது!''

பாரதியார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு ஆங்கில வாடையைக் கண்டித்ததோடு, ஆங்கிலச் சொற்களை நடுவிலே சேர்க்கிற பழக்கத்தையும் வேடிக்கை செய்து எழுதினார். டி.கே.சி.யின் கொள்கை என்ன?

ஆங்கில இலக்கிய ஆசிரியர்கள் பலரும் ''ஸ்டைல்'' என்ற தலைப்பில் ·ஆராய்ந்து எழுதியுள்ள பல ஆய்வுகளையும் ரசிகமணி நன்கு கற்றவர். திருநெல்வேலியில் அவருடைய வீட்டிலே வட்ட வடிவமான தொட்டிக்கட்டைச் சுற்றிப் பெரிய பெரிய அலமாரிகள்! அத்தனையும் ஆங்கில நூல்கள்! வெறும் அலங்காரத்துக்காக அடுக்கி வைக்கப்பட்ட புத்தகங்கள் அல்ல அவை. ஒவ்வொரு புத்தகத்தையும் திறந்து பார்த்தால் டி.கே.சி. அவற்றை ஆழ்ந்து கற்று அங்கங்கே அடிக்கோடு இட்டுள்ள பகுதிகளையும் பார்க்கலாம். சில இடங்களில் தமிழ் நூல்களிலிருந்து ஒத்துப் பார்க்க வேண்டிய மேற்கோள்களையும் குறித்திருப்பார். நாங்கள் எல்லாம் 'டெக்ஸ்ட் புக்'குகளை எடுத்துப் படிப்பதை விட, அந்த நூல்களை எடுத்துப் படிப்பதைப் பார்த்தால் மனம் பூரிப்பார். 'பலே பலே' என்று முதுகிலே தட்டிக் கொடுப்பார். பிறந்த நாள் அல்லது திருமண நாள் போன்ற கொண்டாட்டங்களில் எங்களுக்குப் பரிசு கொடுப்பார். ஆர்னல்ட் பென்னெட், ஹென்ரி வாரன், ராபர்ட் லிண்ட், லாம்ப், கார்ட்னர், செஸ்டர்டன், பெர்னார்ட் ஷா முதலிய ஆசிரியர்களின் ஆங்கில நூல்களையே வாங்கி அன்பு மொழிகளைஎழுதி வாழ்த்தோடு தருவார். வட்டத் தொட்டியிலே இளைஞராகிய எங்களுக்கு ஆங்கில சையன்ஸ் நூல்களைக் கையில் வைத்துக் கொண்டு விஞ்ஞானம் தமிழிலே சொல்லிக் கொடுப்பார். ஷேக்ஸ்பியரையும், கீட்ஸையும், ஷெல்லியையும், பைரனையும் இலக்கியக் களிப்போடு பாடம் நடத்துவார். இதையெல்லாம் எதற்காக இங்கே சொல்கிறேன் என்றால், ஆங்கிலத்தில் அத்தனை ஈடுபாடு அவருக்கு இருந்த போதிலும், தமிழ் எழுதும்போது அது தமிழாகவே இருக்க வேண்டும், தமிழ்ப் பண்போடு திகழ வேண்டும் என்று கண்டிப்போடு பேசுவார். பேரம் செய்ய மாட்டார்!


ஒரு கடிதம் பாருங்கள்:

''ஆங்கில ஆசிரியர்கள் ஸ்டைலைப் பற்றி என்ன எல்லாமோ எழுதுகிறார்கள். எழுத்தில் முக்கியமான காரியம் ஸ்டைல்தான் என்று சொல்லுவார்கள். ஆனால் அது எளிதில் அமைவதில்லை என்றும் சொல்லுவார்கள். உண்மை என்ன?

ஸ்டைல் என்பது எழுதுகிறவருக்கே தெரியாமல் அநாயாசமாய் வருவது!

நாம் தெருவிலே நடந்து போகிறோம். மிலிட்டரி மார்ச் அல்ல. இயல்பாக நடக்கிறோம். அந்த நடையில் நூற்றுக் கணக்கான அம்சங்கள் இருக்கின்றன. ஏன் இருக்காது? உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையும் எத்தனையோ எலும்புக் கட்டுகள், தசைகள், நரம்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு கணக்குப்படி ஒத்து வேலை செய்கின்றன. நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லலாம். ஆனால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் நமது நடையின் தனிப் பண்பைக்கண்டு கொள்கிறார்கள். ஆயிரம் பேர் இருந்தாலும் நம் முகத்தைப் பாராமலேயே நம்முடைய நடையை இனம் கண்டு கொள்கிறார்கள். நடந்து போவதில் எல்லாருக்கும் 'ஸ்டைல்' வந்து விடுகிறது. காரணம் என்ன? பாடமாக வைத்துப் பள்ளிக்கூடத்தில் 'நடந்துபோகக் கற்பிப்பதில்லை!

நடந்து செல்வதில் 'ஸ்டைல்' இருக்க வேண்டுமென்றால் கால் இருந்தால் போதாது. உடலுக்குள் உயிர் இருக்க வேண்டும். அது போல எழுத்தில் ஸ்டைல் இருக்க வேண்டும் என்றால் வார்த்தைகள் இருந்தால் போதாது. உள்ளத்தில் உயிர், அதாவது உண்மை உணர்ச்சி இருக்க வேண்டும்.''



● கண்ணீரை மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு இதை எழுதுகிறேன். பக்கத்துக்குப் பக்கம் கல்கியில் பெரியவாளின் திருவுருவப் படத்தையும், அருள்மொழிகளையும், அடியார்களது அனுபவங்களையும் மிகச் சிரத்தையுடன் அச்சிட்டு, இவ்விதழைக் கிடைத்தற்கரிய பொக்கிஷமாக்கி விட்டீர்கள். ''மனத்தைத் தொடுகிறது'' ''உருக்குகிறது'' ''பரவசமாக்குகிறது'' போன்ற சம்பிரதாய வார்த்தைகளின் அர்த்தத்தை யெல்லாம் கடந்து, பேச்சும், வார்த்தையும் அவசியமில்லாத ஒரு உன்னத நிலையில் நம்மைச் சில கணங்களேனும் நிறுத்தி வைத்துவிடுகிற மகா சக்தியாகத் திகழ்கிறது இவ்விதழ். கடவுளின் பிரசன்னத்தை எங்கெல்லாமோ தேடி அலைபவர்களுக்கு ''இதோ இங்கேதான்'' என்று அறுதியிட்டு அருள் பாலிப்பதாக இருக்கிறது: நொந்த உள்ளங்களை அன்புடன் வருடி, அஞ்சேல் என்று அபயமளிக்கிறது: பிடிப்பில்லாமல் எதையுமே சந்தேகத்துடனும், அசுவாரஸ்யத்துடனும் நோக்கும் குழப்ப மனங்களுக்குத் தெளிவைக் காட்டுகிறது: அகங்காரத்தைப் பொடியாக்கி எளிமையான கண்ணீரால் மனத்தைக் கழுவிக் கொள்ளச் செய்கிறது. இவ்வேளை கல்யாண வேளை, தெய்வத் தருணம்; நைந்த உள்ளங்களுக்கு மஹா சஞ்சீவி.

தூத்துக்குடி பொன்னித்துறைவன்

● 'பெரியவாளுடன் ஒரு நாள்' நாயகனின் கட்டுரை நம்மையும் பெரியவாள் சந்நிதிக்கே அழைத்துச் சென்றது. நடுப் பக்கத்தில் வெளியான அத்தனை புகைப்படங்களும் நம்மோடு பேசுவதைப் போல் இருந்தன. கரியப்பா சொன்ன மாதிரி நம்மை அறியாமலே கண்ணில் ஜலத்தை வரவழைத்துவிட்டன.

[redacted]

ளாகவே பதித்துக் கொண்டேன். இளைஞர்கள் கடைப்பிடித்தால் வாழ்வில் மிக உயர்ந்த நிலையில் இருப்பார்கள்.

பாண்டமங்கலம் பூவை. கே. சந்திரன்

● இந்திரா காந்தியின் அரசாங்கம் மிருதுவான கு. க. திட்டத்தைக் கரடு முரடாக்கியது. ஆசிரியர்களும், அதிகாரிகளும் கு.க.வுக்கு ஆள் பிடிக்க வீதி வீதியாய் அலைய வேண்டியதாயிற்று. கு. க. திட்டம் தோல்வியடைந்தது என்றால் இந்திரா அரசாங்கம் கையாண்ட விதம்தான் முழுக் காரணம்.

சிதம்பரம் சிவ. ராஜகுமார்

● தாய்க் குலத்தின் தவிப்பை நன்றாகவே படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள். அவ்வப்பொழுது அவசியமான தலையங்கத்தைத் தரும் கல்கியை நினைக்கும்போது உள்ளம் பூரிக்கிறது. மிகவும் பயனுள்ள தலையங்கம்.

திருவையாறு ச. புகழேந்தி

● என்ன மிஸ்டர் விமர்சகரே, நானும் தெரியாமல்தான் கேட்கிறேன். இது என்னய்யா தில்லு முல்லு? படத்தின் கதா நாயகியாகச் சிறப்பாக நடித்த மாதவியைப் பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவில்லையே!

நங்கைநல்லூர் கி. சங்கர்

● என்ன மிஸ்டர் குட்டி கிருஷ்ணன், புல்லரிக்கச் செய்து விட்டீர்கள் போங்கள்.

சென்னை-14 வி. ஷோபனு

● 10–5–81 கல்கியில் ''நொறுக்குத் தீனி'' என்ற தலைப்பில் திரு பிரபுசங்கர் சில தவறான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

தயாரிப்பாளர் கலைஞர்களுக்கு அளித்த கேடயங்கள் ஒவ்வொன்றையும் திரு வெங்கட்ராமன் என் கைகளில் தர, அவற்றை நானேதான் டைரக்டர் கே. பாலசந்தர், திரு கமலஹாசன், செல்வி ஸ்ரீதேவி, மற்ற கலைஞர்கள் அனைவருக்கும் கொடுத்தேன்.

அதன் பிறகு படத்தின் பல்வேறு விநியோகஸ்தர்கள் தமக்குள் பரிசுகளைப் பரிமாறிக் கொண்டார்கள். சிலர் தயாரிப்பாளருக்கும், இயக்குனருக்கும் பரிசு கொடுத்தார்கள். அப்போதுதான் பிரபுசங்கர் குறிப்பிட்டவாறு நடந்தது. நான் மேடையில் என் இருக்கையில் போய் அமர்ந்தேன். உடனே எழுந்து வரும்படி தயாரிப்பாளர் வற்புறுத்தவே, மீண்டும் எழுந்து நின்று மற்ற பரிசுகளை நானே வழங்கினேன்.

பரிசளிப்புக்கு முன்னதாகவே முக்கிய பிரமுகர்களின் சொற்பொழிவுகள் முடிந்து விட்டன. [redacted]

அசல் க்ளூகோன்-டி ®
ஒன்றே ஒன்று தான் உண்டு.
அதனைத் தயாரிப்போர் க்ளாக்ஸோ.

வழக்கமான பச்சை
உறையின் மேலே
வெள்ளையில் அச்சிட்ட
க்ளூகோன்-டி® பெயர்
இருக்கிறதா பாருங்கள்.



மட்டமான போலிகள் பலவற்றுள், க்ளாக்ஸோ நிறுவனத் தயாரிப்பான அசல் க்ளுகோன்-டி யினை நீங்கள் வாங்குவது முக்கியம். இல்லையெனில், போலிகள் மூலம் உங்கள் குடும்ப உடல்நலத்திற்கே பேராபத்து வரலாம்.
க்ளாக்ஸோ நிறுவனத்தின், முற்றிலும் நம்பிக்கைக்குரிய தயாரிப்பாகும் க்ளுகோன்-டி; வைட்டமின் D_3, பாஸ்பரஸ், கால்ஷியம் ஆகியன செறிந்த தூய க்ளுகோஸ் பவுடர் அடங்கியது. தங்களுக்குத் தேவையான போது சக்திபெற லட்சக் கணக்கானோர் அருந்துவது இது.
க்ளுகோன்-டி தயாரிப்போர், க்ளாக்ஸோ — பலவகை உணவுப் பண்டங்களுக்கும், உயிர்காக்கும் மருந்துகளுக்கும் புகழ்பெற்ற நிறுவனம். வாங்கும் க்ளுகோன்-டி பேக்கெட் அசல்தானு எனப் பார்த்து வாங்குங்கள்.

க்ளூகோன்-டி ®
சக்தியை மீட்டுத்தர நம்பகமானது.
க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது.

® டிரேட்மார்க்

HTB-GA1-7027-TL

கல்கி

சந்தா விவரம்

★

மானேஜர்

கல்கி

கிண்டி, சென்னை - 600032

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 60	ரூ. 30
இலங்கை	ரூ. 70	ரூ. 35
இதர வெளிநாடுகள்	ரூ. 110	ரூ. 55

பட்டு மாமாவும் 'குட்டி' மாலுவும்

ஆதவன்

விடுமுறைக்குப் பெங்களூர் போகப் போகிறோம் என்று குட்டி என்கிற மாலுவுக்கு ஒரே குஷியாக இருந்தது. பட்டு மாமாவை வம்புக்கிழுக்கலாம்!

ஏதோ, இந்தத் தடவையாவது அப்பாவுக்கு மனம் வந்தது, அவர்களைப் பெங்களூர் கூட்டிப் போவதற்கு. சாதாரணமாய் அவர்களுடைய வருடாந்தரப் பயணம் திருநெல்வேலியருகே இருந்த அவருடைய சொந்த ஊருக்குத்தான். அங்கேதான் பெரியப்பா— அப்பாவின் அண்ணா — இருந்தார். அங்கே போகத்தான் அப்பாவுடைய ஆபிஸில் பயணச் செலவு தருவார்கள். ரயில் அங்கே நெருங்க நெருங்கச் சுற்றிலும் தென்படும் பனங்காடுகள், மாந்தோப்புகள், வாழைக் கொல்லைகள் இவற்றின் பசுமையை எடுத்துக்காட்டும் மண்ணின் செம்பட்டை நிறம், எல்லாவற்றையும் பார்த்து முதலில் அவளுக்கு ஒரே உற்சாகமாகத்தான் இருந்தது. ஆனால் கிராமத்தில் ஒரு வாரம் இருந்தபோது எப்போதடா டில்லிக்குத் திரும்புவோமென்று ஆகிவிடும். பெரியப்பா தனக்குத் தெரிந்த சுமார் ஒரு டஜன் நெல்லை பிராண்ட் கதைகளைத் திருப்பித் திருப்பிச் சொல்லி 'போர்' அடிப்பார். பெரியம்மா காலை முதல் இரவு வரையில் வீட்டுக் காரியங்களிலேயே பிஸியாக இருப்பாள். பெரியப்பாவின் ஒரே பிள்ளையான தண்டுவுக்கோ, அவளைப் பார்த்து ஒரே 'இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்'.

சீண்டி மகிழ்வதற்கேற்ற ஒரு அசடு, தண்டு. ஆனால் அவளுக்கு வேண்டியிருந்தது தான் கேலி செய்யக் கூடிய ஒருவனில்லை. தன்னைக் கேலி செய்யக் கூடிய, அதை நளினமாகச் செய்யத் தெரிந்த ஒருவன். இந்தத் தேவையை அழகாகப் பூர்த்தி செய்தவன் பட்டு மாமாதான். தண்டபாணி மருவி 'தண்டு' ஆனதைப் போல, பட்டாபி 'பட்டு' ஆகியிருந்தது. அவளை வீட்டில் கூப்பிடும் பெயரான 'குட்டி' கூட அவன் சூட்டினதுதானாம், அவள் சின்னவளாயிருந்த போது — வீட்டிலிருப்பவர்கள் கூறும் வரலாறு!

நாலு வருடங்களுக்கு முன்பு வரையிலும் பட்டு மாமாவுக்கு டில்லியிலேதான் வேலை. அவர்கள் வீட்டிலேதான் வாசம். அதாவது அவளுக்கு ஒன்பது வயதாகும் வரையில். இங்கு அவன் இருந்த நாட்களிலெல்லாம் அவனுடைய ஒய்வு நேரப் பொழுதுபோக்கு அவளைச் சீண்டியவாறிருப்பதுதான்! அப்போதுதான் அரும்பத் தொடங்கியிருந்த அவளுடைய சந்தேகம் நிறைந்த தனித்துவத்தை, முழு நிச்சயமற்ற தோரணைகளை, தன் கிண்டல்களால் இடறி, விழச் செய்தவாறிருப்பதில் அவனுக்கொரு உற்சாகம். அவளுடைய உடை, பேச்சு, சிரிப்பு, அழுகை, வெட்கம், கோபம் — எதுவும் அவனுடைய கிண்டலுக்குத் தப்பாது. ''பாரும்மா இந்த மாமாவை!'' என்ற அவளுடைய புகார்க் குரல் சதா வீட்டில் ஒலித்த வண்ணம் இருக்கும். உண்மையில் அது புகாரே அல்ல. ஒரு செல்லமான சிணுங்கல், அவனுடைய சீண்டலின் திருப்தியான அங்கீகாரம். இருவரும் காரம்ஸ், ஸ்கிராபிள், ரம்மி, டேபிள் டென்னிஸ் என்று வீட்டுக்குள் விளையாடும் விளையாட்டுகள் அனைத்தும் விளையாடுவார்கள். எது விளையாடினாலும் தான் அவளைவிடத் திறமைசாலி, புத்திசாலி என ஒவ்வொரு கட்டத்திலும் பட்டு மாமா நிலைநாட்டியபடி இருப்பான். தன் வெற்றி எக்காளங்களால் அவளை அழ வைப்பான். அந்த அழுகைதான் அவளுக்கு வேண்டியிருந்தது போலும், இல்லாவிட்டால் ஏன் மீண்டும் மீண்டும் அவனுடன் விளையாடச் சென்றாள்?

அவளுடைய பெற்றோர், குழந்தை என்று காட்டுகிற பரிவும் சலுகைகளும் அவர்கள் மேல் வெறுப்பாகவும் ஆத்திரமாகவும் வெடிக்க, பட்டு மாமாவின் முரட்டுத்



தனமான உதாசீனம்தான் அவளுக்கு உவப்பாக இருந்தது. சரி; அப்பாவும் அம்மாவும் தனக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் தன் கருத்துக்களுடன் மாறுபட்டால் உடனே அவர்கள் மீது ஆசை தோன்றிற்று என்றும் அதுவுமில்லை. அவளுடைய விருப்பு வெறுப்பு வேண்டும் வேண்டாம்களை விமரிசித்து, அவர்கள் ஒரு வார்த்தை சொன்னாலும், 'மூணுக்'கென்று கோபம் வந்துவிடும். கமல ஹாஸனின் நடிப்புத் திறனையோ, லதாவின் குரலினிமையையோ அப்பா கிண்டல் செய்து ஒதுக்கினால் இத்தகைய ரசனையற்றவர்களுடன் ஒரே கூரையின் கீழ் வாழ வேண்டி வந்து விட்ட தன் மட்டமான தலைவிதியை நினைத்துத் துக்கம் நெஞ்சை அடைக்கும்.

ஆனால் அதே கமலஹாஸனையோ லதாவையோ பட்டு மாமா விமரிசித்தானானால் அவளுக்கு ஏற்படுவது வேதனை இல்லை ஒருவகைச் சிலிர்ப்புத்தான். அவனுடைய இகழ்ச்சி உறுத்தவும் செய்யும், அதே சமயத்தில் அது ஒரு மென்மையான கிச்சு கிச்சு மூட்டலாகவும் தோன்றி ஓர் இன்பப் புல்லரிப்பை ஏற்படுத்தும்....

ஏன் என்று புரியாவிட்டாலும், இந்த இன்பம் தனக்கு வேண்டித்தான் இருந்தது என்பது நிச்சயம் புரிந்தது.

பட்டு மாமாவைப் பார்க்கப் போவதில் அவள் உற்சாகமாக இருந்த இன்னொரு காரணம்இப்போது அவர் தனியாக இல்லை,ஜோடி சேர்த்துக் கொண்டிருக்கிறார் என்பது.ஆமாம் ஆறு மாதங்களுக்கு முன்புதான் மாமாவுக்குக் கல்யாணமாயிற்று. அப்பாவுக்கு அப்போது உடம்பு சரியில்லாததால் அவர்கள் யாரும் கல்யாணத்துக்குப் போக முடியாமலாயிற்று. அதற்குப் பிராயச்சித்தமாகத்தான் (உடம்புக்கு வந்தது அவருடைய தவறில்லையென்ற போதிலும்) அப்பா இப்போது எல்லாரையும் பெங்களூர் கூட்டிப் போகிறார்...

ரயிலில் போகும்போதே அவள் மனத்தில் ஏதேதோ கற்பனைகள்; மாமாவைத் தன் சேட்டைகள், குறும்புகளால் படாத பாடு படுத்தப் போகும் கற்பனைகள். கல்யாணமாகிவிட்ட மாமாவைக் கேலி செய்ய நிச்சயம் தனக்கு நிறையப் பாய்ண்டுகள் கிடைக்கப் போகின்றன. இந்தத் தடவை வெற்றி தனக்குத்தான். மாமியை மெல்லத் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டு விட வேண்டும். பிறகு இருவருமாகச் சேர்ந்து மாமாவை நன்றாக அழ வைக்கலாம். மாமிக்கு இதற்குள்ளாக மாமாவின் பலவீனமான அம்சங்கள் தெரிந்து போயிருக்கும். அவளுடைய அறிவுடன் தன் அறிவும் கைகோத்துக்கொள்ளும்போது மாமா இணைநப்போவது நிச்சயம்! மேலும் மாமி மாமாவை விட ஒன்பது வயது இளையவளாமே... எனவே அவரை விட அவள் என் டீன் ஏஜ் குரூப்புக்கு நெருங்கினவளாயிருப்பாள். இருவருமாக மாமாவின்ரசனை, பழக்க வழக்கங்கள், தோரணைகள் எல்லாவற்றின் மீதும் இளமை என்னும் வலுவான பீரங்கி மூலம் குண்டு மாரி பொழிந்து மாமாவுக்குத் தாத்தா பட்டம் கட்டி மூலையில் உட்கார வைத்துவிடலாம். ஓ. ஓ. தாத்தா மாமா!

இல்லையில்லை. மாமாத் தாத்தா!

● ● ●

பெங்களூர் ஸ்டேஷனுக்குள் ரயில் நுழையும்போதே அவள் கண்கள் ஜன்னல் வழியே பிளாட்பாரத்தைத் துழாவின, மாமாவுக்காக.....


அதோ, அங்கே நிற்கிறானே! பக்கத்தில் நிற்பதுதான் மாமியா? ஜோராயிருக்கிறாளே!

அவனும் அவளைக் கவனித்து விட்டான். கையை உயர்த்தி ஆட்டியவாறு ரயிலுடனே ஓடிவந்தான். அட, மாமாவா இத்தனை இங்கிதமாகவும், பண்பாகவும் நடந்து கொள்வது, என்று அவளுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. மாமி நன்றாக டிரெயின் செய்திருக்கிறாள் போலும்....

பெட்டியின் வாயிலருகே போய் நின்று கொண்டு ரயில் நின்றதும் மாலுதான் முதலாவதாக பிளாட்பாரத்தில் குதித்தாள். எதிரே வந்த மாமாவை முகம் மலரப் பார்க்க, அவன் அடையாளம் புரியாதவன் போலக் கண்களைச் சுருக்கிக் கொண்டு அவளை மேலும் கீழுமாகப் பார்த்தவாறு, "யாரு மாலுவா? மிக்கி மௌஸ் மேடமா இவ்வளவு 'ஸ்மார்ட்'டாக ஆகியிருக்கிறது? நம்பவே முடியல்லியே!" என்றான். அவள் உடனே முகத்தை வலித்து அவனுக்கு அழகு காட்ட, "ஆங்! இப்போதுதான் அடையாளம் தெரிந்தது" என்று அவன் குறும்பாய்ச் சிரிக்க அவள் பொய்க் கோபத்துடன் அவனை அடிப்பதற்குக் கையை ஓங்க—

சட்டென்று மாமி அவர்களருகே நெருங்கி விட்டதை அவள் கவனித்தாள். அடிக்க ஓங்கிய கை அவசரமாகப் பின் வாங்கியது. பட்டு மாமா இருவரையும் அறிமுகம் செய்து வைத்தான். இல்லையில்லை வைத்தார். மனமே, இனிமேல் மாமாவை அவன் இவன் என்று சொல்லாதே.

"பயணமெல்லாம் சுகமாக இருந்ததா?" என்று மாமி விசாரிக்க, வெய்யில் தாளவில்லை என்று அவள் பெருமூச்சு விட, இந்தப் பெருமூச்சில், ஒருவர் பின் ஒருவராக அவளுடைய அப்பாவும், அம்மாவும் பிறகு தம்பி ராஜுவும் கூட, வந்து கலந்து கொண்டார்கள். (அவனுக்கு இப்பொழுதே தான் ரொம்பப் பெரிய மனுஷனென்று எண்ணம், பெரியவர்களுடைய சம்பாஷணைகளிலெல்லாம் அவனுக்கும் மூக்கை நுழைத்தாக வேண்டும்...)


"என்னய்யா அறுவை ஜோக் அடிக்கிறே. யாராவது கேட்டால் சிரிக்கப்போறாங்க!" -சர்மா



''மாப்பிள்ளை ஏன் எப்போதும் ஒரு கையை உயர்த்திய படியே இருக்கார்?''

'''மோதிரம் கொஞ்சம் லூசா இருக்கு ஜாக்கிரதை'ன்னு தெரியாத்தனமா சொல்லித் தொலைச்சிட்டேன்!''

அ. இராமதாஸ்

மாமா வியப்பும் பெருமிதமும் முகத்தில் கூத்தாட, அப்பாவுடனும், அம்மாவுடனும் பேசிக் கொண்டிருந்த மாமியையே கண் கொட்டாமல் பார்த்தபடி நின்றார். மாமியின் ஒவ்வொரு அசைவையும், பாவனையையும் அவருடைய கண்கள் கடித்துச் சாப்பிட்டு விடப் போவது போலக் குதறிய விதம் ஓ காட்! இந்த மாமாவுடைய அல்டாப்பெல்லாம் இவ்வளவுதானா கடைசியில்?

இடீரென்று மாமி ஏதோ 'ஜோக்' அடிக்க மாமா அதற்கென்றே காத்திருந்தவர் போல் 'ஹோ ஹோ.... ஹஹா' என்று உடலெல்லாம் குலுங்கச் சிரிக்க...

சீ! அசிங்கம்! அவனுடைய ஆட்சேபனை அந்தச் சிரிப்பைப் பற்றினது கூட அல்ல (அதுவும் வில்லியாகத்தான் இருந்தது என்பது வேறு விஷயம்) அத்தகைய ஒரு மட்டமான ஜோக்குக்கு மாமா சிரித்தாரே என்பதுதான். ஓ மாமா! உன் கூரிய ரசனையெல்லாம் என்ன ஆயிற்று?

ஹூம்! இந்த உலகத்தில் நீதி இல்லை, இல்லவே இல்லை. ஸ்டேஷனிலிருந்து காருக்குள் பிரவேசிக்கும் முன்பே அவனுக்குப் பெங்களூர் கசக்கத் தொடங்கி விட்டது... டாக்ஸியில் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

''என்ன ஆச்சுடி? ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?'' என்று அம்மா விசாரித்தாள்.

''ஒண்ணுமில்லே; தலை வலி.''

''பசிதான்'' என்றாள் அம்மா. ''மத்தியானம்கூடச் சரியாகவே சாப்பிடலையே!''

மாமி உடனே அவனை ஆதரவுடன் பார்த்துச் சிரித்தாள். ஒரு குழந்தையைப் பார்த்துச் சிரிப்பது போல.... அவனுக்கு எரிச்சலாயிருந்தது. யாரிடமிருந்து அவன் அனுதாபத்தை எதிர்பார்த்தானோ அவர்— மாமா — இதெல்லாம் காதில் விழாதவராக முன் ஸீட்டில் ராஜூவுடன் ஏதோ சளசளத்துக் கொண்டிருந்தார். 'ஆமாம்!' என்று அவன் எரிச்சலுடன் நினைத்துக்கொண்டான். 'அவன்தானே குழந்தை? அவனைத்தானே இனி வேஷங்களால் ஏமாற்றமுடியும்?'

''வீட்டுக்குப் போன உடனேயேசாப்பிட்டுடலாம்...'' என்றாள் மாமி, மறுபடியும் மாதுவைப் பார்த்து. ''பீன்ஸ் கறியும் வெள்ளரிக்காய் பச்சடியும் வெச்சிருக்கேன்..இரண்டும் உனக்குப் பிடிக்குமாமே!''

ஓகோ! எனக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்றெல்லாம் வேறு இவளிடம் சொல்லியாச்சாக்கும்... மாதுவுக்குள் ஆத்திரம் குமுறியது. ஆமாம்; அவனை ஒரு குழந்தையாக, உப்புக்குச் சப்பாணியாக மாற்றியாகிறது. அப்போது மாமா அவனைப் பற்றி எவ்விதத் தப்பபிப்பிராயமும் உருவாகாமல் யாரிடம் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் பேசலாம். என்ன சௌகரியம்!

'கயவா! மோசக்காரா!' என்று சினிமா பாணியில் கூறியவாறு மாமாவின் தலையில் இங்கிருந்தபடியே ஓங்கி ஒரு தட்டுத் தட்டினால் என்ன?

அவன் வீணை வாசிப்பது பற்றி, ஓவியம் வரைவது பற்றி... எல்லாவற்றையும் பற்றி வீடு போய்ச் சேருவதற்குள் கேட்டுவிட்டான். ஆமாம்; அவள் பெரியவள் இல்லை, பொருமைப்பட லாயக்கானவள் இல்லை. அவனுடைய திறமைகளை மாமா மாமியிடம் சகஜமாய்ச் சொல்லுவார், மாமி நிதானமாக ஏற்றுக் கொள்வாள். இருவரும் கைகோத்துக் கொண்டு அவனுக்கு சபாஷும் ஆசியும் வழங்குவார்கள்.

குழந்தைக்கு பெப்பர்மின்ட் வழங்குவது போல.

வீட்டில் போய் இறங்கும்போது அவனுடைய ஆத்திரம் கொதி நிலையை எட்டிவிட்டிருந்தது. அம்மா சாப்பிடக் கூப்பிட்டபோது பட்டென்று வெடித்தது.

''நான் சாப்பிடப் போறதில்லே'' என்றான் வெறுப்புடன். இந்த இவள் பண்ணின பீன்ஸ் கறியும், வெள்ளரிப் பச்சடியும் எனக்கு வேண்டியதில்லை.

''சாப்பிடாம?'' என்றாள் அம்மா.

''எனக்கு இப்ப வேண்டியிருக்கலே. தூங்கினாப் போதும் எனக்கு.''

''வெறும் வயித்திலேயா? கொஞ்சமாச் சாப்பிடேன்.''

''வேண்டாம், வேண்டாம், வேண்டாம்!''

''என்ன ஆச்சு உனக்கு?''

''ஒண்ணும் ஆகலே.''

''மோருஞ் சாதமாவது சாப்பிடேண்டி!''

''ஐயோ! என்னைச் சும்மா விடேன்!'' என்ற கூச்சல் அப்பாவை அங்கே ஈர்த்தது. ''அவனுக்கு வேண்டாம்னு விடேன்'' என்று அவர் தர்க்கத்துக்கு முற்றுப்புள்ளியிட்டார்.

அவனுக்கு அப்பாவை இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது! இனி விடுமுறையின் இறுதிவரை தன் தோழர் அப்பாதான் என அவன் முடிவு செய்தான். இதற்கு இவ்வளவு தூரம் வந்திருக்க வேண்டாம்தான். ஆனால்—

என்ன செய்வது; இங்கே வந்துதானே தெரிந்தது. அவன் இப்போது மாமாவின் குட்டி அல்ல, அப்பாவின் குட்டிதான் என்று!



1 ரூபாய்க்கு 10*

* அதிகபட்ச விலை, தலவரிகளைப் பொறுத்தது.

சட்டபூர்வமான எச்சரிக்கை: சிகரெட் குடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது

STATUTORY WARNING CIGARETTE SMOKING IS INJURIOUS TO HEALTH

CASVS-238-203 TAM

பிரதான டீலர் : மெஸர்ஸ் சோளீஸ்வரர் & கோ., காரைக்குடி – 623 001

ஒரு ரசிகனின் ரசிகை!

பட்டுக்கோட்டை பிரபாகர்

அவனுக்கு நண்பர்களென்று யாருமில்லை. ஆனால் தினமும் வீட்டை விட்டுக் கிளம்பினால் திரும்பி வர நேரமாகும்.

மேட்டுத் தெருவில் நடந்து, ஆற்றுப்பாலம் ஏறி, இறங்கி... ஊருக்கு ரொம்பத் தள்ளி வந்து அந்தச்சாலையோரப் புளிய மரத்தடியில் அமர்வான்.

வயல்களின் பச்சையை ரசிப்பான்.

மணலில் முக்கோணம் போடுவான்.

மரத்தின் குருவிகள் என்ன பேசிக்கொள்ளும் என்று யோசிப்பான்.

மாலை வானம் ஏன் வெட்கப்பட்டுச் சிவக்கிறது என்று சிந்திப்பான்.

மழை வந்தால், மக்கள் ஏன் கதவுகளை, ஜன்னல்களைச் சாத்துகிறார்கள் என்று கோபிப்பான். மழை பெய்யும்போது வீட்டை விட்டு வெளியே வந்து கைகளை மடக்கிக் கட்டிக் கொண்டு மழையில் சிலிர்க்க நனைவான்.

அவன் கவிதை எழுதுவான்.

நன்றாகவே எழுதுவான்.

—'கவிதை எழுத
காகிதம் எடுத்தேன்
கடைக்குட்டி
கப்பல் கேட்டான்
கவிதை கப்பலானது
கப்பல் மூழ்கிப் போனது'—

அவன் கவிதைகள் நீங்கள் அதிகம் கேள்விப் பட்டிருக்காத இலக்கியப் பத்திரிகைகளில் வரும். நிறையவே வரும்.

ஊரெல்லாம் அவனைப் பாராட்டும்.

வீட்டுக்குள்ளே வெடிப்பாள் தாய்.

''உருப்பட மாட்டேடா நீ! பத்தும், பதினைஞ்சும் வருது. இதை வச்சு பங்களா கட்டு. பெருசா எழுதறானும் கவிதை! சினிமாவுக்குப் போஸ்டர் ஒட்டறவன் உனக்கு அதிகமாச் சம்பாதிக்கிறான்.''

''லாப, நஷ்டக் கணக்குப் பார்த்து நான் எழுதலேம்மா. என் எண்ணங்களை எழுத்திலே வடிக்கிறேன். வடிக்கிறேன். இந்தத் தொகை கூட வரலேன்னாலும் நான் எழுது வேம்மா'' என்று சொல்ல நினைப்பான். சொல்ல மாட்டான்.

பொதுவாக அவன் பேசுவது குறைவு.

அமைதியாய் ரசத்தில் காரமில்லா விட்டாலும், மோருக்கு உப்புப் பத்தாவிட்டாலும் விக்கினால், தண்ணீர் கேட்காமலும் சாப்பிட்டுவிட்டு எழுந்து விடுவான்.

பக்கத்து வீட்டுக்காரர் இவனிடம் எப்போதாவது, ''பல்பொடி தீந்துடிச்சி. கொஞ்சம் தாங்க. நாளைக்குத் தர்றேன்'' என்பான்.

''என் கவிதைகள் படிச்சிருக்கீங்களா?'' என்பான் கொடுத்துக் கொண்டு.

''அட! போங்க தம்பி. உருப்படியா ஏதாச்சும் செய்யுங்க.''

அதன் பிறகு இவன் பற்பொடி தருவதில்லை.

இளங்கோ அவன் பெயர். பி.ஏ. லிட்ரட்சர் முடித்து வழக்கமான இளைஞர்கள் போல் பயோ-டேடா எழுதி, போஸ்டல் ஆர்டர் இணைத்து, ஸ்டாம்ப் ஒட்டி...



அக்னுலெட்ஜ்மெண்ட் கார்ட் கூட வருவதில்லே.

எந்தப் பரீட்சையில் என்ன கேட்பார்கள் எந்த இண்டர்வ்யூவ்லே என்ன கேட்பார்கள் என்பது துல்லியமாக அவனுக்குத் தெரியும்.

அவனுக்கு விடை தெரியாத ஒரே கேள்வி..

'எப்போ வேலே வரும்?'

இளங்கோவுக்கு எல்லோர்மீதும் வெறுப்பு. யாருமே அவனைப் புரிந்து கொள்ள இயலாதவர்களாக இருப்பதில் கோபம். அவன் உணர்ச்சிகளை மதிக்கத் தவறுவதற்காக வேகம்.

அவனை ஓரளவு புரிந்துகொள்ள முயன்றவன் ராகவன்.

''இளங்கோ, நீ மற்றவங்க கிட்டேர்ந்து நிறைய மாறுபடறே. ஐ லைக் இட். இயற்கையை ரசிக்கிறே. எல்லாராலேயும் ரசிக்க முடியாது. வித்தியாசமாக நினைச்சுப் பார்க்க முடியாது. நினைச்சுப் பார்க்கிறதை வெளிப்படுத்த முடியாது. உன் கவிதைகள் சிம்ப்ளி சுபர்ப்.''

''தாங்க்யூ ராகவன். என்னை என்க்ரேஜ் பண்ணிப் பேசிய ஒரே ஜீவன் நீதான்.''

அதன் பின் அவர்கள் இருவரும் தினம் காலே விடியல்பொழுதில் பேசிக்கொண்டே நடப்பார்கள். ரசிப்பார்கள்.

மகிழ்ச்சியோ, துக்கமோ அதிக நாட்கள் நிலேத்தால் ஆண்டவனுக்குப் பிடிப்பதில்லே.

அன்று ராகவன் சைக்கிளில் பக்கத்தூர் சென்று, திரும்பி வரும்போது விசிலடித்துக் கொண்டே ஓட்டி எதிரே வந்த லாரியில் மோதி....

இளங்கோ சத்தமாய் அழுதான்.

'இனி யாரிடம் நான் பேசுவேன் ராகவ்? என் ரசனைகளைப் பகிர்ந்து கொள்வேன்? யாரால் புரிந்து கொள்ள முடியும்? உன் ஒருவனால்தானே வழியும் முன் கண்களைத் துடைக்க இயலும்?'

மறுபடி தன் பழைய தனிமை உலகத்துக்குச் சென்றுவிட்டான் இளங்கோ.

அந்த நாள் அவனுக்கு நல்ல செய்தி கொண்டு வந்தது.

உடைத்துப் பிரித்த கடிதத்தில், உருப்படாதவன் என்ற பட்டத்தைத் துடைக்கும் உத்தியோகம் வந்திருந்தது.

பெங்களூர், தனியார்நிறுவனம். கிளார்க். 550 ரூபாய் சம்பளம். இரண்டு தினங்களில் சேர வேண்டும்.

இளங்கோ முதன் முறையாகச் சந்தோஷப்பட்டான்.

அப்பாடா. இனி பணக் கவலே இடையாது. ஊருக்கு அனுப்பியது போகக் கொஞ்சம் புத்தகம் வாங்கலாம். நிறையப் படிக்கலாம். பெரிய ஊர். நிறைய மனிதர்கள். நிறையப் பேசலாம், பழகலாம்.

புறப்பட்டான்.

சேஷாத்ரி ரோட்டில் ரேஸ் கோர்ஸுக்குப் பக்கமாய் இருந்தது ஆஃபீஸ். ஹோட்டலில் குளித்து, கும்பிட்டு, ஷூ வாங்கி அணிந்து கொண்டு சென்றான்.

ஹலோ...ஹலோ...ஹலோ....

வரிசையாய் ஏழு நாற்காலிகள். ஐந்தாவது அவனுடையது. தலேக்கு மேல் ஒரு பழைய ஃபேன். நான் ஓடுவேன். ஆனால் காற்றுத் தரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்க... மேஜை மேல் உலகத்து அத்தனை நிற இங்க்களும் சொட்டி மாடர்ன் ஆர்ட். ஒரு அழுக்கு அலுவலகம். ஆனாலும் புத்துணர்ச்சியாய் இருந்தான்.

லஞ்ச் இண்டர்வெல்.

''மிஸ்டர் சங்கரன், காண்டீன் இருக்கா?''

''அத்தனை பெரிய ஆஃபீஸ் இல்லே இது. பக்கத்திலே ஹோட்டல் இருக்கு. நான் அங்கேதான் போறேன். வாங்க.''

''சங்கரன் உங்களுக்குத் திருமணம்...?''

''ரெண்டு தடவை. மொத மனைவி செத்துட்டா. மூணு வருஷம் கழிச்சு ரெண்டாவது கல்யாணம்.''

''ஸாரி.''

''எதுக்கு ஸாரி. வேகமாக வாங்க. மழை வருது.''

''எனக்கு மழைன்னு ரொம்பப்பிடிக்கும்!''

சங்கரன் திரும்பி ஒரு மாதிரியாகப் பார்த்தான். ஹோட்டல் வர... உள்ளே சென்று அமர்ந்து ஆர்டர் செய்து, காத்திருந்து...

''நேத்து இரவு பெங்களூர் வந்து இறங்கினவுடனே ஃப்ளாஷ் ஆச்சு சார் இந்தக் கவிதை. நைட்டே உட்கார்ந்து எழுதினேன். சொல்லட்டுமா?''

''ஒன் மினிட். சைக்கிள் நனையுது. தூக்கி ஓரமா வச்சிட்டு வர்றேன்.''

இளங்கோ எரிச்சல்பட்டான்.

சங்கரன் திரும்பி வந்தான்.

''சொல்லுங்க.''

''கவிஞர் தந்தை
காலே வானத்தை
நீல நெடுந்துணி

''இருப்பதி ஒண்ணும் இல்லப்பா! என் மனைவி வைத்திருந்த ஹெயர் ரிமூவர் ஆயிலே ஹெயர் ஆயில் என்று நினைத்துத்தேய்த்து விட்டேன்!''



என்று வியக்க....
குழந்தை பாவம்
உடனே நம்பி....''
''உங்ககிட்ட மேட்ச் பாக்ஸ் இருக்கா?''
''இல்லே. இன்னும் கவிதை முடியலே சார். அப்புறம்....''
''மழை நின்னுடுச்சி. மிச்சத்தை அப்புறம் சொல்லுங்களேன்.''
சங்கரன் சைக்கிளில் செல்ல...
இளங்கோ எச்சில் விழுங்கினான்.

அலுவலகத்தில் அத்தனை பேர்களும் டேஸ்டில் சங்கரனின் கார்பன் காப்பிகளாக இருந்தார்கள். இளங்கோவுக்கு எல்லோர் மீதும் வெறுப்பு வந்தது.

என்னைப் புரிந்து கொள்ள அல்லது நான் புரிந்துகொள்ளும்படி சொல்ல... நான் சொல்வதை ரசிக்க அல்லது நான் ரசிக்கும் அளவுக்குச் சொல்ல யாருமே இல்லையா?

வெளிவந்த கவிதை இதழ்களைக் கையில் வைத்துக் கொண்டு, சொல்லிச் சந்தோஷப் பட ஆளில்லாமல் தவித்தான். எங்கே இருக்கிறான் என் இனிய நண்பன்? என் லைக் மைண்டட்? என் பிரதிபலிப்பு?

அவன் தங்கியிருந்த அறைக்குப் பக்கத் தறைக்காரன் அன்று, ''சார், டைம் என்ன?'' என்றான்.

''ஏழு. நீங்க காலேஜா?''

''காலேஜ் ஸ்டூடண்ட் இல்லே. நான் கமர்ஷியல் ஆர்ட்டிஸ்ட்.''

''வெரி குட். எதையெல்லாம் வரைவீங்க? சூரிய உதயம், தாய்மை, மனப் பிளவு, உடைந்த இதயம், ஒற்றைப் பனை மரம்... இதெல்லாம் வரைஞ்சிருக்கீங்களா?''

''ஓ. வரையலாமே! ஸ்கொயர் ஃபீட்டுக்குப் பத்து ரூபா ஆகும். நீங்க ஏதாச்சும் டிசைன் வச்சிருக்கீங்களா? நானே போடட்டுமா? ஃப்ரேம் போட்டுத் தர்றதுன்னா தனி சார்ஜ்.''

''ஐய்யய்யோ... நான் எனக்குக் கேட்கலே. நீங்க பர்சனலா உங்க ஆத்ம திருப்திக்காகப் படம் போடறதில்லையா?''

''என்ன ஸார் உளர்றீங்க? கான்வாஸ், கலர் எல்லாம் என்ன விலை? காசு எவன் தருவான்? ஆத்ம திருப்தியாவது, ஒண்ணாவது? ஆர்டர் கொடுத்தால் வரைவேன். விடுங்க சார்.''

இளங்கோ தீவிரமாகக் கவலைப்பட்டான். எப்படி இந்தக் கலைஞன் இயந்திரமானான்?
என்னைப் போல் நினைப்பவன், செயல்படுபவன் எவனுமே இல்லையா?

இருந்தாள். ஆம், பெண்தான்.
பஸ் ஸ்டாப்பில், பார்க்கில் சந்திக்கவில்லை. ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் இவன் ஒரு பக்கெட் வாங்கியபோது, அவள் பார்க்கர் பேனா பார்த்துக் கொண்டிருந்தாள். அருகே ஒரு தோழி.

''நைஸா எழுதுமா?'' என்றாள்.
''கவிதை எழுதுமா?'' என்றாள் தோழி.
''சும்மா இருடி'' என்றாள்.

இளங்கோ திரும்பிப் பார்த்தான். அவள் கையில் ஒரு கவிதைப் புத்தகம். இளங்கோ மிக விரும்பும் ரஞ்சனியின் கவிதைத் தொகுப்பு. அவள் விழிகள் விரிந்தன. இவனும் ரஞ்சனியை ரசிப்பவனா?

''லேட்டஸ்டா ஏதுவும் எழுதுனியா?'' என்றாள் தோழி.

''போன மாசம் வந்ததுதான். ஆனா லேட்டஸ்டா ஒண்ணு ரசிச்சேன்.''

''என்ன?''

''இளங்கோன்னு ஒருத்தரோட கவிதை. ''கவிஞர் தந்தை... காலை வானத்தை...நீல நெடுந்துணி.... என்று வியந்தார். குழந்தை பாவம்... உடனே நம்பி... ஓ. வானமே...நீ நீலத் துணியாமே... ஒரு துண்டைக் கிழித்துப் போடேன்... யூனிஃபார்ம் தைக்கணும். நாலு நாளாய் ஸ்கூலுக்குப் போகலே..... ஃபண்டாஸ்டிக் இல்லே?''

இளங்கோ சிலிர்த்தான்.
அவர்களை நெருங்கினான்.
''எக்ஸ்க்யூஸ் மி. இப்ப நீங்க சொன்ன கவிதையை யார் எழுதினது?''
''இளங்கோன்னு ஒருத்தர்.''
''அவரைச் சந்திச்சிருக்கீங்களா?''
''இல்லே. சந்திக்க விரும்பினதுண்டு.''
''இப்போ சந்திக்கிறீங்களா?''
''எங்கே இருக்கார்?''
''நான்தான்.''
''ஓ! ஓ! ரியலி?''

அவள் கண்கள் நட்டுத் தடுமாறி வெளியே விழுந்து விடும்போல விரிந்தது.

அப்புறம்..இரண்டு நாட்கள் கழித்து அந்த ஹோட்டலில்...

''நானும் கொஞ்சம் கவிதை எழுதுவேன்'' என்றாள் ஹேமா.

''வெரி குட். ஒண்ணு சொல்லுங்களேன்'' என்றான் இளங்கோ.



''மரங்கள்—
பூமி மனிதனின்
உடல் ரோமங்கள்.
உலகப் பின்குஷனில்
குத்தப்பட்ட குண்டூசிகள்....''

''நல்லா இருக்கு மிஸ் ஹேமா. நிறைய எழுதுங்கள்.''

''நீங்க என்ன செய்யறீங்க?''

''ஒரு வெண்டைக்காயைத் தூக்கி இந்தப் பக்கத்திலேர்ந்து அந்தப் பக்கம் வைக்கிறதுக்கு யானை தேவையா?''

''தேவையில்லே.''

''நான் யானை. என் வேலே வெண்டைக் காய். என் படிப்புக்கும் வேலேக்கும் பொருத்தமே இல்லாத கூட்டல், கழித்தல் வேலே. கவிதைன்னு உயிர். பேசிக்கிட்டே இருப்பேன். கேட்கத்தான் ஆளில்லே.''

''ஏன் இல்லே? நான் இருக்கேன். என் கிட்டே பேசுங்க.''

இளங்கோவுக்குச் சந்தோஷமாகஇருந்தது.


''உங்க அப்பா என்ன பண்றார்?''

''அவரோட காருக்கு ஒரு மாசத்துக்கு ஒரு கலர் மாத்தறார். ப்ளடி பணம் நிறைய இருக்கு. ஒரு நாளைக்கு வீட்டுக்கு வரணும் நீங்க.''

''கண்டிப்பா வரேன்.''

சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தபோது, சாலேயோரம் சென்ற ஒரு நாய்க்குட்டியைப் பார்த்து.

ஒருவர்: நேற்று பஸ்ஸிலே ஒரு 'பிக்' பாக்கெட்டைப் பார்த்து,விட்டேன் பார் ஒரு குத்து!
மற்றவர்: அட, அப்புறம்?
ஒருவர்: டாக்டரிடம்போய்க் கையில் கட்டு போட்டுக் கொண்டேன்!



''முயலாட்டம் இருக்கு''
''முயலாட்டம் இருக்கு.''
—இருவரும் ஒரே நேரத்தில் சொல்ல...

''டெலிபதி!'' என்றான் இளங்கோ.

அப்புறம் ஹேமாவைத் தினம் பார்த்தான்.

இயற்கையை ரசிப்பாள் அவள். அதைக் கவிதையாய் வடிப்பான் இவன். இவன் கவிதையை ரசிப்பாள் அவள். விமரிசிப்பாள்.

இவனுக்குச் சட்டை அவள் செலக்ட் செய்தாள். அவளுக்குச் சாந்து இவன் செலக்ட் செய்தான்.

''இப்படி ஒரு நட்புக்காக ஏங்கினேன்'' என்பான் இளங்கோ.

அன்று அவள் வந்தாள். சாக்லேட் தந்தாள்.

''எனக்குக் கல்யாணம் ஃபிக்ஸ் ஆகிருக்கு. மாப்பிள்ளே இதே ஊர். இண்டஸ்ட்ரியலிஸ்ட் மாதவன் புதல்வர் ப்ரேம்குமார். அடுத்த மாசம் ஏழாம் தேதி கல்யாணம்'' என்றாள்.

உருவான பானை உருக்குலேந்தது போல... பறந்த பட்டம் நூல் அறுந்தது போல... மனசில் என்னவோ விட்டுப் போனதாய் உணர்ந்தான்.

''வாழ்....த்துக்கள்.''

''கல்யாணம் ஆனவுடனே ஜெர்மனி போறோம். அங்கேயே செட்டில் ஆகிறோம்.''

''அப்போ...அப்போ... என்னைப் பிரிஞ்சு போறீங்களா ஹேமா?''

''என்னைக்காச்சும் ஒரு நாள் கல்யாணம் நான் பண்ணிக்கிட்டுத்தானே ஆகணும்!''

''ஏன் ஹேமா, நம்ம நட்பு அவ்வளவு தானா?''

''கடிதங்களில் தொடரலாமே — அவர் சம்மதிச்சா.''

''உங்களால் என் நட்பை மறந்துற முடியுமா?''

''அதெப்படி முடியும்? என்ன இருந்தாலும் எப்பவும் நான் உங்க ரசிகைதான்.''

''இன்னொரு தடவை சொல்லுங்க.''

''எப்பவும் நான் உங்க ரசிகைதான்.''

ரசிகை! வெறும் ரசிகை! அவ்வளவுதானா நமக்குள் இருந்தது நட்பில்லேயா? வெறும் ரசிப்புத்தானா?

ஹேமா, உனக்கு ஆயிரம் நண்பர்கள் கிடைப்பார்கள்.

ஆனால்... எனக்கு நீ ஒருத்திதான் நண்பி. இளங்கோ அமைதியாய் நடந்தான்.

மறுபடியும் இளங்கோ ஒரு நண்பனைத் தேடிக்கொண்டிருக்கிறான்.

• • •

ஒரு வேண்டுகோள்!

உங்களில் யாராவது இளங்கோவின் ரசனைகள், கருத்துக்கள் கொண்ட யாரையாவது சந்தித்தால்... அவரை,மன நோய் மருத்துவ மனையில் கவுரெல்லாம்'என்நண்பா, நீ எங்கே இருக்கிறாய்?' என்று எழுதிக் கொண்டிருக்கும் அவனிடம் அழைத்துச் செல்லுங்கள்.

ஒருவேளை, குணமாகலாம்.

ஓவியருக்குச் சவால்!

அண்மையில் 'ஃபெமினா'வில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. வி. எஸ். பூரான்பூர் என்ற ஓவியர் ஒரு சிறுவன் அல்லது சிறுமியின் புகைப்படத்தைப் பார்த்து முப்பது வருடத்துக்குப் பின் எவ்விதம் இருப்பார் என்று வரைந்து காண்பித்து விடுகிறார். அதே மாதிரி அறுபது வயதுக் கிழவனின் போட்டோவைக் கொடுத்தால், சிறு வயதில் எப்படி இருந்திருக்கக் கூடும் என்று போட்டுக் காண்பிக்கிறார்.

இது சாத்தியமா?

வர்ணத்திடமும், மாருதியிடமும் முறையே சிறுவன், சிறுமி படத்தைக் கொடுத்து அவர்களின் வயதான உருவங்களை வரைந்து தருமாறு கேட்டுக் கொண்டோம். இரண்டு நாள் அவகாசம் கேட்டு, சவாலை ஏற்றுக் கொண்டு அவர்கள் உற்சாகத்துடன் வரைந்து தந்தார்கள்.

வர்ணம் போட்ட படத்தை அப் பெண்மணியின் கணவரிடம் காண்பித்தோம். ''குட். அறுபது சதவிகிதம் ஒற்றுமை இருக்கிறது'' என்று பாராட்டினார்.



✖ சிறுமியாக

மாருதி தீட்டிய சித்திரத்தைப் பிள்ளையின் தாயார், வேறு சில உறவினர்களிடம் காண்பித்தபோது. ''முகம் சிறிது நீளவாட்டமாக மாறியிருக்கிறது. உதடுகளின் அமைப்பு சரி இல்லை; மற்றபடி பரவாயில்லை'' என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.



✖ வளர்ந்த பின் ஓவியம்



✖ வளர்ந்த பின் போட்டோ



✖ சிறுவனாக



✖ வளர்ந்த பின் ஓவியம்



✖ வளர்ந்த பின் போட்டோ



ஓவியர் மாருதி

ஓவியர்கள் படம் இருக்கட்டும். மருத்துவ ரீதியாக இதற்கு என்ன பதில்? டாக்டர் தர்மராஜன் ''முடியாத காரியம்'' என்று எடுத்த எடுப்பிலேயே சொன்னார். ''தலை அமைப்பு பத்து வயது வரைக்கும் எப்படி வேண்டுமானாலும் மாறுவதற்கான சாத்தியக் கூறு உள்ளது. அதைத் தவிர, ஊட்டமான உணவு, வாழ்க்கை நடத்துகிற விதம், சோர்வு அயர்ச்சி போன்ற பல்வேறு காரணங்கள் முக அமைப்பை மாற்றி விடுகின்றன. மேலும் வயதாக ஆக, ஈறுகள் சுருங்குவதன் காரணமாக முகம் சற்று குறுகிப் போவதற்கு வாய்ப்புண்டு'' என்று கூறினார்.

இளவயதில் எடுத்த புகைப்படம், ஓவியர் வரைந்த சித்திரங்கள், பிற்காலப் புகைப்படத் தோற்றங்கள் — மூன்றையும் தந்திருக்கிறோம்; நீங்களே ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்களேன்!

தமயந்தி — சாருகேசி

✖ ஓவியர் வர்ணம்



✖ டாக்டர் தர்மராஜன்




Kalki Shopping Page

மெட்ரோபாலிடன்

மாவரைக்கும் இயந்திரங்கள்

- நீடித்த உழைப்பு
- நிகரற்ற அமைப்பு
- உங்கள் இல்லத்திற்கு உறுதுணையானது



அளவுகள் : 1 லிட்டர் முதல் 20 லிட்டர் வரை

Metropolitan Industries
72, Sastry Road, Coimbatore-641009
Phone : 32396


எல்லா வயதினருக்கும் எல்லா தேவைகளுக்கும் கைத்தறி!

கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி

காந்திமதி

எட்டையபுரம் மகராஜா கட்டிடம்
திருநெல்வேலி
அருகில் உள்ள
விற்பனை நிலையங்களுக்கு
வருகை தாரீர்!

Solidaire
சாலிடெர்
ஸூப்பர் டீலர்
Solidaire
சாலிடெர்
ஸூப்பர் டீலர்



ஏஜென்ஸீஸ் ச ஏஜென்ஸீஸ்

18, தெற்கு உஸ்மான் ரோடு தி. நகர்,
சென்னை-17, போன் : 440004, 440725

ஒரு சராசரி மனிதனின் அபார வெற்றி!







ரீடர்ஸ் டைஜஸ்ட் ஸ்தாபகர் வாலஸ் அவர்களை ஒரு சமயம், 'உங்கள் வெற்றிக்கு அடிப்படை என்ன' என்று நிருபர் வினவியபோது அவர் தந்த பதில்:

நான் ஒரு சராசரி மனிதன். எனவே ஒரு சராசரி மனிதனுக்கு எது கவைக்கும் என்று எனக்குப் புரிகிறது. அதை டைஜஸ்ட்டில் நான் எடுத்துத் தருவதுதான் என் வெற்றிக்குக் காரணம்.

அண்மையில் தமது 91வது வயதில் காலமான வாலஸ் கல்லூரியில் படித்த நாட்களில் அவருக்குச் சுவாரஸ்யமான பொழுதுபோக்கு, தான் படித்த பல கதைகள் கட்டுரைகள் முதலியவற்றைப் பத்திரிகைகளிலிருந்து கிழித்து ஒட்டி வைத்துக் கொள்வதுதான்.

கல்லூரி விடுமுறை நாட்களில் வேலை செய்து சம்பாதிக்க ஒரு பிரசுர ஸ்தாபனத்தைச் சேர்ந்த விளம்பர இலாக்காவில் சேர்ந்தார். அங்கே அமெரிக்க அரசாங்கம் விவசாயிகளுக்காக வெளியிட்டிருக்கும் பல பிரசுரங்களைப் பார்த்தார். ஆனால் அத்தகைய பிரசுரங்கள் வெளியாகியிருக்கின்றன என்பது கூடப் பலருக்குத் தெரியாது. காரணம், அவை மிக நீளமாக இருந்ததால் படிக்க ரசமாக இல்லை. யாரையும் கவரவில்லை. டிவிட் வாலஸ் அத்தனை பிரசுரங்களையும் கவனமாகப் படித்து அவைகளைத் தேவைக்கு ஏற்பச் சுருக்கி, 124 பக்கங்கள் உள்ள புத்தகங்களாகப் பிரசுரித்தார். பாங்குகள் மூலமாக விவசாய வாடிக்கைக்காரர்களுக்கு விற்க ஏற்பாடு செய்தார். லட்சம் பிரதிகள் விற்பனையாயின.

விவசாயத் துறைப் புத்தகங்களில் கண்ட வெற்றியை அடிப்படையாகக் கொண்டு வியாபாரத் துறைக்கும் இது போல ஒரு புத்தகம் தயாரிக்க ஆரம்பித்தார்.

பிறகுதான் 'ஏன் இப்படி, பலதரப்பட்ட வாசகர்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய வெவ்வேறு விஷயங்களையும் சுருக்கிக் கொடுக்கக் கூடாது?' என்ற யோசனை அவருக்குத் தோன்றியது.

இந்த நேரத்தில் முதல் உலகப் போர் ஆரம்பமாயிற்று. டிவிட் வாலஸ் யுத்த சேவையில் சேர்ந்து விட்டார்.

யுத்தத்தில் காயமடைந்து மருத்துவ மனையில் இருந்தார். ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவந்தவுடன் மினியாபொலிஸ் நகரத்தில் உள்ள பொதுஜன வாசக சாலைக்கு ஆறு மாத காலம் தினசரி போய், பல பழைய சஞ்சிகைகளிலிருந்து பலதரப்பட்ட விஷயங்களைப் பொறுக்கி, அவைகளின் மூலத்தின் சுவை குன்றாமல் சுருக்கி எழுதினார். இவற்றை ஒரு மாதாந்திர சஞ்சிகையாக வெளியிட முடியுமா என்று 1920ம் ஆண்டில் பல பத்திரிகைச் சொந்தக்காரர்களை வாலஸ் அணுகினார். அவர்கள் கொஞ்சம் கூட ஆர்வம் காட்டவில்லை.

இந்த நேரத்தில்தான் டிவிட் வாலஸ் சமூக சேவகியாக மினியாபொலிஸ் வந்த லைலா அக்ஸெனைச் சந்தித்தார். லைலா காதலித்தது வாலஸ்ஸை மட்டுமல்ல; அவருடைய பத்திரிகை யோசனையையும்தான்.

இவர்கள் திருமணம் நடந்த கையோடு வாலஸ், தம் லட்சியப் பத்திரிகையைத் தாமே வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார்.

முன் சந்தாவாகக் கிடைத்த ஐயாயிரம் டாலர்களுடன் ஆயிரத்து முந்நூறு டாலர்களைக் கடனாக வாங்கிச் சேர்த்து 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' என்ற பெயருடன்

1922 பிப்ரவரியில் முதல் இதழ் ஐயாயிரம் பிரதிகளை அச்சிட்டனர் வாலஸ் தம்பதி.

அன்று நியூயார்க்கில் கார் ஷெட் ஒன்றில் ஆரம்பமாயிற்று ரீடர்ஸ் டைஜெஸ்ட். இன்று பிளெஸண்ட்வில் என்னும் இடத்தில் 150 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பல கட்டிடங்களில் ரீடர்ஸ் டைஜெஸ்ட் தலைமையகம் இயங்குகிறது.

முதல் மூன்று ஆண்டு காலம் வேறு எந்தச் சிப்பந்தியின் உதவியுமில்லாமலேயே இருவரும் பத்திரிகை தயாரித்தல், வினியோகித்தல் முதலியவற்றைக் கவனித்துக்கொண்டார்கள்.

இன்று உலகின் பல பாகங்களிலும் 16 மொழிகளில் மூன்று கோடி பிரதிகள் விற்பனையாகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட துணை ஆசிரியர்களும், இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட சிப்பந்திகளும் தலைமைக் காரியாலயத்தில் மட்டுமே பணியாற்றுகிறார்கள். துணுக்குகள், கடிதங்களை கம்ப்யூட்டர்கள் தாம் பார்க்கின்றன.

கண் பார்வையற்றவர்களுக்காகத் தடவிப் படிக்கும் பிரெய்ல் எழுத்து முறையில் பல மொழிகளிலும் இந்தச் சஞ்சிகை வெளியாகிறது. அமெரிக்காவில் படிக்கத் தெரியாதவர்களுக்கு உதவ, எல். பி. அல்லது டேப் ரிக்கார்டுகளாகவும் வெளியாகிறது. நூறு நாடுகளில் இந்தச் சஞ்சிகைக்கு ஏழு கோடி வாசகர்கள் இருப்பதாகக் கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

முப்பத்தி இரண்டு வருட காலம், 1954ம் ஆண்டுவரை விளம்பரங்களே இல்லாமல் அமெரிக்கப் பதிப்பை வெளியிட்டு வந்த நிர்வாகம், நிர்வாகச் செலவு, விலைவாசி உயர்வு முதலியவற்றைச் சமாளிக்க சஞ்சிகையின் விலையை உயர்த்தலாமா? விளம்பரங்களை ஏற்றுக்கொள்ளலாமா? என்ற கேள்வியை அதன் வாசகர்களிடமே விட்டது. வாசகர்கள் தங்கள் அபிமான சஞ்சிகையில் விளம்பரங்களையும் பார்க்க விரும்பினார்கள். 1955 ஏப்ரல் மாதம் முதல் மதுபானம், புகையிலை சம்பந்தப்படாத விளம்பர விஷயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

முதல் பதினொரு ஆண்டு காலம், பிற பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியானவற்றைத் தேர்ந்தெடுத்துச் சுருக்கிப் பிரசுரித்தார்கள். 1933ல் இந்தச் சஞ்சிகைக்காகவே எழுதப்பட்ட முதல் கட்டுரை பிரசுரமாயிற்று. அப்புறம் அடிக்கடி இந்த ரகக் கட்டுரையையும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள்.

சுருக்குவது என்பது இந்த ஸ்தாபனத்தின் கைவந்த கலை.


தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு புத்தகத்தைப் புத்தகச் சுருக்கமாக மாற்றி அதிலும் திருப்தி ஏற்படாமல், புத்தக அனுபந்தமாக மாற்றி, பிறகு அதை ஒரு கட்டுரையாகக் குறைத்து, கடைசியில் பக்கத்தை நிரப்ப உதவும் ஒரு பாரா விஷயமாக வெளியிட்ட கதை இந்த ஸ்தாபனத்தின் பிரசித்தமான நிகழ்ச்சி.

அந்த முழுப் புத்தகத்தின் ஜீவனே அந்தப் பாராவில்தான் இருந்ததாம்!


— கோமதி ஸ்வாமிநாதன்


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
EGG
Halo
SHAMPOO

[redacted]



ஒரு கோணல் பார்வை: மீண்டும் கோகிலா
'கமல்'
EXIT
அதெப்படி வீணையை மீட்டாமலேயே வாசிக்கத் தெரியும்?
ரொம்ப சுலபம். நீயும் ஸ்ரீதேவியாக இருந்தால் முடியும்
பையன் வக்கீலுன்னு தானே சொன்னேள். நம்ப கோகிக்கும் சட்டத்திற்கும் தொடர்பு இருக்கு. இவ கோகி - லா தானே!
என்ன சார் வடாம் பிழிகிற சீனை நாலு நாள் எதுக்கு எடுக்கணும்?
புரட்யூசர் வீட்டில் இந்த சாக்கில் நிறைய வடாம் பிழிந்து உலர்த்த சொல்லியிருக்காங்களாம்



மதி போன்ற வதனம், வண்டு போன்ற கண்கள், சங்கு போன்ற கழுத்து, .. வாழைத் தண்டு தோள்கள் ... துடி இடை
நிறுத்தப்பா ... துடி இடை என்பதை 'கட்' பண்ணிடு வசனம் எழுதறப்போ தீபா நடிக்கப் போறாங் கன்னு எனக்குத் தெரியாது
காமினிக்கு மடிசார் கட்டி விடப் போகிறேன். நீங்க அந்தண்டை போங்க
DIRECTOR
டைரக்டர் சார் புடவை கட்டி விடறதை ஃபிலிம் பண்ணிவிடவா
சேச்சே.. எப்படியப்பா பண்றது ... ஸ்ரீதேவிக்கே வேறு யாரோதானே மடிசார் கட்டி விட்டிருக்காங்க!
இந்த படத்திலிருந்து பாதியிலே ரேகா ஏன் விலகிக் கிட்டாங்களாம்?
என்னை விட அவங்களுக்குக் குறைவாகத்தான் தருவாங்க என்பதாலே.. பணம் இல்லே ... இடுப்பிலே கிள்ளு!

22. மாறு வேஷத்தில்!

வஸந்த் அந்தப் பெண்ணை மறுபடி அணுகி, ''எக்ஸ்க்யூஸ் மி மிஸஸ் ராகவன். கன் ஐ யூஸ் யுவர் டெலிஃபோன்?'' என்றான். கண்ணாடிக்காரி நிமிர்ந்து ''யூ எகய்ன்!'' என்றாள்.

''ரொம்ப அவசரம் காசுக்கு உண்டான காலைக் கொடுத்துடறேன். ஸாரி காலுக்கு உண்டான காசை... எப்படிக் குழம்புது பாத்திங்களா? தலை போற விஷயம். உதவி பண்ணிங்கன்னா என் உயில்ல உங்களுக்கு ஒரு எவர்ஸில்வர் லோட்டா எழுதி வெக்கறேன்.''

அந்தப் பெண்ணைச் சிரிக்க வைத்துவிட்டான். ''ஆல் ரைட் அந்தக் கண்ணாடி அறைக்குள்ள இருக்கிற போனை உபயோகப் படுத்துங்க.''

''பாஸ் கை கொடுங்க.''

''டெலிபோன்லயா? என்னடா?''

''சோடியம் கிணறு.''

''விஷயம் என்ன புரியற மாதிரி சொல்லு''

''நீங்க சோடியத்தைப் பத்தி தகவல் சேர்க்கச் சொன்னீங்கல்ல. இருக்கிற எல்லா புத்தகத்தையும் பார்த்தேன். நேஷனல் கெமிக்கல் லாபரேட்டரியில் பல புத்திசாலிகள், விஞ்ஞானிகள், பேப்பர் பேப்பரா எழுதியிருக்காங்க. எல்லாம்ஆராய்ச்சிக் கட்டுரைகள். அதில ஒரே ஒரு கட்டுரையோட தலைப்பு என்ன தெரியுமா?''

''என்ன?''

''சொல்விடட்டுமா?''

''சொல்லுடா.''

''சொல்லியே டட்டுமா?''

''வஸந்த்! ''

''கேளுங்க. நல்லாக் காது கொடுத்துக் கேளுங்க. 'இன்ட்ரஸ்டிங் கெமிகல் காம்பொஸிஷன் ஆஃப் ஸலைன் இன் என் ஏன்ஷியன்ட் வெல் – ராஜராஜன் கிணறு'' பை டாக்டர் எச். அகர்வால் ப்ரொஸீடிங்ஸ் ஆஃப் தி ஐ. ஸி. ஏ.. தமிழ்ல சொன்னா புராதன ரா ரா . கிணற்றின் கலக்கலின் வசீகர ரசாயன அமைப்பு.''

''வஸந்த்! அந்தப் புத்தகத்தை உடனே எடுத்து வா.''

''முடியாது. ரெஃபரன்ஸ் செக்ஷன்ல இருக்கு. இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பார்க்கறேன். பரக்குன்னு நாலஞ்சு பக்கத்



தையும் இழிச்சுட்டுப் பனியனுக்குள்ள வெச்சுண்டு வந்துரவா?''

''சேசே அப்படிச் செய்யாதே. லைப்ரரியில ஃபோட்டோஸ்டாட் சர்விஸ் இருக்குதே. பணம் கொடுத்துட்டேன்னு சொல்லு. காப்பி எடுத்துக் தருவாங்க. அப்படி இல்லைன்னா ஆர்ட்டிக்கிளை அப்படியே காப்பி அடிச்சுப் பேப்பர்ல எழுதிக்கிட்டு வா.''

''தலைகால் புரியாத ஆர்ட்டிக்கிள்.''

''பரவாயில்லை. காப்பி அடிச்சுண்டு வா. இழிக்காதே, என்ன?''

வஸந்த் அறையை விட்டு வெளி வந்து மறுபடி அந்தப் பெண்ணிடம் சென்று, ''போய் சொன்னீங்க'' என்றான்.

''பார்டன்?''

''உங்க பேர் நளினி மிஸ் ஆர் நளினி.''

''எப்படித் தெரியும் உங்களுக்கு?''

''எனக்குக் கொஞ்சம் அஸ்ட்ரல் பவர்ஸ் உண்டு. ஒரு பெண்ணுடைய மூக்கு நாஸ்ட்ரில்ஸ் மூச்சு விடறப்போ எப்படி விரியறதுங்கறதை வெச்சுட்டு அவங்க பேரை கெஸ் பண்ணலாம்.''

''அப்படியா?''

''மேலும் அந்த அறைக்குள்ளே இருந்த ரிஜிஸ்டர்ல ஸ்டாஃப் லிஸ்ட்டில உங்கபேரைப் பார்த்தேன். உங்க லைப்ரரியில ஃபோட்டோ



ஸ்டாட் சர்வீஸ் இருக்குமா ஒரு ஆர்ட்டிக்கிளைப் பிரதி எடுக்கணும்.''

அவள் இப்பொழுது வஸந்தை 'இவன் என்ன மாதிரி மனுஷன்' என்கிற மாதிரி ஆர்வத்துடன் பார்த்தாள்.

''அப்படிப் பார்க்காதிங்க. ஏற்கனவே எனக்குக் கொஞ்சம் பி. பி. டிரபிள்.''

''இந்த மாதிரி நீங்க எத்தனை பெண்களை அப்ரோச் பண்ணியிருக்கீங்க.''

வஸந்த் அடிபட்டவன் போல்: ''பெக் யுவர் பார்டன். நான் ரொம்ப ஸீரியஸான இளைஞன். எனக்கு வாழ்க்கையில சோதியம் ஒன்னுதான் இன்டரஸ்ட்.''

அவள் சிரித்து ''ஆர்ட்டிக்கிள் என்னன்னு சொல்லுங்க'' என்றாள்.

''ரெஃபரன்ஸ் செக்ஷன்ல இருக்குது. வாங்க காட்டறேன்.''

வஸந்த் மறுபடி அந்த அலமாரிக்குச் சென்று அந்தப் புத்தகத்தை எடுத்து, அடையாளம் வைத்திருந்த பக்கத்தில் பிரித்துக் கொடுத்திட்டான்.

''என்னடாது! ஜீவி வேலையா இருக்கு.'' சுற்று முற்றும் பார்த்தான். எல்லோரும் ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். மௌனம். டெலிபோன் செய்துவிட்டு வருவதற்குள் அந்தப் பக்கங்களை யாரோ கிழித்து எடுத்து விட்டார்கள்.

''என்ன கிடைச்சுதா?'' என்று அந்த நளினி அருகே வர வஸந்த் சட்டென்று பக்கத்தைப் புரட்டி வேறு கட்டுரையைத் தேர்ந்தெடுத்து, ''இதான்'' என்றான்.

அவள் அதில் விரல் வைத்துக் கொண்டு எடுத்துச் சென்றாள். ''அரை மணி கழிச்சு வாங்க. காப்பி ரெடியா இருக்கும்.''

''அதுக்குள்ள ஒரு காப்பி அடிச்சுட்டு வந்துர்றேன்.''

''உங்க பேர் சொல்லலியே.''

''கோவிந்தா'' என்று புறப்பட்டான்.

''அடுத்த முறை இந்த லைப்ரரிக்கு மாறு வேஷத்திலதான் பாஸ் போக முடியும். ஏதோ சொல்லிட்டுத் தப்பிச்சு வந்துட்டேன்.''

''கிழிஞ்சு இருந்தது?''

''பக்கங்கள் நீக்கப்பட்டு விட்டன. இதில இருந்து என்ன தெரியுது? என்னை யாரோ தொடர்ந்து லைப்ரரிக்கு வந்திருக்கான்னு.''

''அந்த ஆர்ட்டிக்கிளை நாம பார்க்க விடாமப் பண்ற அமெச்சூர் முயற்சி அது. அதில என்னதான் எழுதியிருந்தது?''

''எனக்கென்ன பாஸ் புரியும்? சாவகாசமாப் படிச்சுக்கலாம்னுட்டு உங்களுக்கு போன் செய்ய வந்தேன். அதுக்குள்ள பிட்டாப் பறந்துடுச்சே.''

''ஜர்னல் பேர் என்ன?'' என்றான் கணேஷ்.

''ப்ரொஸீடிங்ஸ் ஆஃப் இ ஐ. ஸி. ஏ.''

''சரி தேடிப் பார்த்துறலாம். ரகசியம் அதிலதான் இருக்குன்னு இப்ப நிரூபணமாயிடுத்து. சபாஷ்! நீ எப்படியாவது ராத்திரிக்குள்ள அந்த ஆர்ட்டிக்கிளை மறுபிரதி எடுத்துப் பார்த்துட்டு நகல் எடுத்துட்டு வந்துடு என்ன? எங்கே போவே?''

''சரித்திரப் பேராசிரியராச்சு. இப்ப ரசாயனப் பேராசிரியர் ஒருத்தரைப் பிடிக்க வேண்டியதுதான்.''

''என்ன பண்ணுவியோ எனக்கு ராத்திரிக்குள்ள ஆர்ட்டிக்கிள் வந்தாகணும்.''

''வந்துடுத்து. கவலைப்படாதீங்க... பாஸ்! சின்னதா ஒரு போன் அடிச்சுக்கலாமா?''

''இனியாவா?''

''ஆமா. கல்யாண மண்டபம் விசாரிச்சு வெச்சுக்கணும். குதிரை நுழையுமான்னு பார்க்கணும். அல்லோ கொஞ்சம் இனியா போடுங்க..''

''குதிரையா? வடக்கத்தி கல்யாணமா?''

''இல்லே பாஸ். வடக்கத்திக் கடத்தல். ஓ! ஹலோ இன்னி! இந்திரன் தோட்டத்து முந்திரியே... மன்மத நாட்டுக்கு மந்திரியே.. ராஜ பார்வை பாத்தியா?''

''ஓ! பக்கத்தில அப்பா இருக்காங்களா? கொஞ்சம் கல்யாண மண்டபத்தின் பேரு ஊரு ஜாதகம் எல்லாம் சொல்லிட்டன்னு சௌகரியமா இருக்கும்.''

கணேஷ் யோசனையில் இருந்தான். ரசாயன கட்டுரைக்கும் ராஜ ராஜன் கிணற்றுக்கும் என்ன சம்பந்தம்? விந்தையாக இருக்கிறதே! ரசாயனம் இந்த விவகாரத்தில் அடிக்கடி வருகிறது. சோடியம் ஹைட்ராக்ஸைடு, டைட்டேனியம், கணேஷ் சற்று நேரம் எல்லாவற்றையும் கழற்றிவிட்டு ஏகாக்கிரக சிந்தையாக யோசித்துப் பார்த்தான். இருக்க வேண்டும்! ஏதாவது ஒரு ஓட்டு இருக்க வேண்டும். முதலில் ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்ல விசாரித்தார்களா என்று ராஜேந்திரனைக் கேட்க வேண்டும்.

''வஸந்த் கொஞ்சம் சுருக்கமாப் பேச்சை முடிச்சுக்கிறியா? டெலிபோன் வேணும்.''

''பை இன்னி! கஜு கான்றபோது அமெரிக்கா பார்ட்டி வந்தான்னு வெரட்டி விட்டுரு.... என்ன பாஸ்! யாருக்கு போன்?''

''கொஞ்சம் ராஜேந்திரனைக் கூப்பிடு.''

வஸந்த் மறுபடி நம்பர்களைச் சுழற்றும் போது ''பாஸ் ஏதாவது கிணத்துக்குள்ள தென்பட்டுதா?'' என்றான்.

''கொஞ்சம் கொஞ்சம் தெரியுது.''

''தங்கக் காசுதானே?''

''இருக்கலாம்.''

''தங்கக் காசு இல்லேதானே?''

''அப்படியும் இருக்கலாம். வஸந்த் அந்தக் கிணத்துல தங்கக் காசுகளைப் போட்டுட்டதாக் கல் வெட்டுக் குறிப்பு இருக்கிறது என்னவோ நிஜம். ஆனா இவங்க தேடறது தங்கக் காசுகளான்னு ஊர்ஜிதமா நமக்கு இன்னும் தெரியலே.''

''ஹலோ கொஞ்சம் டி.ஐ.ஜி. கூடப் பேசி வாங்களா? என் பேர் வஸந்த். லாயர் கணேஷ் அஸிஸ்டண்ட். தாங்க்ஸ்! பாஸ் ராஜேந்திரன் ராஜன் ராஜன் கிணறு; ராஜேந்திரன் – டி.ஐ.ஜி. சரித்திரம்! எப்படி மாறிப் போச்சு பாருங்க. அப்பா புள்ளையா இருந்தவங்க இன்றும் போலீஸ் ஆபீஸருமா மாறிப் போயிட்டாங்க. என்னே! ஸார் வணக்கம். நான்தான் வஸந்த்!''

கணேஷ் டெலிபோனைப் பிடுங்கிக்-கொண்டு ''ராஜேந்திரன் தொல்பொருள் இலாக்காவில விசாரிச்சீங்களா? சொல்லியிருந்தேனே'' என்று கேட்டான்.



சைக்கிள்-மோட்டார்சைக்கிள் போட்டி – முடிவு

19–4–81 கல்கியில் வெளியான போட்டி. சரியான விடை:

மோட்டார் சைக்கிள் நடித்த படம்: அல்லி தர்பார்

ஓட்டிச் செல்பவர்: மஞ்சுளா

சரியான விடைகளை 45 வாசகர்கள் எழுதி ரூ. 500 பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்:

1. த. சாமுவேல், புதியம்புத்தூர். 2. ஏ. சரவணன், த. பட்டினம். 3. கே. அம்பிகா, ஆரணி. 4. நரசிம்மன், மேட்டூர் அணை. 5. பி. சக்திவேல், சேலம். 6. சொர்ணகுமார், கோவில்பட்டி. 7. ஆர். லீலா, தூத்துக்குடி-2. 8. எஸ். ராஜாமணி, திருவனந்தபுரம். 9. ஜி. மாணிக்கம், திருவனந்தபுரம்-23. 10. ஆல்பின் சகாயராஜ், புதியம்புத்தூர். 11. கா. வெங்கடேசன், கும்பகோணம். 12. ஏ. ஜோதி, குடியாத்தம். 13. எம். அமர், கரூர். 14. எஸ். சீனிவாசன், சென்னை-17. 15. ஏ. சுமதி, மேட்டூர் அணை. 16. மு. ராமராஜ், ராஜபாளையம். 17. எம். சுகுமார், சென்னை-71. 18. எஸ். விசுவநாதன், கோயமுத்தூர். 19. ஆர். மனோகர், மேலூர். 20. ஆர். மூர்த்தி, மேலமலையனூர். 21. எஸ்.எஸ். வாசன், சென்னை 22. கே. ஆர். நாகப்பன், காரைக்குடி-1 23. சா. குணசேகரன், சென்னை-17. 24. ஆர். ரவிச்சந்திரன், பு. புளியம்பட்டி. 25. ஆர். ராஜா, வாணியம்பாடி. 26. அ. காளியப்பன், குன்றெட்டியூர். 27. ஆர். மோகன் திண்டுக்கல். 28. எம். துரை பாண்டியன், திண்டுக்கல். 29. எஸ். வேல்முருகன், திண்டுக்கல். 30. கே. ரஞ்சனி, சென்னை-2. 31. கே. ரவி, தர்மபுரி. 32. எஸ். ரேவதி, திருவெண்காடு. 33. ஜி. கருணாகரன், சென்னை. 34. எம். அனந்தராமன், சென்னை-33. 35. பி. விஜயகுமார், சென்னை-1. 36. எஸ். கண்ணன், புதியம்புத்தூர். 37. ஏ. கே. ரவிச்சந்திரன், போரூர். 38. ஸாம் பால், விலாசமில்லை. 39. கே. ஜெயகிருஷ்ணன், பெங்களூர்-5. 40. பி. விசுவநாதன், வனவாசி. 41. பி. தேவேந்திரன், சென்னை-54. 42. ஜி. பாபு, பெங்களூர். 43. எம். செல்வமணி, திண்டிவனம். 44. ஜே. ராஜன், சென்னை-13. 45. டி. கவிதா, கிணத்துக்கடவு.

''விசாரிச்சேன் கணேஷ். அவங்க ரிப்போர்ட் கொடுத்திருக்காங்க.''

''ரிப்போர்ட் என்ன சொல்லுது?''

''யூஷுவல் கவர்ன்மெண்ட் வழவழா! ராஜ ராஜன் கிணற்றில் தங்கக் காசுகள் போடப்பட்டிருப்பதைப் பற்றிக் கல்வெட்டு செய்திகள் இருப்பது இந்த டிப்பார்ட்மெண்டுக்குத் தெரிந்த விஷயம். அந்தக் காசுகள் மறுபடி பதினாலாம் நூற்றாண்டில் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டு விட்டன என்றும் நாகபட்டன் என்கிற ஒருத்தன் அவைகளைக் கவர்ந்து சென்று விட்டதாகவும் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. இப்போது அந்தக் காசுகள் எங்கிருக்கின்றன யாரிடம் இருக்கின்றன என்பது பற்றிப் பற்பல அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. போலீஸ் டிப்பார்ட்மெண்ட் இது பற்றி மேற்கொண்டு—தகவல் தந்தால் நன்றியுடையவர்களாக இருப்போம்.''

''சரிதான்.''

''அவுங்க என்ன சொல்றுங்க புரியுதா கணேஷ்?''

''தங்கக் காசு இருந்தது கிணத்துல. ஆனா இப்ப இல்லேங்கறுங்க.''

''இருந்தாலும் இருக்கலாம்கறுங்க. நடுவில யாரோ அடிச்சுட்டுப் போயிட்டாங்கன்னு ஒரு பட்டனைச் சொல்றுங்க.''

''இது பற்றிப் பேராசிரியரைக் கேட்டுப் பாக்கறேன். அப்பத்தான் ஊர்ஜிதமாகும். அவர் இந்த வெட்டில எல்லாம் அத்தாரிட்டி.''

''அப்புறம் கணேஷ்! அந்தக் கூழமந்தல் ஆராமி குத்தப்பட்டுச் செத்தான்னு சொன்னீங்க பாருங்க. அதைக் கொஞ்சம் விசாரிச்சேன். அதெல்லாம் சுவாரஸ்யமா இருக்கு. ஆராமி குத்துப்பட்டதுக்கு முதநாள் உக்கல் வந்திருக்கான், ஒரு நண்பரைப் பார்க்கறதுக்கு. அந்த நண்பனைப் பிடிச்சு நேர விசாரிச்சதில தெரிஞ்ச விஷயம் கொஞ்சம் சுவாரஸ்யமா இருக்கு. அந்த ஆள் நண்பன் கிட்டச் சொன்னானாம், உக்கல்ல அந்தக் கிணத்தைச் சுத்தி ஏதோ விநோதமா நடக்குதப்பா. எனக்கு அந்த ராஜ ராஜன் கிணத்தையும் பாக்கறது வேட்டி. 'அதைப் பார்த்துவிட்டு வர நேத்து ராத்திரி போனேன்னு. அங்க கோஷ்டியா நாலேஞ்சு ஆசாமிங்க வான்ல வந்து இறங்கி பக்கெட் பக்கெட்டா அந்தக் கிணத்துல ராத்திரியில தண்ணி இறைச்சாங்களாம். இவன் போய் 'இத பாருப்பா எதுக்காகப் பாழும் கிணத்தில ராத்திரில தண்ணி இறைக்கிறே? இது சர்க்கார் கிணறு. நான் தான் காவல்காரன்'னு சொல்ல அவனைப் போடான்னு விரட்டி விட்டாங்களாம். மறுநாள் அதைப் பத்தி பட்டணத்துக்காரங்க பார்வையாளர்கள் யாராவது வந்தா ரிப்போர்ட் பண்ணப் போறேன் என்று சொன்னானும். அதைச் சொல்றதுக்குத்தான் உங்க கிட்ட வந்திருக்கான் மறுநாள். அதுக்குள்ள குத்தப்பட்டிருக்கான். சுருங்கச் சொன்னா சம்பவ தினத்துக்கு முதல் நாள் வான்ல வந்து தண்ணி இறைச்சிருக்காங்க,

''தண்ணி இறைச்சிருக்காங்களா இல்லே, சேகரிச்சிருக்காங்களா?''

''அதென்னவோ சரியாத்தெரியலே. கிணத்துத் தண்ணியை யாராவது சேகரிப்பாங்களா?''

''அதானே! அப்புறம் ராஜேந்திரன்! அந்த அருணா எண்டர்ப்ரைஸ் பற்றி விசாரிச்சீங்களா?''

''விசாரிச்சுட்டேன் கணேஷ். பிஸினஸ் எல்லாம் பார்த்தா நிழலா ஏதும் இல்லே. எக்ஸ்போர்ட் இம்போர்ட் பண்றுங்க. பெல்ஜியம்ல ஒரு கம்பெனி மிஷினரி ஏஜன்ஸி எடுத்திருக்காங்க. அப்புறம் மேற்கு ஜெர்மனி ஹீடல்பர்க் மாதிரி ஒரு கம்பெனி பிரிண்டிங் மிஷினரி ஏஜென்ஸி. ஆக்சுவல் யூஸர்ஸ் லைசென்ஸில் இறக்குமதி பண்ணி கமிஷன் வாங்கிக்கிறுங்க.''

''எக்ஸ்போர்ட்டிங்?''

''விக்ஸ்.''

''தலேமயிர்?''

''ஆமாம். அது ஒண்டிதான் இந்தியாவில சல்லிசாக் கிடைக்கிற சமாசாரம். ஸ்ட்ரைக் ஏதும் இல்லாமத் தானே வளர்ந்துக்கிட்டு இருக்குது.''

கணேஷ் சிரித்து: ''தலேமயிர்க்குள்ள ஏதும் பொதிந்து இல்லேயே? ஓப்பியம் வைரம்?''

''அப்படியெல்லாம் ஏதும் இருக்கிறதாத் தெரியலே. இருந்தும் இந்தக் கம்பெனியை இன்டெலிஜன்ஸ் லிஸ்ட்டிலே போட்டிருக்கேன். வாட்ச் பண்ணிப் பார்க்கறோம். கணேஷ் சந்தேகப்பட்டா அதில ஏதாவது விஷயம் இருந்துதான் ஆகணும். அருண் பிரசாதோ என்னவோ ஓனர் பேரு. நான் எல்லாத்தையும் நேர விசாரிக்கச் சொல்லியிருக்கேன். கணேஷ், நீங்க என்ன சொல்றீங்க? அந்தக் கிணத்தில தங்கம் இல்லேங்கறீங்களா?''

''நான் இதுவரைக்கும் ஏதும் முடிவுக்கு வரலே ராஜேந்திரன். தனித் தனித் துண்டுகளா இருக்கு. இப்பத்தான் ஒட்ட வைக்கலாமான்னு பாக்கறேன். அந்தக் கிணத்தைப் பாதுகாக்கறதுக்கு ஏற்பாடு செஞ்சுட்டீங்கல்ல?''

''செய்தாச்சு.''

கணேஷ் டெலிபோனை வைத்துவிட்டு: ''வஸந்த்! நீ மறுபடியும் உக்கல் போறியா?''

''சரி பாஸ்.''

''மாறு வேஷத்தில'' என்றுன் கணேஷ்.

(தொடரும்)

Health Clubகளில் . பதின்மூன்று டன் அரைத்த காப்பிப் பொடியில் புதைந்து கிடந்து புத்துணர்ச்சி பெறுகின்றனர் இன்றைய ஜப்பானிய மேட்டுக் குடியினர்! —மினுஸ்கி





ஆஷா
காஸ்மெடிக்ஸ்
ஆஷா பவுடர்: பழுதற்ற அழகு கொஞ்சும் மேனி
ஆஷா காஜல்: கருமையான ஒளிவிடும் கண்கள்
ஆஷா குங்குமம்: உங்கள் முக எழிலின் ஏற்றத்திற்கு இறுதியான ஒப்பனை
Asha
ஐடியல் இன்ஸ்டிட்யூட் பிரை. லிட்., காஸ்மெடிக் டிவிஷன் பம்பாய்-400 083 தொலைபேசி நம். 584585
Deep Designs/TM
மேற்கண்ட தயாரிப்புகளுக்கு உள்ளூர் ஏஜண்ட்கள் தேவை



விரும்பிச் சுவைக்கும் ஊறுகாய்
மம்மி ஊறுகாய்
MAMMI
FPO 3510
எலுமிச்சை, வெங்காயம், மாங்காய், ஆவக்காய், இஞ்சி, தக்காளி, வெள்ளைப்பூண்டு, மிக்சட் வெஜிடபிள், ஊறுகாய் வகைகள்
mammi
தயாரிப்பாளர்கள்
மம்மி ஃபுட் புராடக்ட்ஸ்
திண்டுக்கல் 624 001. தமிழ்நாடு
art ads



சித்தி

கீதா பென்னட்

''போயிட்டு வரேன், சித்தி'' — குரு சொல்லி விட்டு ஒரே நிமிடத்தில் மறைந்து விட்டான். எட்டே வயது இருக்கும். அவனுக்கு அவளிடத்தில் எப்போது ஒட்டுதல் உண்டாகும்? பெரியவன் ரமேஷ் ஒரு 'ரிஸர்வ்ட்' டைப். ''நான் ரொம்பப் புத்திசாலி'' என்று அவன் கண்களே காட்டிக் கொடுக்கும். அதே போல் அவன் ரொம்பப் புத்திசாலிதான். வகுப்பில் எல்லாவற்றிலும் முதல் —ஒரு புத்தகப் புழு— கிரிக்கெட் வீரன்.

இது என்ன ''பெர்ஸனாலிடி அனாலிஸிஸ்?'' வாணிக்குத் தனக்குள்ளாகவே சிரிப்பு வந்தது.

''இவர்கள் எனக்குப் பிள்ளைகள் — என் கணவரின் குழந்தைகள்'' அந்த நினைப்பே அவளுக்கு இதமாய் இருந்தாலும் உள் மனத்தில் சிறிது ஏமாற்றம் ஏற்படாமல் இருக்கவில்லை. ''அம்மா'' என்று கூப்பிட அவளுக்கென்று ஒன்று?

அவள் கணவர் ரங்கனும் வேலைக்குப் போயாயிற்று. வீடே வெறிச்சென்று இருந்தது.

சமையலறை வேலைகளை முடித்துவிட்டு 'நிட்டிங்' செய்யத் தேவையான உபகரணங்களைக் கையில் வைத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தாள். கைகளும் மனமும் வேகமாய் இயங்கின.

அவள் வசதியான குடும்பத்தில் பிறந்தவள்தான். குடும்பம் பல தலைமுறைகளாக வசதியாய் வாழ்ந்தது. அதற்காக மில்லியனேர் இல்லை. சாப்பாடு, துணி என்று அடிப்படைத் தேவைகளுக்கு மன்றாடத் தேவையிருந்ததில்லை. அதெல்லாம் அவளுடைய பதினெட்டு வயது வரைதான். சட்டென்று மாரடைப்பினால் அவள் அப்பா அவர்களை அநாதரவாய் விட்டபோது, அவர் நினைவாய், பல பெரிய கடன்கள் இருப்பது தெரிந்தது.

எல்லாம் போக மிஞ்சியது அவளும், அவள் அம்மாவும், மிகச் சொற்பமாய்ப் பணமும்தான்.

அந்த நிலையில் அவள் படிக்க ஆரம்பித்த கல்லூரியை நிறுத்திவிட்டு, தட்டெழுத்துக் கற்க ஆரம்பித்தாள்.

அப்பா இருந்து பணமும் இருந்திருந்தால் அவள் வாழ்க்கை வேறு விதமாய் அமைந்திருக்குமோ என்னவோ? பத்தொன்பது வயதிலேயே இரண்டாவது மனைவியாய் ரங்கனை மணந்தபோது அவர்கள் வயது வித்தியாசமோ அவருக்கு இரண்டு குழந்தைகள் என்பதோ பெரிதாய்ப் படவில்லை.

நல்ல மனிதர்கள் — எல்லாவற்றுக்கும் மேலாய்ப் பெண் கஷ்டப்பட மாட்டாள் என்ற எண்ணமே வாணியின் அம்மாவை இந்த இடத்துக்குச் சம்மதிக்க வைத்தது.

ஆனால் முதல் இரவன்று அவளுக்குக் கிடைத்த ஷாக்! ரங்கன் அவளிடம் எதையும் மறைக்கவில்லை. முதல் மனைவி சகுனாவிடம் வாழ்ந்த இனிமையான வாழ்க்கை — அதன் பலனாய் இரண்டு பையன்கள் — அதற்கு மேல் வேண்டாம் என்று அவர்கள் தீர்மானித்துவிட்டது வாணியின் தலையில் இடியாய் விழுந்தது.

குழந்தைகள் வேண்டும் என்று ஆசைப்படாத பெண் யார்? 'அம்மா' என்று வாய் நிறைய அழைக்க வேண்டும் என்று இருந்தவளுக்கு 'சித்தி'என்று அழைக்க மட்டுமே இரண்டு குழந்தைகள் கிடைத்தது ஏன்?

அதிலும் ரமேஷ் சட்டென்று எதையாவது சொல்லிவிடுவான். ''எங்கம்மா இருந்தா அப்படிச் செய்ய மாட்டா'' என்று நிறைய தடவை சொல்லியிருக்கிறான். அவர் கூட தப்பித் தவறி, ''சகுனா அப்படி நடந்து கொள்வாள், இதைச் செய்வாள், சொல்வாள்'' என்று சொல்லி விடுவார். இந்தக் குடும்பத்தையும் இனியதாக்கவேண்டும் என்ற எண்ணமும், அதற்கு மேல் 'தான் அதில் ஒரு நபராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்' என்ற ஆவேசமும் அவளுக்கு நிறைய இருந்தது.

அவள் மதியம் ஒரு மணி சுமாருக்கு நிட்டிங் வேலையை வைத்துவிட்டு, மத்தியான டிபனுக்குச் சமையலறையை நோக்கி நடக்க ஆரம்பித்தபோது, கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

''யாராயிருக்கும்?'' — சமீபத்தில் படித்த பட்டப் பகல் கொலைகள் பற்றிய நினைவு ஒரு நிமிடம் அவளுக்குத் திகில் ஊட்டியது.

குரு உள்ளே நுழைந்தான்.

நேராக மாடிக்குப் போய்விட்டான்.

ஒரு நிமிடம் வாணிக்குச் சுருக்கென்றது.

அப்படிச் சட்டென்று தூக்கி எறியும் குணம் இல்லை அவனுக்கு. அதுவும் பள்ளி நேரத்தில் திடீரென்று இப்படி வீட்டுக்கு வருவானேன்? ஒருவேளை உடல்நிலை சரியில்லையோ?

அவள் மெதுவாய் மாடிப் படி ஏறினாள்.

குரு கட்டிலில் குப்புறப் படுத்திருந்தான்.

''உடம்பு சரியாயில்லையா? இரண்டு ஆஸ்பிரின் தரவா?''

அவன் 'வேண்டாம்' என்று தலையாட்டினான்.

அவனாகப் பேசட்டும் என்று அவள் வாளாவிருந்தாள்.


''என் கிளாஸ் வாத்தியார் இன்னிக்கு ரொம்பத் திட்டினார். கணக்கு மாதாந்திர டெஸ்டிலே இருபது மார்க் வாங்கியிருக்கேன். உங்கண்ணா ரமேஷ் எவ்வளவு புத்திசாலி? எல்லாத்திலேயும் முதல். விளையாட்டிலே புலி. நீ இப்படி இருக்கிறாயே என்றார்'' —அவன் ஒரு நிமிடம் நிறுத்தினான். வாணிக்குப் பாவமாக இருந்தது.

''எல்லோரும் என்னை ரமேஷோட 'கம்பேர்' பண்றாங்க. நான் • கணக்கிலே மட்டும்தானே வீக். நான் பண்ற மத்ததெல்லாம் ஒருத்தர் கண்ணிலேயும் படற தில்லே. எல்லோரும் ரமேஷ் மாதிரி நானும் இருக்கணும்னுதான் சொல்றா'' — அவன் குரலில் ரமேஷிடம் பொறாமை இல்லை. ஆனால் தன்னை ஒருவரும் மதிக்கவில்லையே என்ற ஏக்கம் மட்டும் இருந்தது.

அந்த எட்டு வயதுச் சிறுவனைப் பார்க்கும் போது அவளுக்குப் பாவமாயிருந்தது.

அதே சமயத்தில் ஏதோ ஒன்று மனத்தில் உறைக்க அவனை நேருக்கு நேர் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்.

''குரு! கம்பேர் பண்றது மனித இயல்புதான். உன்னை ரமேஷோடு கம்பேர் பண்ணுகிறார்கள். என்னை.... உன் அம்மாவோட! ஏன் தெரியுமா? ஒருத்தரைப் பழகினதுக்கப்புறம் அவாளை மாதிரியே அந்த இடத்தை நிரப்ப வரவாளும் இருக்கணும்னு நினைக்கறது மனித இயல்பு. நான் நல்லவளா இருக்கலாம். உங்கம்மாவைவிட உன்னிடத்திலே, உன் அப்பாவிடத்திலே அன்பா இருக்கலாம். ஆனா நான் வேறுபட்டவள். உங்கம்மா இல்லை. அதனாலேதான் உங்கப்பா அடிக்கடி 'சுகுணா இப்படிச் செய்வா'ன்னும் ரமேஷ், 'எங்கம்மா இருந்தா இப்படிச் சொல்லுவா'ன்னும் சொல்ல முடிகிறது. அதே காரணத்துக்காகத்தான் நீ என்னை



'சித்தி'ன்னு கூப்படாதே. அம்மான்னு கூப்பிட்டா உங்கம்மா மாதிரி நானும் ஆனதை ஒப்புத்துக்கற மாதிரி ஆயிடும்'' — அவள் மூச்சு விடாமல் பேசினாள். குரு அவளையே வைத்த கண் வாங்காமல் நோக்கினான். அவனுக்கு ஏதோ புரிந்தது.

அவள் சட்டென்று கேட்டாள்.

''உனக்குப் பிடிச்ச டிபன் பூரி, உருளைக் கிழங்கு சப்ஜி பண்ணட்டுமா?''

அவன் எதுவும் சொல்வதற்கு முன் அவள் எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

''நீங்க போங்க சித்தி! நான் கொஞ்ச நாழியிலே கீழே வரேன்.''

அவள் சமையலறைக்குச் சென்று பூரிக்கு மாவு பிசைய ஆரம்பித்தாள்.

அவனிடம் அதிகமாகப் பேசிவிட்டோமோ மனத்தில் இருந்ததைச் சட்டென்று கொட்டி விட்டோமோ என்று ஒரு கணம் தயக்கமாய் இருந்தது.

சப்ஜிக்குக் கிழங்குகளை வெட்டி அடுப்பில் ஏற்றும்போது சமையல் அறை வாசலில் நிழலாடியது.

''அம்மா... நான் பூஸ்ட் கலந்துக்கவா?''

அவளால் தன் காதுகளை நம்ப முடிய வில்லை.

குருவைத் திரும்பிப் பார்த்தபோது, அவன் முகத்தில் வெட்கமும் சந்தோஷமும் ததும்பி யிருந்தன.

அவள் கண்களில் நீர் துளிர்த்தது.

''இனி உங்களை அம்மான்னு கூப்பிடற திலே ஆட்சேபணை இல்லையே! சொல்லப் போனா நீங்க என் அம்மாவை விட இன்னும் நல்லாக் கவனிச்சுக்கிறீங்க.''

அவள் அவனது தோள்களை ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள். அவள் உள்ளம் பெருமிதத்தில் விம்மியது.

''நான் ஸ்கூல்லே படிக்கும்போது கணக்கு நல்லாப் போடுவேன். இனிமே சாயந்திரம் ஒரு மணி நேரம் உனக்குக் கணக்கு டியூஷன். அடுத்த டெஸ்டிலே நூற்றுக்கு நூறு வாங் கணும்.''

''சரி, மம்மி'' என்று அவன் வேண்டு மென்றே மிக அடக்கமாக 'மம்மி'யை அழுத்தி — குறுநகையோடு சொன்னபோது இருவரும் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

விடியும் வரை



காத்திரு

● காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்! — சரியாய் இதை ஞாபகம் வைத்திருக்கும் பாக்யராஜ் இந்த முறை த்ரில்லருடன் வந்திருக்கிறார்.

பாட்டும் பரதமும் போட்டியிட பரதம், தோற்கிறது. நாட்டியக்காரி அக்கா தற்கொலை. தங்கை அதனால் பைத்தியம். ஏராளமான சொத்து. என்ன செய்வது என்று முழிக்கும் தந்தை. அத்தனையும் தன் வசமாக்கப்பெரிய வலை விரிப்புடன் நுழையும் ராஜா. நற்சேவகனாய், நண்பனாய் என்று உருமாறிக் கணவனாகிறான், கடைசியில். தீர்த்துவிட்டோம் என்றிருக்கையில் திரும்பும் மனைவி — திகில்! அடுத்தடுத்து முயற்சி. அத்தனையும் அம்பேல். துரத்தும் போலீஸ். வசமாய்ப் பிடிபட, அறியாமல் சுடப்பட்டு மனைவி சாக. தானும் சரண்.

இளையராஜாவின் இசை. தரத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது தெரியாமற் போகும் அளவுக்குக் கதைத் திருப்பங்கள். கதைதான் படத்தின் ஜீவநாடி. த்ரில்லர் படத்திற்குத் தேவையான புத்திசாலித்தனமும், சுறுசுறுப்பும் ஏ.வி. ராமகிருஷ்ணனின் ஒளிப்பதிவில் அநியாயமாய் இல்லை.

பாட்டும் — பரதமும் காட்சியில் ஒளிப் பதிவு, இசை, எடிட்டிங் மூன்றும் ஒன்றோடொன்று மோத ஜொலிக்கிறது.

கொலைகாரனுக்குத் தேவையான பாவமும் பார்வையும் இல்லாமல் திணறும் பாக்யராஜ் ராஜா கேரக்டருக்குப் பொருத்தமே இல்லை. கராத்தே புலி ஆர்விடி மணி இதில் எலி.

கதையில் இல்லாத லாஜிக், வசனங்களில் இருக்கிறது. இழுக்கும் முன் பகுதிக்கு ஈடாய்ப் பின் பகுதி வெகு வேகம்.

ஓடிக் கொண்டிருக்கும் பாக்யராஜின் இரண்டு படங்களின் கூட்டில் இதுவும் கதகதப்புப் பெறும். —''சிந்து-ஜீவா''

''வெறகு அடுப்பெல்லாம் யூஸ் பண்ணக் கூடாது. ஸ்டவ்தான் வச்சிக்க ணும்.''

''கரி அடுப்பு யூஸ் பண்ணலாங்களா?''

''புகைவந்தா அடுத்த நிமிஷமே வீட்டைக் காலி பண்ண வேண்டி யிருக்கும்.''

''ஊதுவத்தி?'' — எரிச்சலை அடக்கிக் கொண்டு கேட்டுவிட்டு அப்புறம் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசி விட்டோமோ என்று பயந்து செயற்கைத்தனமாகச் சிரித்தான் லீலா.

அவர் எதையும் சட்டை செய்யாமல், ''ஒண்ணு ரெண்டு பத்தவச்சாத் தப்பில்லே'' என்றார்.

பொங்கி வந்த கோபத்தை அடக்கிக்-கொண்டு உட்கார்ந்திருந்தான் லீலா. இனி எத்தனை மணிக்குத் தூங்க வேண்டும், எத்தனை மணிக்கு எழுந்திருக்க வேண்டும், லெட்ரின், பாத்ரூம் நேரங்களையெல்லாம் குறித்துத் தருவாரோ என்று காத்திருந்தவனைப் பெருந்தன்மையாக ''நாளைக்கு அட்வான்ஸ் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சாவியை வாங்கிக்குங்க'' என்றார்.

கட்டிலில் படுத்துக் கொண்டு புது வீட்டை ஒரு நோட்டம் விட்டான் லீலா. நீல வானம் போல் பளிச்சென்றிருந்தன சுவர்கள். ஆணி அடிக்கக் கூட மனசு வராதுதான். அதற்காகக் குடியிருக்கும் வீட்டில் புகையேவரக் கூடாது என்றால் எப்படி? என்று நினைத்துக்கொண்டான். இப்போது தனிக் கட்டை. எப்படியோ சமாளித்துக் கொள்ளலாம். கல்யாணத்துக்குப் பிறகு? 'மண் எண்ணெய் என்றால் என்ன அண்ணே?' என்று ரேஷன் கடைக்காரனை கேலி பேசும் அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கும்போது ஸ்டௌதான் யூஸ்

ஹனி ஐ லவ் யூ...

ஸ்ரீஜ



பண்ணனும் என்று கண்டிஷன் போடுவது அநியாயம் இல்லையா... அக்கிரமம் இல்...

'சுருக்'.

'டபக்' கென்று கட்டிலின் மீது எழுந்து உட்கார்ந்தான். விரிப்பு மடிப்பின் இருட்டை நோக்கிப் போட்டி போட்டு ஓடிக் கொண்டிருந்தன இரண்டு மூட்டைப் பூச்சிகள்.

விரிப்பு மடிப்பை நோக்கியபோது ஏழெட்டு மூட்டைகள் ரேஸ் குதிரைகளாகப் பாய்ந்து திசைக்கொன்றாக ஓட எதைப் பிடிப்பது என்று புரியாமல் விழித்தான் லீலா. சுவரின் மேல் மளமளவென்று ஏறிக்கொண்டிருந்த ஒரு மூட்டைப் பூச்சியை அப்படியே நசுக்க விரலைக் கொண்டு சென்றபோது வீட்டுக்காரர் அதன் முதுகில் நின்றுகொண்டு 'சுவரில் கறை விழுந்தால், முதுகில் அறை விழும்' என்று மிரட்டினார்.

'என்னடா இது ரோதனையாப் போச்சு' என்று சலித்துக் கொண்டான் லீலா.

படுக்கையை ஒரு தடவை நன்றாக உதறி விட்டுப் படுத்தான். கொஞ்ச நேரத்தில் கழுத்தோரத்தில் லேசாக நெருடல்—காதோரத்தில் 'உய்ய்ய்ங்' என்ற ரைமிங். தாங்க முடியாமல் எழுந்து சப்பணங்கால் போட்டு உட்கார்ந்து விட்டான்.


'ஏர் அட்டாக் வேறயா' என்று எரிச்சலுடன் கொசுக்களைப் 'பட்பட்' டென்று அடித்து — தான் அடி வாங்கி ஓய்ந்து போனான் லீலா.

• • •

''என்ன ராத்திரி பூராவும் ஒரே கைதட்டல் மாடியிலே. என்னால் தூங்கவே முடியலே'' என்று வீட்டுக்காரர் கேட்டதும், இவ்வளவு அவ்வளவு என்று கூற முடியாத கோபம் வந்தது லீலாவுக்கு. 'ஆமாய்யா, ராத்திரி பூராவும் உன் வீட்டு மூட்டைப் பூச்சிகளோடும், கொசுக்களோடும் கும்மி அடிக்க விளையாடிட்டிருந்தேன்' என்று தனக்குள்ளேயே பொரிந்து கொண்டான்.

''ஏன் ஸார்... வீட்ல மூட்டைப்பூச்சி

ச ல ன ம்



பெண்ணிடம் மயங்கிப் பெற்றது என்ன?
பெருமூச்சு விடைகள் பேச்சின்றிப் பிறக்கும்.
தத்துவச் சுழிப்பில் தடுமாறும் உள்ளம்.
புயலாகும் மனது ஒரு பொழுதுக்கு ஓயும்.
ஆனால்
மஞ்சளை, சிவப்பை —
மணம் பரப்பும்
மல்லிகை, கதம்பத்தை
கண்டுவிட்ட உடனே
கண்போகும் பின்னே.
நிமிஷப் பொழுதில் நிறம்மாறும் ஒந்தி
நிலையில்லா மனமே உனக்கெப்போது சாந்தி?

— அகல்யா

இருக்கும்போலிருக்கு. நான்வேணும்னு, மூட்டைப் பூச்சி மருந்தைக் கொண்டாந்து அடிச்சிடட்டுமா?''

ஒரு நிமிடம் யோசித்து விட்டு, ''செய்யுங்க. ஆனா ஒரு கண்டிஷன்'' என்றார்.

வாசம் எதுவும் வரக் கூடாது என்று சொல்லப் போகிறாரோ என்று பயந்தான் லீலா.

''மருந்தை இப்ப இருக்கிற டிஸ்டம்பரோட கலரிலேயே அடிக்கணும். கலரில் வித்தியாசம் எதுவும் தெரிய கூடாது.'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் அவர்.

லீலாவும் ஏதோ ஐடியா செய்து அதே கலரில் ஒரு பொடியை வாங்கி மருந்தில் கலந்து அடிக்க — அந்தப் பொடியின் கைங்கரியமோ என்னவோ ஏழெட்டு தடவைகள் 'பம்பிங்' செய்வதற்குள் 'பம்ப்பா, புல் வொர்க்கரா' என்று மூச்சு வாங்க ஆரம்பித்து விட்டான். அப்புறம் அதுவும் முடியாமல் போய் 'வருவேனா வெளியே' என்று சொல்லிவிட்டது மருந்தும்.

வம்பை விலைக்கு வாங்கியதைப் போல பம்ப்பைப் பார்த்துக் கொண்டு இடிந்து போய் உட்கார்ந்து விட்டான் லீலா. மூட்டைப் பூச்சிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து அவனைச் சுற்றி 'மூட்டை கட்டு' என்று கும்மாளம் அடிப்பதைப் போல இருந்தது.

திடீரென மாடிப் போர்ஷனில் 'அய்யய்யோ... அய்யய்யோ' என்று வீட்டுக்காரரின் மனைவி சப்தம் போடுவதைக் கேட்டதும் விருட்டென்று எழுந்து வெளியே ஓடிவந்தான்.

வீட்டுக்காரரும், அவருடைய மனைவியும் டவலால் தங்களுடைய முதுகையும், தலையையும் அடித்துக் கொண்டே வெளியே ஓடிவந்து மூச்சிறைக்க நின்றார்கள்.

''என்ன சார்? என்ன ஆச்சு?'' என்றான் லீலா.

தன் உடம்பையும், தலையையும் டவலால் நன்றாகத் தட்டிவிட்டு; ''தேனீ'' என்றார் மூச்சு வாங்க. ''எங்கிருந்து வந்துச்சோ அவ்வளவும்.''

மெதுவாக உள்ளே சென்று எட்டிப் பார்த்தான் லீலா. ஆகா... அறைக்கு நாலுவது தேறும். சுவரெல்லாம் டிசைன் போட்டு உட்கார்ந்திருந்தன தேனீக்கள்.

வெளியே வந்து, ''யாராவது கூட்டைக் கலைச்சு விட்டிருப்பாங்க சார்!'' என்றான்.

''தெரியுதய்யா'' பின்னே அதெல்லாம் என்னோட பேரம் பேத்திகளா என்னைத் தேடி வரத்துக்கு? இந்தத் தெருவிலே எத்தனை வீடுக இருக்கு. என்னோட வீடுதானா கெடச்சுது!'' என்றார் எரிச்சலுடன்.

லீலாவுக்குத் திருப்தியாக இருந்தது.

''என்ன பராக்குப் பார்த்துட்டு. இப்பவே அதை யெல்லாம் வீட்டை விட்டுத் துரத்தணும்'' என்றார் வீட்டுக்காரர்.

''ஜீ.....பூ....ம்...பா...'' என்று அட்டகாசமாக ஒரு ஐடியா உதித்தது லீலாவுக்கு.

''ஒரே வழிதான் இருக்கு சார்'' என்றான்.

''என்ன?''

''தீப்பந்தத்தாலே அடிச்சாத்தான் அதுகளைத் துரத்த முடியும்!''

''அய்யய்யோ, சுவரெல்லாம் நாசமாப் போயிடுமே!'' என்றார்.

''இப்ப மாத்திரம் அங்கென்ன சுவரா சார் இருக்கு? தேனீக்களுக்கு மத்தியிலே அங்க கொஞ்சம் இங்க கொஞ்சம் தெரியுது!''

கொஞ்ச நேரம் குழம்பிவிட்டு ''ஏதாச்சும் செஞ்சு அதுகளைத் துரத்தியடிங்க'' என்று வீட்டுக்காரர் சொல்லி முடிக்கும்போது, ஒரு பழைய வேட்டியை 'டர்பர்' ரென்று கிழித்து ஒரு குச்சியில் சுற்றி ஸ்டவ்வைத் திறந்து அதற்குள் ஊற வைத்துவிட்டான் லீலா. பழைய பாலிதீன் பைகளைக் கைகளிலும் தலையிலும் நுழைத்துக்கொண்டவன், வீட்டுக்காரரிடமே தீப்பெட்டி வாங்கி ஊறிய பந்தத்தைப் பற்ற வைத்தான்.

எரியும் பந்தத்தை ஒரு விநாடி வெற்றி வீரனைப் போலப் பார்த்து விட்டு, இலங்காபுரிக்குள் பாய்ந்த அனுமனைப் போல் ஆனந்த ஆவேசத்துடன் வீட்டுக்காரரின் போர்ஷனுக்குள் பாய்ந்தான்.

உள்ளே நுழைந்ததும் தேனீக்கள் பரவி யிருந்த சுவர்ப் பக்கத்தில் செல்லாமல் இள நீல நிறத்தில் சுத்தமோ சுத்தமாகப் பளிச் சென்றிருந்த சுவர் அருகே வந்து நின்று அதைப் பார்த்துக் கிறுக்குத்தனமாக ஒரு புன்னகை பூத்தான். மறு கணமே வெறி யோடு பந்தத்தை ஓங்கி மத்தி சுவரில் 'தப்' பென்று தப்பினான்.

அட்டைக் கரியில் விழுந்த அலங்கோல டிசைனைப் பார்த்து விட்டு அட்டகாசமாகச் சிரித்தான்.

அப்புறம் அறை எங்கும் ஆசை தீரத் தீப்பந்தத்தைச் சிலம்பம் ஆட ஆரம்பித்து விட்டான்.

பத்தே நிமிடங்களில் வசந்த மாளிகை யாய் இருந்த வீட்டை விட்டலாச்சாரியா குகையாக மாற்றி யமைத்து விட்டு வெற்றிப் புன்னகை தவழ வெளியே வந்தான் லீலா.

''என்ன தம்பி! எல்லாம் போயிடுச்சா?'' என்றாள் வீட்டுக்காரரின் மனைவி ஆவ லோடு.

''போச்சே, எல்லாம் போச்சே'' என்று உள்ளே போன வீட்டுக்காரர் அலறுவது தேனாக வந்து பாய்ந்தது லீலாவின் செவி களில்.

அடுத்த நாள்:

''சார்!'' என்று தயங்கியபடி நுழைந் தான் லீலா.

வீட்டுக்குள் புகுந்துவிட்ட ஆமையைப் பார்ப்பது போல் பார்த்தார் வீட்டுக்காரர்.

''கடையிலே கெரசினே கெடைக்க மாட் டேங்குது...'' — இழுத்தான் லீலா.

''வீட்டுக்குள்ளாரத் தோண்டிப் பார்த் துட்டா என்னங்கிறீங்களா?''

நேற்றைய சம்பவத்தின் எரிச்சல் அவ ருடைய பேச்சில் தெரிந்தது.

''கொஞ்சம் வெறகு வாங்கி யூஸ் பண்ண லாமான்னு...''

வார்த்தைகளை முடிக்கு முன் அவனை முறைத்துப் பார்த்தார் வீட்டுக்காரர். அப் படியே அவருடைய பார்வை சுவர்ப் பக்க மாகச் சென்றபோது, அவருடைய கண் களில் 'தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன, முழம் என்ன' என்று யாரோ பாடினார்கள்.

''போங்க வாங்கி யூஸ் பண்ணுங்க'' என்று தளர்ந்த குரலில் சொன்னவர், ''ஆனா ஒரு கண்டிஷன்!'' என்றார்.

என்ன கண்டிஷனோ என்று பயந்தான் லீலா.

''என் மச்சினன் விறகுக் கடை வெச் சிருக்கான். விறகை அங்கேதான் வாங் கணும்'' என்றார்.

''நிச்சயமாக!'' என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்ததும், காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு 'ஹனி பீ ஐ லவ் யூ' என்று பாட ஆரம்பித்து விட்டான் லீலா உற்சாகத்துடன், படு உற்சாகத்துடன்.



சுமை

அமர்க்களமாய் ஆரம்பிக்கிறது படம். பொறுப்பற்ற அப்பன். பொறுமை பூஷண மான அம்மா. விதத்துக்கொரு ஜாடையில் பத்தே குழந்தைகள். பாரம் முழுவதும் மூத்தவன் சத்யன் (சந்திரசேகர்) தலையில். விதவைத் தங்கை பக்கத்து வீட்டு வாலிப னால் கர்ப்பமுற்றுப் பின் மனைவியாகிறாள்.

பசி, பசி என்று படம் முழுவதும் துடிக்கும் குழந்தைகள். இறுதியில் எல்லோரையும் ஒன்று சேர்த்து ரத்தம் கக்கிச் சாகிறான் சத்யன். அவனைக் காப்பாற்ற அனாவசிய மாகச் சோரம் போகும் இளம் பெண்ணும் (காதலி அல்ல!) சங்கராபரணம் ஸ்டைலில் உயிர் விடுகிறாள்.

பிரமாதமாகச் செய்திருப்பவர்கள்—சந்திர சேகர், சாமிக்கண்ணு, உஷா. எஸ். வி. சேகரும், காயத்ரியும் 'ஏ' சர்ட்டிபிகேட் டுக்கு உதவுகிறார்கள். கல்லாப் பெட்டி சிங் காரத்தின் க(ாம)டி போக நாம் சிரித்து மகிழ சீரியஸான காட்சிகள் பல உண்டு. உதாரண மாய் அனுமந்து அழுதுகொண்டே வீணை வாசிப்பது, சங்கிலி முருகனின் நடுத்தெரு போர், நாடி பார்த்துக் கர்ப்பம் அறிவது இத்யாதி, இத்யாதி. சினிமாச் சிறுவர்கள் எப்பவும் அதி அற்புத அறிவு ஜீவிகள். இதிலும் ஜட்டி கூடப் போட மனமில்லாத கடைக்குட்டி சுவரில் மணிவாசகங்கள் எழு தித் தள்ளுகிறான்.

நிறைய டைரக்டர்களின் பாதிப்பு இந்தப் பட டைரக்டரிடம் தெரிகிறது. இரண்டே பாடல்கள் — அபத்த நடனங்களுடன். கங்கை அமரன் கஷ்டப்படுத்துகிறார். லோகேஷின் காமரா மீது பாவப்படலாம். ஹூம்... பொட்டில் அடித்துத் தெறிக்கும் வசனங்கள் படத்தின் தனிச் சிறப்பு. நல்ல கதை. அருமையான நடிகர்கள். சொல்ல வந்ததை நேராகச் சொல்லி யிருந்தால், இராம. நாராயணன் நமக்கு இன்னொரு 'பசி'யைத் தந்திருப்பார்.

''சிந்து-ஜீவா''

ரிலையன்ஸ்

கடந்த காலம் முழுவதும் 2 லட்சத்திற்கும் அதிகமான
பங்குதாரர்கள் மற்றும் டிபஞ்சர்–வைத்திருப்பவர்களுக்கு மிகவும்
நன்மைகள் நிறைந்த காலம்

டிபஞ்சர்
வரிசை I
1979 அக்டோபரில்
ஒவ்வொன்றும்
ரூ. 500க்கு
வெளியிடப்பட்டன.
19 மாதங்களில்
அவை ரூ. 487
(97%) ஆதாயம்
தந்து விட்டன.

டிபஞ்சர்
வரிசை II
நவம்பரில் 1980
ஒவ்வொன்றும்
ரூ. 125க்கு
வெளியிடப்பட்டன.
இந்த உரிமை
டிபஞ்சர்கள்
முன்னமேயே
ரூ. 160க்கு மதிப்
பேற்றம் பெற்றுவிட்டன.

எதிர்காலம் இன்னும் ஒளிமயமாக இருக்கும்.

இப்போது ரிலையன்ஸ் டெக்ஸ்டைல்ஸ் அறிவிக்கும் 13.5% மாற்றக்கூடிய முழுவதும் பாதுகாப்புள்ள டிபஞ்சர்கள்

டூபான்ட், அமெரிக்காவின் தொழில் நுட்ப கூட்டுறவுடன் அமைக்கப்படவிருக்கும்
ஆண்டுக்கு 10,000 டன் உற்பத்தி செய்யும் பாலியெஸ்டர் ஃபிலமெண்ட்
இழைத் திட்டத்துக்கு பகுதியாக 79.50 கோடி ரூபாய் நிதி உதவி ஏற்படுத்துவதற்கு
ரிலையன்ஸ் டெக்ஸ்டைல்ஸ் விரைவிலேயே பொது மக்களுக்கு
ஒவ்வொரு டிபஞ்சரும் ரூ. 125-, மொத்தம் ரூ. 24 கோடி, மதிப்புள்ள மாற்றக்
கூடிய முழுவதும் பாதுகாப்புள்ள டிபஞ்சர்களை வழங்கப் போகின்றனர்.

டிபஞ்சர்கள்

...கள் ஏன் முதலீடு செய்யவேண்டும் என்பதற்கு 7 காரணங்கள்.



1 முழுக்க முழுக்கப் பாதுகாப்பு: இந்த டிபஞ்சர்கள் கம்பெனியின் நிலையான சொத்துக்களுக்கெதிராக முழுவதும் பாதுகாப்புடையவை.

2 எளிதில் ரொக்கமாக மாற்றிக் கொள்ளமுடியும்: இந்த டிபஞ்சர்கள் பம்பாய், அஹமதாபாத், டெல்லி, கல்கத்தா, சென்னை மற்றும் பெங்களூரிலும் பங்கு மாற்று நிலையங்களில், பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

3 நிலையான வருமானத்துக்கு உத்தரவாதம்: ஆண்டு ஒன்றுக்கு 13.5%

4 மதிப்பேற்றம்: 1982, ஆகஸ்டு 31ந் தேதி ரூ. 25 மதிப்புள்ள டிபஞ்சர் ஒன்றுக்கு ஒரு ஈக்விட்டி பங்கை ஒதுக்குவதால் (தற்போதைய மார்க்கெட் விலை ரூ. 95) முதலீடு செய்பவருக்கு மூலதனத்தின் மதிப்பேற்ற நன்மை கிடைப்பதோடு நிறுவனத்தின் எதிர்கால வளமையில் பங்கு ஏற்கும் வாய்ப்பும் உண்டாகிறது.

5 கொழுத்த ஆதாயம்: 54% அல்லது அதற்கு மேலும்: ஒதுக்கும்போது பங்கின் விலை ரூ. 100 - என்று வைத்துக் கொண்டால், முதலீடு செய்பவரின் நிகர முதலீடு டிபஞ்சர் ஒன்றுக்கு ரூ. 25 மட்டுமே. மாறாக அவருக்கு தொடர்ந்து ரூ. 100 மீது வருட வட்டி ரூ. 13.50 அதாவது 54% கிடைக்கும். பங்குகளின் விலை அதிகமானால் கிடைக்கும் ஆதாயமும் அதிகம். அத்துடன் முதலீடு செய்பவர் மீட்கும்போது அசல் தொகையான ரூ. 100 வரி இல்லாமல் அப்படியே பெறுவார்.

6 போனஸ்: கம்பெனியின் ரிசர்வ்களும் போனஸ் வெளியீட்டின் தற்போதைய வழிகாட்டி முறைகளும் 1982ல் போனஸ் பங்குகளை அறிவிப்பதற்கு கம்பெனிக்கு உதவும். அப்படிச்செய்தால் ஒதுக்கப்படவிருக்கும் ஈக்விட்டி பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக்கப்படும்.

7 கடந்த காலம் பல நன்மைகளை உடையது

வெளியீடு	மதிப்பேற்றம் / ஆதாயம் (ஏப்ரல் 1981 வரை)	வழங்கப்படும்போது பங்கின் விலை	தற்போதைய பங்கின் விலை (ஏப்ரல் 1981)
ஈக்விட்டி பங்குகள் நவம்பர் '77 ஒவ்வொன்றும் ரூ. 10	42 மாதங்களில் 1155% மதிப்பேற்றமும் ரூ. 11.37 டிவிடெண்டும்	ரூ. 10	ரூ. 95
டிபஞ்சர் வரிசை-I அக்டோபர் '79 ஒவ்வொன்றும் ரூ. 500 *	19 மாதங்களில் ரூ. 487 (97%)	ரூ. 55	ரூ. 95
டிபஞ்சர் வரிசை-II நவம்பர் '80 ஒவ்வொன்றும் ரூ. 125	6 மாதங்களில் மதிப்பேற்றம் ரூ. 160 அத்துடன் ஆண்டு ஒன்றுக்கு 12% வட்டி	ரூ. 65	ரூ. 95, 31.12.1981ல் மாற்றிக் கொள்ளலாம்
தற்போதைய டிபஞ்சர் வெளியீடு ஒவ்வொன்றும் ரூ. 125	13.5% வட்டி ஆண்டு ஒன்றுக்கு	ரூ. 95	ரூ. 95 - 31.8.1982 போது ஒரு பங்கு ஒதுக்கல்

இப்போதுள்ள பங்குதாரர்கள், வரிசை I மற்றும் வரிசை IIன் டிபஞ்சர்களை வைத்திருப்பவர்கள், கம்பெனியில் டெபாசிட் வைத்திருப்பவர்கள் முன்னுரிமை அடிப்படையில் இந்த டிபஞ்சர்கள் வழங்கப்படுவார்கள்.

VIMAL®
A RELIANCE PRODUCT

ரிலையன்ஸ் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: கோர்ட் ஹவுஸ், திலக் மார்க், தோபிதலாவ், பம்பாய் 400 002.

...ர்ச்சியையே வாழ்க்கை முறையாகக் கொண்ட நிறுவனத்தில் முதலீடு செய்க.

வெளியீடு
10-6-1981

Mudra/RTI/273 Tam.

'லேடி ஜானி' எப்போது உருவாகும்?



கொறிப்பதற்குக் கொஞ்சம்

- 'லேடி பில்லா' என்ற பெயரில் புதுத் தமிழ்ப் படம் உருவாகிறதாம். 'லேடி காளி' 'லேடி ஜானி' எப்போது உருவாகும்?

- எழும்பூர் மாநிலப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் சுவரில் காணப்பட்ட ஒரு வாசகம்: ''கோவிலுக்குப் போவது மட்டுமல்ல. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுக்குப் போவதும் கூட. நம்பிக்கைதான்!''

- பூக்கடை பஸ் ஸ்டாப். என்னுடன் 18லிருந்து உதிர்ந்து கொண்ட ஒருவர், ''ஸார், பூக்கடை ஆபீஸ் எங்கேஇருக்கிறது?'' என்றார். பூக்கடை தெரியும். ஆனால் பூக்கடை ஆபீஸ் எங்கே உள்ளது? மிக்க சிரமத்துக்குப் பின்பு, சென்ட்ரல் அருகே உள்ள கிறித்துவ இலக்கிய சங்கத்தாரால் வெளியிடப்படும் ''பூக்கூடை'' என்னும் இதழின் அலுவலகத்தை அவர் தேடிக் கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது.

- ஸ்டெர்லிங் ரோடு. வேகமாகச் சென்றது ஓர் அம்பாஸிடர். அதன் நெற்றியில் காணப்பட்ட வாசகம்: ''Queen killers!'' காரில் இருந்த வாலிபர்களைப் பார்த்தபோது தலைப்பு பொருத்தமே எனத் தோன்றியது.

- 'குடவாயில் கோட்டம்' – நாடக அரங்கேற்றம். ''என்னை யாரும் மதிப்பதில்லை. உலகத் தமிழ் மகாநாட்டுக்கு என்னை யாருமே அழைக்கவில்லை'' எனக் கண் கலங்கினார் கோவி மணிசேகரன். ''வேகமாக இயங்கும் உலகில் 'முன்னேற்றம்' என்னும் ரயிலில் நாம்தான் ஏறி இடம் பிடித்துக் கொள்ள வேண்டுமே தவிர, யாராவது நம்மை ஏற்றி விடுவார்கள் எனக் காத்திருக்கக் கூடாது'' என கோவிக்குப் பதில் கூறியவர் அமைச்சர் ஆர். எம். வீ.

- முதல்வர் எம். ஜி. ஆர். தம் தோட்டத்தில் தாய் சத்தியாவுக்கு ஒரு கோயில் கட்டி வைத்துள்ளார். முதலமைச்சர் வெளியே புறப்படும்போது கோவிலின் முன்னே கார் ஒரு நிமிடம் நிறுத்தப்படுகிறது. தாயை வணங்கிய பிறகு அவர் வெளியே புறப்படுகிறார்.

தொகுப்பு: **யெம்ஜி**

- கல்கத்தாவில் அரசாங்கப் பேருந்துகளில் உடம்பின் இரண்டு பக்கங்களிலும் கம்பெனி விளம்பரங்கள் பெயிண்ட் அடிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் பேருந்துகளுக்கு விளம்பர வருவாய் கிடைக்கிறது. குறிப்பிட்ட கம்பெனிகள் பெயிண்ட் அடித்து விடுவதால் பெயிண்ட் செலவும் மிச்சம்.

- கல்கத்தாவில் மின்சாரத் தடை காரணமாக சினிமாக் கொட்டகைகளில் குளிர்சாதன வசதி இல்லாதபோது கட்டணத்தைக் குறைத்துக் கொள்கிறார்கள்.

- கல்கத்தாவில் கால் சராய்களை (பேண்ட்களை) சில வருடங்கள் உபயோகப்படுத்திய பின் தையல் கடைகளில் கொடுத்தால் உள்பக்கத்தை வெளியில் மாற்றிப் புதிதாகத் தைத்துக் கொடுக்கிறார்கள். இதற்குப் பதினைந்து ரூபாய் கூலி வாங்குகிறார்கள். இப்பொழுது வாங்கும் பாண்ட் துணிகள் எல்லாம் இரண்டு பக்கமும் உபயோகப்படுத்தும்படியானவை.

தொகுப்பு: **'வம்பு'**

எஃப் எம் (FM) என்றால் என்ன?

ஆம்ப்ளிடியூட் மாடுலேஷன் (AM) ஃப்ரீகுவென்ஸி மாடுலேஷன் (FM) என்னும் இரு வகையில், ஆம்ப்ளிடியூட் மாடுலேஷனில் ஒலிபரப்பப்படும் இசை நிகழ்ச்சி, தேவையில்லாத சப்தங்கள் கலந்து, ஜீவனே இல்லாமல் போகிறது.

ஆனால், சென்னையில் முதன் முறையாக இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட வானொலி ஒலிபரப்பில் சமீபத்திய தொழில் நுட்பத்தின் முன்னேற்றத்தினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஃப்ரீகுவென்ஸி மாடுலேஷனில் (FM) ஒலிபரப்பப்படும் இசை உன்னதமாக, சீரானதாக இருக்கும். தேவையில்லாத வெளிப்புற சப்தங்கள் ஏதும் இல்லாமல், ஜீவன் மிக்கதாக இருக்கும். குறிப்பாக இசைப்பிரியர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். ஏனென்றால் உங்கள் இசைவான இசையை இசைத் துடிப்புக் கொண்டதாகச் செய்கிறது. உதாரணமாக வயலின் இசையைக் கேட்கும் பொழுது, உங்கள் அறையிலேயே வாசிக்கப்படுவது போன்றிருக்கும்.

எஃப் எம் ரேடியோ நிகழ்ச்சிகள் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மட்டுமே ஒலிபரப்ப இயலும். சென்னை வானொலி நிலையத்தினர் மாலை வேளையில் நாள்தோறும், சர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி, ஆங்கிலம் மற்றும் பலதரப்பட்ட இசை நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர். எஃப் எம் பாண்டுள்ள ரேடியோக்களைவிட எஃப் எம் பாண்டு இல்லாத ரேடியோக்களை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையே அதிகம். எஃப் எம் பாண்டுள்ள ரேடியோவை வாங்க விரும்புவோர் ஆயிரம் ரூபாயாவது செலவழிக்க வேண்டும். இவர்களின் நலனை முன்விட்டு, சாலிடெர் அளிக்கிறது மற்றுமோர் அற்புதப் படைப்பு -- சாலிடெர் டிவி / எஃப் எம் டியூனர். இதில் மற்றொரு வகை சாலிடெர் எஃப் எம் ட்யூனர். சாலிடெர் டிவி / எஃப் எம் ட்யூனரின் விலை ரூ. 325/- எஃப் எம் ட்யூனரின் விலை ரூ. 245/-.

டிவி / எஃப் எம் ட்யூனரை ரேடியோவுடன் இணைத்து டிவி நிகழ்ச்சிகளை ரேடியோவிலும் அல்லது டிவியுடன் இணைத்து, ரேடியோ நிகழ்ச்சிகளை டிவியிலும் கேட்கலாம்.

அதேபோல் எஃப் எம் ட்யூனரை உங்களது ரேடியோவுடனே அல்லது டிவியுடனே இணைத்து எஃப் எம் ரேடியோ நிகழ்ச்சிகளை டிவியிலும் கேட்கலாம்.

அருகிலுள்ள சாலிடெர் டீலரை அணுகுங்கள். உங்களுக்கு இலவசமாக இயக்கிக் காட்டுவார்.



சாலிடெர்

டிவி/எ:ப்எம் ட்யூனர்

மதம் மாற்றுவது குற்றமாகுமா?

திருநெல்வேலி மாவட்டம் மீனாட்சிபுரத்தில் ஏராளமான ஹரிஜன் இந்துக்கள் ஒரே சமயத்தில் முஸ்லிம்களாக மதம் மாறினார்கள். (கல்கி, 29-3-81). "இந்த மத மாற்றத்துக்கு அடிப்படை அயல் நாட்டுப் பணமும் அளவு மீறிய வற்புறுத்தலும்" என்று மேற்படி கிராமத்துக்கு விஜயம் செய்த ஆர்ய சமாஜ ஆய்வுக்கமிட்டி கூறுகிறது. (ஹிந்து மே 19, 1981)

இது தொடர்பாக சட்டம் என்ன கூறுகிறது என வழக்கறிஞர் ஸ்ரீரங்கம் எல். நரசிம்மனைக் கேட்டபோது:



ஒரு மனிதன் தான் பிறந்த மதத்திலிருந்து வேறு மதத்துக்கு மாறினால் அந்தத் தனிமனிதன் சுதந்திரத்தில் சமுதாயமும் சரி, சட்டமும் சரி குறுக்கிட முடியாது. ஆனால் ஒரு மனிதன் வேறொரு மதத்துக்கு மாற்றப்பட்டால் சட்டம் குறுக்கிடுகிறது. ஆனால் தேவையான அளவில் அல்ல. மனிதனின் மத உணர்வுகளைப் புண்படுத்துவது மட்டும்தான் குற்றம் என்ற அளவுக்கே சட்டங்கள் இருக்கின்றன.. ஒரு மதத்தில் உள்ளவனை வேறு ஒரு மதத்துக்கு மாற்றும்பொழுது அதைக் குற்றமாக ஆக்கக் கூடிய அளவுக்கு நமது சட்டங்கள் போதுமானதாக இல்லை.

இதனால் இந்து சமுதாயத்துக்கு அல்லது இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பேரிழப்பு நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம் ஆகியவை மதப் பிரசாரம் அல்லது மத மாற்றத்தை உயர்வான குறிக்கோளாகக் கொண்டே செயல்படுகின்றன. மதத்துக்கு ஆற்றும் தொண்டாகவே கருதுகின்றன. ஆனால் இந்து மதத்தில் இம்மாதிரி மத மாற்றும் வழக்கங்கள் அதிகம் இல்லை. அண்மையில் சில மடாதிபதிகள் இதை அனுஷ்டிக்கத் தொடங்கியும் இது பிரபலமடையவில்லை.

மதம் மாற்றுவதை ஒரு குற்றமாக ஆக்கி இந்து மதத்தைப் பாதுகாக்கும் அளவுக்கு சட்டங்கள் இல்லை. அப்படியே இருக்கும் சட்டங்களும் போதுமானதாக இல்லை. இது மற்ற மதத்தினருக்குச் சாதகமாகவே அமைந்திருக்கிறது.

இப்படி நடக்காமலிருக்க வழி என்ன என்றால் சட்டத்தில் முக்கியமாகச் சில திருத்தங்களைச் செய்ய வேண்டும். அல்லது புதுச் சட்டங்களை இயற்ற வேண்டும். ஒரு மதத்தை விட்டு மற்றொரு மதத்துக்கு ஒருவர் மாற வேண்டும் என்று விரும்பினால் ஒரு மாஜிஸ்டிரேட் முன்பாகவோ அல்லது இதற்கென்றே பிரத்தியேகமான ஒரு நீதித் துறை அமைப்பை உருவாக்கி, அதற்கு முன்பாகவோ தானே வலியச் சென்று "இம்மதத்தை விட்டு அம்மதத்திற்குச் செல்கிறேன்" என மதம் மாறுபவர் சொல்ல வேண்டும். பிறகு அவர் மதம் மாறியதாக மாஜிஸ்திரேட் அறிவிக்க வேண்டும். இப்படி சட்டம் உருவாக்கினால்தான் பெருவாரியான மக்களை ஒரே சமயத்தில் ஆசை காட்டி மதம் மாற்றும் பழக்கம் நிற்கும். இல்லை என்றால் பணத்தாசையாலோ பதவி கண்டு அச்சத்தாலோ மக்கள் மதம் மாறிக் கொண்டே தான் வருவார்கள். மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள் என்ற வசனத்துக்கு ஏற்ப முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியிலும் ஆங்கிலேயர் ஆட்சியிலும் பெருவாரியாக மதம் மாறியவர்கள்தான் நம் மக்கள்.

மீனாட்சிபுரம் சம்பவத்தை எடுத்துக் கொண்டால் மதம் மாறியவர்கள் "நாங்களாகவே மாறவில்லை; மாற்றப்பட்டோம்" என்று தாங்களாகவே பயமின்றிக் கூற முன்வரவேண்டும். இப்படிச் சொன்னால் ஒழிய அவர்கள் மதம் மாறியவர்களாகவே கருதப்படுவர். நன்றி உணர்வில் கட்டுப்பட்டவர்கள் தாங்களாகவே முன்வந்து இப்படிச் சொல்வார்களா என்பது சந்தேகம்தான்.

இப்பொழுது இருக்கும் குற்ற இயல் சட்டத்தை ஆராய்ந்து பார்ப்போமானால் இப்படி மதம் மாற்றுவோருக்கு எந்த விதமான தண்டனையும் கொடுக்க முடியாது. வேறு மத உணர்வுகளைப் புண்படுத்தினால்தான் சட்டப்படி தண்டனை கொடுக்க முடியும். மத உணர்ச்சிகளைப் புண்படுத்தியதாகக் குற்றம் சாட்டி. அது நிரூபணமானால் அதற்குத் தண்டனை அதிகபட்சம் மூன்று வருடம் சிறை அல்லது அபராதம்.

பேட்டி : அசோக்குமார்

கழுத்தில் விழுந்த மாலை

லக்ஷ்மி



அன்று மாலை வேலையினின்று திரும்பிய கஸ்தூரி மிகவும் களைப்புடன் இருந்தாள். அவளது அலுவலகத்திலே அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தலைமைப் பதவி—அவளது பகுதியின் தலைவி என்ற அந்தஸ்து — சம்பள உயர்வு — சலுகை எல்லாமே, அவளுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் கிட்டியிருந்தது.

வேலையினின்றும் ஓய்வு பெற்றுக் கொள்ளு முன் அந்தப் பகுதியின் தலைவியாக... அலுவலகத்தில் அந்த ஏ.சி. அறை சுழல் நாற்காலிமீது அமர்ந்தபடி, அதிகாரம் செய்ய வேண்டும் என்றதோர் ஆசை அவளுக்கு இருக்கத்தான் செய்தது.


ஹர்ஷவின் திருமணத்துக்கு முன்னர்தான் அந்தப் பதவிக்காக அவளது மனம் பறந்தது. முடிவில் அந்த ஆசையும் பூர்த்தியாகிவிட்டது.

வேலையினின்றும் ஓய்வடையும் முன்பே, அந்தப் பகுதி ஊழியர்கள் அனைவரும் 'மேடம் மேடம்' என்று அவளுக்குச் சலாம் போட்டபடி ஓடிவர... வெகு மிடுக்காக நடந்து, மெத்தென்று நாற்காலியில் உட்காரும் அந்தஸ்து கிட்டியிருக்கிறது.

ஆனால் அதை எதிர்பார்த்த ஆனந்தம்... இப்போது துளியளவு கூட ஏன் அவளிடம் இல்லை? மனத்தில் எந்தவித சலனமும் இல்லையே? மாறாக, அதே பதவி இப்போது பெரும் சுமையாகத்தான் தோன்றியது.

முன்னை விட, எக்கச்சக்கமான பொறுப்பு. கண நேரத்தில் பல லட்ச ரூபாய்கள் பற்றிய கணக்கு வழக்குகளுக்கு முடிவு எடுக்க வேண்டிய சிக்கலானதொரு நிலைமை.

வீட்டுக்குச் சாமான்கள் வாங்கவே, இரண்டு மூன்று நாட்கள் சிந்தித்துச் செயல்பட்டுப் பழகியவள் ஆயிற்றே அவள்! இப்பொழுது விநாடியில் முடிவு செய்ய வேண்டும் என்ற நிலை. பொறுப்புக்களால்



அவளைக் கட்டுப்படுத்தக் கூடிய கடிதங்களில் விரைவாக நாள் முழுவதும் கையெழுத்திட்டுக் கழுகு போல் கூர்மையான பார்வையில் கணக்குகளை அலசி, முடிவெடுத்து. அப்பப்பா... யாருக்கு வேணும் இந்தத் தலைமைப் பதவி? அவள் மனத்துள் 'ஹோ' என்ற அலறல்!

நாள் முழுவதும் கடுமையாக உழைத்து விட்டுக் களைத்துச் சோர்ந்து வருகிறவள் முன் வீட்டின் நிர்வாகம் பூதமாக நின்று பயமுறுத்தவே. அவள் ஒரேயடியாக மனம் நொறுங்கிப் போய்விட்டிருந்தாள்.

குடும்பத் தலைவி என்றும் பதவியிலும் ஏகப்பட்ட பொறுப்புக்கள் இருப்பதால்தான் விஷயம் தெரிந்தவர்கள் அதையும் ஓர் உத்தியோகம் என்கிறார்கள்.

வெளியிலும் வேலை செய்து விட்டு. வீட்டிலும் வேலை செய்ய நேர்ந்தால், எந்தப் பெண்ணால்தான் திறமையாக நிர்வாகம் செய்ய முடியும்?

பால் குக்கரில் வேலைக்காரி காய்ச்சி வைத்துவிட்டுப் போன பால் சூடாகவே இருந்தது.

அவள் தள்ளாடியபடி சமையல் அறைக்குள் புகுந்து பாலை ஒரு டம்ளரில் சரித்துக் கொண்டாள். இமோர்க் காப்பித் தூளையும், சிறிது சர்க்கரையையும் போட்டுக் கலக்கி எடுத்துக் கொண்டு முன்னறையில் வந்து உட்கார்ந்தாள். மாதங்கியின் நினைப்பும், அவளது பரிவான உபசரணையும் அவள் மனத்தில் நிழலாடின. அப்போதுதான் கறந்த பாலின் காய்ச்சிய மணத்துடன், கடச் சுட இறக்கிய டிகாக்ஷனைக் கலந்து. அளவோடு சர்க்கரையிட்டு நுரை பொங்க ஆற்றிப் பதமாக அவள் அன்போடு தம்ளரில் எடுத்து வருவாளே, அப்போது வீசும் காப்பியின் ரம்யமான நெடி. வீடு முழுவதும் சூழ்ந்து கொள்ளும். சிரித்த வண்ணம் அன்புடன் மாதங்கி தன் கையால் கொடுத்த நாட்களைக் கோர்த்தபடி, கையிலிருந்த காப்பியை விஷம் போலக் குடித்து முடித்தாள் அவள்.

மனத்தில் துயரம் கனமையாக அழுத்தியது.

மாதங்கி அவர்களுடன் வீட்டிலிருந்தால் தன் மாமியாருக்குப் பதவி உயர்ந்து விட்ட சங்கதியைக் கேட்டதும் எப்படி மகிழ்ந்து போயிருப்பாள்?

''அத்தை! பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்யக் குடுக்கணும். இன்னைக்கி, உங்களுக்கும் உங்க மகனுக்கும் பிடிச்ச சாப்பாடு பாயசம் வடையோட ஜமாய்க்கணும்...'' ஆர்ப்பரித்திருப்பாள். மாமியாரைக் கொண்டாடி ஆனந்த வெள்ளத்தில் முழுக்காட்டியிருப்பாள்.

'சூடு ஒரு ருசி' என்றவள் வாயில் சர்க்கரையைத்தான் போட வேண்டும்.

இந்தப் பதவி அவளிருக்கும்போது வந்திருக்க வேண்டியது. ஆறிப்போன காப்பி போல... இப்போது பொறுப்பு வேண்டாம் என்று உதறித் தள்ளும் சமயம், அவளாகவே நகர்ந்து கொண்டிருக்கும் நேரத்தில், பளுவான பாறாங்கல் போல், தலை மீது சுமத்தப் பட்டிருக்கிறது.

மகனிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டதால் அவனிடமும் தெரிவிக்க முடிய

வில்லை. மகிழ்ச்சியைத் தருவதற்குப் பதில் மனச் சுமையைத் தரும் இந்தப் பதவி அவனுக்குத் தேவைதானா?

டம்ளரை மேஜை மேல் வைக்க எழுந்த போதுதான் வேலைக்காரி அன்று தபாலில் வந்த ஒரு கடிதத்தை வைத்திருப்பதைக் கவனித்தாள். பூச்சாடி அருகே அவளது பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த உறை மீது குண்டு குண்டான கையெழுத்து... நெஞ்சு படபடத்தது. மாதங்கி எழுதியிருக்கிறாள்.

அவளது மகளைப் போன்றவள். அவளது கடிதத்துக்குப் பதில் எழுதியிருக்கிறாள். பரபரப்புடன் உறையைக் கிழித்துக் கடிதத்தை உருவிப் படித்தாள்.

அன்புள்ள அத்தை அவர்களுக்கு,

வணக்கம் பல. உங்களுடைய கடிதத்தைக் கண்டதும் எனக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டது. அயரா உழைப்புக்கு முடிவில் பலன் கிடைத்து விட்டிருக்கிறது. அலுவலகத்தில் அந்தப் பகுதிக்கே நீங்கள் தலைவராகச் செயல்படத் தொடங்கி விட்டீர்கள் என்பதை அறிந்து நான் பெருமையில் பூரித்துப் போனேன். எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

உங்களுக்கும் நான் ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்கப் போகிறேன். நான் எடுத்துக்கொண்ட 'டிப்ளமா கோர்ஸ்'ஸில் பாஸ் செய்து விட்டேன். மிக அதிக மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறேன். அப்படி முதலாவதாகத் தேறிய முதல் பத்து மாணவிகளை இந்தப் பயிற்சிக் கல்லூரியே நல்ல கம்பெனிகளுக்கு, வேலைகளுக்குச் சிபாரிசு செய்து ஏற்பாடு செய்கின்றது.

அதனால், இரண்டு மூன்று கம்பெனிகளில் அநேகமாக விரைவிலேயே எனக்கு நல்லதொரு வேலையும் கிடைத்துவிடும். அவற்றில், நல்ல சம்பளம் வரும் உயர்தரக் கம்பெனியைத் தேர்ந்தெடுக்கலாம் என்றிருக்கிறேன். நர்மதா அம்மாவும் அதையேதான் சொல்கிறார்கள்.

அதுவரை நர்மதா அம்மாவின் 'பொட்டிக்'கைக் கவனித்து அவர்களுக்கு உதவுவது என்ற தீர்மானத்தில் இருக்கிறேன். ஹாஸ்டலில் சென்று தனியே வசிப்பது கூடாது என்று இவர்கள் வற்புறுத்துவதால், இங்கேயே தங்கி, இவர்களுக்குக் கூடமாட வீட்டு வேலைகளில் கொஞ்சம் உதவி செய்யலாம் என்று எண்ணுகிறேன். ஒழிந்த வேளைகளில் அவருக்குக் கார் ஓட்டவும் செய்வேன். இதனால் இனமாக உணவும், தங்க இடமும் நர்மதா அம்மாவிடம் கிடைக்கும்.

நீங்கள் இனிமேல் என் சாப்பாட்டுக்காக மாதா மாதம் அனுப்பும் தொகை தேவையிராது.

அத்தை! என்னையே நான் காத்துக்கொள்வதற்கு இப்படி ஒரு தொழிற் கல்வியைப் பயில எனக்கு நல்லதொரு வாய்ப்பை நீங்கள் அளித்து உதவினீர்கள். அதை நான் மறக்கவே மாட்டேன்.

கொஞ்ச நாட்களாகவே நான் தீவிரமாக யோசிக்கிறேன். இப்போது என் விருப்பத்தினால் எழுந்த ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்.

அத்தை! இது சமயம் உங்களிடம் ஓர் உண்மையை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஜயந்தியைப் பெண் பார்க்க வந்தபோது, எனக்கு உங்கள் மகனை மிகவும் பிடித்து விட்டிருந்தது. ஜயந்தி அக்காவின் இடத்தில் நான் இருக்கக் கூடாதா என்று அதுசமயம் நான் ஏங்கிப் போனேன். இது ஒருதலைக் காதல்தான்! உங்கள் மகனுக்கு ஜயந்தி கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம் அதனால் ஏற்பட்ட ஆத்திரம்தான்—என்மீது வெறுப்பாக மாறியது.

இப்போது, தொலைவில் இருந்தபடி சிந்தித்துப் பார்த்தால், தெளிவாகத் தெரிகிறது. உங்கள் மகனது உணர்ச்சி நியாயமானதே.


ஆண் பெண் யாராயிருந்தால் என்ன? திருமணம் என்பதில் மனப் பூர்வமான ஈடுபாடு இல்லாது வற்புறுத்தப்படுவது தவறுதான். என் விஷயத்தில் நான் புரிந்து கொண்ட உண்மை இதுதான். இதற்காக நான் தங்களையோ அல்லது என் கணவரையோ குற்றம் கூறவில்லை. பெரியப்பா தம் மகனுக்குப் பதிலாக மணையில் உட்காரும்படி என்னைக் கேட்டுக் கொண்டபோது நானே மறுத்திருக்கலாமே? அவரது மகளைப் போலவே தாலி கட்டும் முன்பு, மாயமாக மறைந்திருக்கலாமே... ஹரீஷை எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் அவருக்கு என்னைப் பிடிக்காமல் போய்விடும் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

பவித்ராவுக்குப் பிடித்தவை

கான்வென்ட் பள்ளியில் படிப்பை முடித்த பவித்ராவுக்குச் சைக்கிள் ஓட்டுவது, ஓவியம் வரைவது ஆகியவற்றில் அளவு கடந்த ஆசை. விடுமுறை நாட்களில் வெளியிலே சென்றால் வீடு திரும்பியதும் தாம் கண்ட காட்சிகளில் ஒன்றை நிச்சயமாக ஓவியமாக்கி விடுவார்.

ஒதுங்கிப் போகிறவர்தான் என்றாலும், ஓவியத்தைப் பற்றியும் அழகுக் குறிப்புகள் பற்றியும் பேச ஆரம்பித்து விட்டால் போக்க நாட்கணக்கில் பேசுவார். கேட்பதற்கு நமக்குத்தான் பொறுமை வேண்டும்! பரத நாட்டியம் கற்று வரும் இவருக்கு அதில் மட்டுமின்றி நடிப்புக் கலையிலும் ஈடுபாடு உண்டு.

மேலட்டை வண்ணப் படம்,
பேட்டி: ஹரீஷ்





அருள்வாக்கு

உள்ளும் புறமும்

"எல்லோரும் அவரவருக்குரிய கர்ம அநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும். ஆசாரங்களை அநுசரிக்க வேண்டும்; விபூதி, திருமண், ருத்திராட்சம் போன்ற சின்னங்களைத் தரிக்க வேண்டும்" என்றெல்லாம் நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சிலர் இதெல்லாம் எதற்கு என்று நினைக்கிறார்கள். "நல்ல சீலங்களுடன் இருக்க வேண்டியதே முக்கியம். சீலம் மனதைப் பொறுத்த விஷயம். சமய ஆசாரங்களெல்லாம் வெளி விஷயம் தானே?" என்று என்னுகிறார்கள்.

மிலிட்டரிக்காரன் யூனிஃபாரம் போடாவிட்டால் அவனுக்கு வீரம் வராதா என்று கேட்பவர்கள் கேட்கலாம். ஆனால் மிலிட்டரிக்காரன் என்றால் லோகம் முழுக்க அவனுக்கு என்று யூனிஃபாரம் இருக்கத்தான் இருக்கிறது. அதுவே வீரத்தைத் தூண்டுகிறது என்றும் சொல்கிறார்கள்.

வெளியில் தரிக்கும் சின்னம், வெளியில் செய்கிற சம்ஸ்காரம் இவை உள்ளுக்கும் நன்மை தருவனவே ஆகும். வெறும் வேஷம் என்று நினைத்தால் வேஷமாகவே போகும். 'ஆத்மார்த்தமாக, ஜீவனைப் பரிசுத்தம்செய்து கொள்வதற்காக இந்த சம்ஸ்காரத்தைச் செய்கிறேன், சின்னத்தை அணிகிறேன்' என்று உணர்ந்து செய்தால் சத்தியமாகவே அது உள்ளே புகுந்து சுத்தி செய்கிறது. புறத்தில் செய்வது உள்ளுக்கும் உதவுகிறது.

நான் சம்ஸ்காரங்களை முக்கியமாகச் சொல்வதோ, ஆசாரங்களை விடாமலிருக்கப் பிரயத்தனம் செய்வதோ விபூதி, ருத்திராட்சம் முதலிய சின்னங்களைத் தரிப்பதோ பெரிதில்லை. நான் மடாதிபதி ஆதலால் இதெல்லாம் என்னிடம் இருந்தால்தான் என்னிடம் வருவீர்கள்; என் மடம் நடக்கப் பணம் கொடுப்பீர்கள். எனவே இவையெல்லாம் எனக்குக் காரியார்த்தமாக வேண்டியிருக்கின்றன. ஆனால் உங்கள் விஷயம் அப்படி இல்லை. உங்களுக்கு ஜீவனோபாயம் வேறு விதத்தில் கிடைத்து விடுகிறது. ஆதலால் என்னை விட சிரேஷ்டமாக முழுக்க முழுக்க ஆத்மார்த்தமாகவே நீங்கள் சமஸ்காரங்களைச் செய்து, சின்னங்களைத் தரித்துக் கொண்டு பரிசுத்தம் பெற முடியும்; பெற வேண்டும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்

தங்கள் அன்பும் ஆதரவும் என்னைப் பொறுமையுடன் இருக்கச் செய்தது. எப்படியும் நிலைமை மாறிவிடும் என்றுதான் இதுநாள்வரை இருந்தேன். ஆனால், பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? அதனால் இந்தத் துயர அனுபவத்தை நான் மேலும் நீடித்துக் கொண்டிருக்க விரும்பவில்லை.

கணவனும், மனைவியும் ஒரு குறித்த கால வரம்பு வரை பிரிந்திருந்து — பின்னர் இருவரும் ஒப்புக் கொண்டால் எளிதில் விவாகரத்துப் பெற்று விடலாம் என்கிறார்கள். இதைப் பற்றித் தாங்கள் ஒரு வக்கீலைக் கலந்து ஆலோசித்து ஆவன செய்தால் நல்லது. ஹரிஹரனுக்கும் இந்த விருப்பமில்லாத விவாக பந்தத்திலிருந்து விடுதலை கிடைக்கும். நான் அவருக்கு விடுதலை அளிக்கப் பூரண சம்மதம் தெரிவித்து விட்டதாக அவரிடம் சொல்லவும்.

இனி, இப்படி ஒரு தீர்மானம் மேற்கொண்டு விட்டதால், என் பெயருக்குத் தாங்கள் எழுதி வைத்துள்ள சொத்து விவரம் அடங்கிய உயிலையும், வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்துச் சாவியையும் தபால் மூலமாகவோ அல்லது நர்மதா அம்மாள் சென்னைக்கு வரும்போதோ அனுப்பிவிட உத்தேசித்திருக்கிறேன். அது மட்டுமல்ல; நான் அணிந்திருக்கும் நகைகள், சேலைகள் எல்லாமே தங்களுடையது. அவற்றைத் திருப்பி அனுப்பிவிட எண்ணுகிறேன்.

எனது வருங்காலத்துக்கு வழி காட்டினீர்கள். அதற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் மிகுந்த தாராள மனத்துடன், நகை, ஆஸ்தி யாவும் கொடுத்தீர்கள். ஆனால், மருமகள் என்ற ஸ்தானம் எனக்கில்லாதபோது அவைகளைப் பெற்றுக் கொண்டு வாழ்வது மிகவும் தவறு. அவற்றைத் திரும்ப உங்களிடமே ஒப்படைப்பது தான் முறை என்று தோன்றியதால், திருப்பத் துணிந்து விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்.

தங்கள் மகனிடம் கலந்து ஆலோசியுங்கள். ஆவன செய்வீர்கள் என எண்ணும்,

என்றும் தங்கள் மாதங்கி

அந்த நீண்ட கடிதத்தை முதலில் படித்த கஸ்தூரி திகைலங்கிப் போனாள். மீண்டும் ஒருமுறை ஆழ்ந்து அதைப் படித்தாள். படித்து முடிப்பதற்குள் நெஞ்சைத் துயரம் இறுக்கியது. கண்களில் நீர் பெருக, விம்மலாகத் துயரம் சிதற, கடிதத்தையே வெறித்தாள் அவள். மூளைக்குள், வண்டு குடைவது போல் துன்பம் ரீங்காரம் செய்தது.

"ஆ'... இதென்ன விடை கழல்வது போல...." கஸ்தூரி மயக்கமாகத் 'தடால்' என முன்னறைக் கம்பளத்தின் மீது நினைவிழந்து விழுந்து விட்டாள். (தொடரும்)



மூன்று இவருடைய அதிர்ஷ்ட எண்!

இன்னும் ஏழு வருடங்களுக்கு பிரெஞ்சு குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஃப்ரான்கோஸ் மாரீஸ் மேரி மிட்டராண்ட் அரசியலில் நுழைந்ததே ஒரு கொடூர சம்பவத்தின் பின்னணியில்தான். அவர் வீட்டுப் பணிப்பெண் இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஜெர்மன் ரகசியப் படையினரால் படு கொலை செய்யப்பட்டார். இதன் விளைவு மிட்டராண்ட் ஜெர்மானியர்களை எதிர்க்க இடதுசாரி அரசியல் இயக்கத்தை உருவாக்கினார்.

ஜெர்மானியரால் போரில் சிறைபிடிக்கப்பட்டு கான்சன்ட்ரேஷன் காம்ப்பில்(Concentration Camp) வைக்கப்பட்டார். இங்கிருந்து தப்பித்து நானூறு மைல்களைக் காலால் நடந்து கடந்து ஸ்விஸ் நாட்டு எல்லையை அடையும்போது, ஜெர்மன் கிராம மக்களால் மீண்டும் சிறைப்பிடிக்கப்பட்டார். இவருடைய இரண்டாவது முயற்சியும் தோல்வியே கண்டது. ஆனால் மூன்று இவருடைய அதிருஷ்ட எண். மூன்றும் முறை தப்பித்து விட்டார்.

போருக்குப் பிறகு தமது முப்பதாவது வயதில் நாடாளுமன்றத்தில் பிரஞ்சுஅரசியல் சரித்திரத்திலேயே மிக இள வயதில் நுழைந்தவர் என்ற பெருமையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுத் துணைத் தலைவராகவும் பதவி ஏற்றார்.

1916ல் எளிய கிராமத்தின் ஸ்டேஷன் மாஸ்டரின் மகனாகப் பிறந்த மிட்டராண்ட் பாரீஸில் சட்டப் படிப்புப் படித்தவர். அரசியலில் நுழைந்த நாள் முதற்கொண்டே ஜெனரல் சார்லஸ் டிகாலின் பரம வைரியாக விளங்கினார். டிகாலும் இவரை வெறுத்தார்.

1965ல் இடதுசாரிக் கட்சிகளின் பிரதிநிதியாக ஜெனரல் டிகாலுக்கு எதிராகக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். தோல்விக்குப் பிறகு சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்து நான்காம் நாளே தலைவர் பதவிக்கு உயர்ந்தார். மீண்டும் 1974ல் வாலரி கிஸ்கார்டுக்கு எதிராகப் போட்டியிட்டார். மிகக் குறைந்த வோட்டுகள் வித்தியாசத்தில் தோற்றார். அதிருஷ்டமில்லை என்றன பத்திரிகைகள். ஆனால் மூன்று தானே அவர் அதிர்ஷ்ட எண்? மூன்றும் தட்வையாக இம்முறை வென்றால் அரசியலில் நீடித்திருப்பது இல்லையென்றால் அரசியலுக்கு முழுக்கு என்ற உறுதியுடன் கட்சித் தலைவர் பதவியையும் துறந்து தேர்தலுக்கு நின்றார். இஸ்கார்டின் ஆட்சியின் பொருளாதாரச் சீர்கேடுகள், வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றைச் சுட்டிக் காட்டிப் பிரசாரம் செய்தார். வென்றார்.

மிட்டராண்ட் காதல் மணம் புரிந்தவர். மனைவி நர்ஸாகப் பணி புரிகிறார். இலக்கியம் தான் தம்மை மிகவும் ஈர்த்த துறை என்று கூறும் இவர், பல நாட்டு எழுத்தாளர்களுடனும் தொடர்பு கொண்டுள்ளார். சரித்திர ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட பத்திரிகை ஒன்றையும் வெளியிடுகிறார்.


இவருடைய கெட்ட பழக்கம் கட்சிக் கூட்டங்களுக்கும் ஏனைய நிகழ்ச்சிகளுக்கும் தாமதமாகச் செல்வது. கைக்கடிகாரம் அணிவதே கிடையாது.

ஓய்வு நேரங்களை போர்டோவில் இருக்கும் தமது இல்லத்தில் கழிப்பார். அங்கு தேனீக்களையும், இரண்டு கழுதைகளையும் ஒரு நாயையும் வளர்க்கிறார்.

ஆட்சிக்கு வந்துள்ள மிட்டராண்ட் 150 தனியார் வங்கிகளைத் தேசிய மயமாக்கிவிடுவார் என்று கணிக்கப்படுகிறது. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் உதவியுடன் நிறுவப் பட்டிருக்கும் தொழிற்சாலைகளும் பாதிக்கப்படலாம். —இ. இரவிசங்கர்

"என்னுடைய ஆடு உங்க வீட்டுத் தோட்டத்தில் மேய்ந்து விட்டது என்கிற அற்ப காரணத்திற்காக நீங்கள் அந்த ஆட்டையே மேய்ந்து விட்டீர்களே! இது தர்மமா?"





மனவாசம்

கண்ணதாசன்

26. ஞானக் கண்

இந்த நேரத்தில் அவனை இந்து மார்க்கத்தில் வெறி பிடித்தவனாக்கிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. சேலத்தில் பெரியார் நடத்திய 'ஆபாசக் கடவுள்' ஊர்வலமே அது.

எல்லா மக்களுக்கும் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு அரசாங்கம் இந்த ஊர்வலத்தை அனுமதித்தபோது, புத்தி சுவாதீனத்தோடுதான் இருந்ததா என்பது கேள்விக்குரிய விஷயம்.

ராமன் படத்தையும் கிருஷ்ணன் படத்தையும் செருப்பால் அடிப்பதுதான் பகுத்தறிவா?

கடவுள் நம்பிக்கை சிலருக்கு இல்லை என்று யாரும் கவலைப்படவில்லை. ஆனால் நம்பிக்கை உள்ளவர்களைப் புண்படுத்துவதை எந்தக் காட்டுமிராண்டியும் அனுமதிக்க மாட்டானே!

சேலம் ஊர்வலத்தைக் கேள்விப்பட்டு அவன் உள்ளுக்குள்ளேயே கொதித்துப்போய் கிடந்தான்.

நாடு எவ்வளவு நாகரிகம் கெட்டுப் போய் விட்டது! பிடிக்காதவனைச் செருப்பால் அடி என்றல்லவா மனிதன் புறப்பட்டு விட்டான்?

அரசு என்ற அங்கமும் கேவலமாகி மனிதன் என்ற பாத்திரமும் கேவலமாகி விட்ட பிறகு, தமிழ்ப் பண்பு பற்றிப் பேசுவது எவ்வளவு வெட்கக் கேடு...?

இத்தகைய ஊர்வலங்களால் ஆத்திகன் மாறப் போகிறானா? அவனது ஆத்திரம்தான் அதிகமாகுமே தவிர, அறிவுக் கண் திறந்து, ஞான ஒளியைப் பெற்று, 'ஆகா! இவரே எங்கள் தலைவர்'



○ திருமுருக கிருபானந்தவாரியார்

சேலம் ஊர்வலம் முடிந்து விட்டது. அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

ஆனால் சென்னையிலும் அதே போன்ற ஊர்வலம் நடத்தப் போவதாக அறிக்கை ஒன்று வெளி வந்தது.

அவனது ஆத்திரம் பன்மடங்காயிற்று. 'நான் ஒரு இந்து' என்று தலைப்பிட்டு, 'துக்ளக்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினான். அதற்கு முன்னாலேயே 'நமது மூதாதையர் முட்டாள்களல்ல' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை அவன் அதே 'துக்ளக்'கில் எழுதியிருந்தான்.

உண்மைதானே அது! பத்தாயிரம் ஆண்டு காலமாகப் பல்லாயிரம் கோவில்களைச் சமைத்தவன் எல்லாம் மடையன்; நேற்று முளைத்த காளான்கள்தான் புத்திசாலிகளா?

இந்தப் பிரச்னையைக் கடுமையாக அணுகுவது என்று அவன் தீர்மானித்தான்.

லட்சோப லட்சமாக ஐயப்ப கோஷமிடும் பக்தர்களை ஒன்று திரட்டி, அவர்களைக் கத்தி ஏந்தவும் தயாராக்குவது பெரிய காரியமா?

அவனால் அது முடியும். அவனது பேனாவுக்கு அந்த வல்லமை உண்டு. ஆனால் கடவுள் எதிர்ப்பாளர்கள் மிக மிகச் சிறுபான்மையினர். அவர்களுக்கு எதிராகக் கத்தி எதற்கு? இந்து மதத்தை எளிய முறையில் விளக்கினால், நாத்திகனே திருப்பதிக்கு வந்து அங்கப் பிரதட்சிணம் செய்ய மாட்டானா?

அவனால் அதுவும் முடியும். அப்படிச் சில கட்டுரைகளை அவன் எழுத ஆசைப் பட்டான்.

எந்தப் பத்திரிகையில் எழுதலாம் என்று யோசித்

திருத்தம்

சென்ற வாரம் மனவாசம் தொடரில் (24-5-81) முதல் வரியை "மக்கள் தெளிவாகச் சிந்திக்கிறார்கள்" என்று திருத்திப் படித்துக் கொள்ளவும்.

பத்திரிகைக்கெல்லாம் எழுத மாட்டீர்களே" என்றார். "அதென்ன அப்படி, எழுதுகிறேன்" என்றான் அவன். "அப்படியென்றால் இப்போதே தலைப்புக் கொடுங்கள்; விளம்பரம் செய்யலாம்" என்றார் அவர்.

'அர்த்தமுள்ள இந்து மதம்' என்று தலைப்புக் கொடுத்து விட்டான் அவன். இந்தத் தலைப்பு அவனது கவிதை யொன்றிலேயே அதற்கு முன்னால் வந்திருக்கிறது.

பத்திரிகைகளில் எழுதுவது என்றால் அவன் கூடுமானவரை பொறுப்புணர்ச்சியோடு செயல்படுவான். உடனே உட்கார்ந்து பல வகையான சிந்தனைகளில் ஈடுபட்டான். அவனுக்குத் தோன்றியதை எழுதத் தொடங்கினான். இன்று அது இந்துக்களின் அன்பிற்குரிய நூலாகி விட்டது.

சைவனாகப் பிறந்த அவனுக்கு வைணவத்தில் அதிக ஈடுபாடு. அர்த்தமுள்ள இந்து மதத்தில் வைணவமே அதிகமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது என்பது சைவர்களின் குறைபாடு.

அது சைவமாயினும் வைணவமாயினும் இந்து மார்க்கத்தின் இரண்டு கிளைகள் தானே! இந்து சமயம் தன்னுடைய பிளவுகளைத் தீர்த்துக் கொண்டு வெறித்தனமாக முன்னேற வேண்டும் என்று அவன் விரும்பினான்.

அர்த்தமுள்ள இந்து மதத்தை அவன் எழுதத் தொடங்கிய பிறகு, நாட்டில் இந்து சமய மன்றங்களும், இந்து இளைஞர் மன்றங்களும் உற்சாகமாகத் தோன்றத் தொடங்கின.

கல்லூரி இளைஞர்களிடையே கூட மத உணர்ச்சி பற்றிய விவாதங்கள் தோன்றின. அதன் பிறகு அவன் பேசிய கல்லூரிகளிலெல்லாம் இந்து மதக் கருத்துக்களை வலியுறுத்தினான். மாணவர்களிடையே அதற்கும் வரவேற்பிருந்தது.

அவனது பழைய நண்பர்கள் இது பற்றிய தங்கள் கருத்து வேறுபாட்டை ஒப்புக்குத்தான் காட்டிக் கொண்டார்கள்.

அவர்கள் குடும்பத்தினரெல்லாம் கோவிலுக்குப் போய் வந்தார்கள். கும்பகோணம் சாஸ்திரிகளிடம் ஜாதகம் எழுதி வாங்கினார்கள். கோவிலுக்குக் கோபுரம் கட்ட மறைமுகமாக உதவினார்கள்.

"மரணத்தைப் பற்றிய பயம் உள்ளவரை இறைவன் இருந்து கொண்டே இருக்கிறான்" என்ற விவேகானந்தரின் வாக்கை அவர்களும் மீற முடியவில்லை.

'அர்த்தமுள்ள இந்து மதம்' புத்தகமாக வெளிவந்து அளவில்லாத விற்பனை நடந்து கொண்டிருந்தது. எங்கு திரும்பினாலும்,

யாரைக் கண்டாலும் அது பற்றிய பேச்சாக இருந்தது. அவனது உற்சாகம் அதிகரித்தது.

இது மிகவும் கால தாமதமே!

1961ல் தி. மு. க.வை விட்டு விலகியதுமே அவன் ஆன்மிக வழியில் சென்றிருந்தால், நூற்றுக் கணக்கான சமய நூல்களை எழுதியிருக்கலாம்.

திரை உலகில் அவனுக்குக் கிடைத்த விளம்பரத்தைக் கொண்டு அதிலேயே பெரும் புகழ் பெற்றிருக்கலாம். ஆனால் நீண்ட அனுபவங்களுக்குப் பிறகே நியாயங்கள் வெளிப்படும் என்ற நியதிப்படி, 1969ல் தான் அவனுக்கு ஆன்மிக வாசல் திறந்து கொண்டது.

'அர்த்தமுள்ள இந்து மதத்துக்கு முன்னாலேயே சிருஷ்டியினுடைய ரகசியம் பற்றி 'புஷ்ப மாலிகா' என்ற நூலையும் அவன் எழுதியிருந்தான்.

'கடிதம்' அவனது வார இதழில் அது தொடர்ச்சியாக வெளிவந்தது.

அர்த்தமுள்ள இந்து மதத்தை, 'தினமணி கதிர்'ல் படித்துப் பார்த்த இரு சக்கரவர்த்தி ராஜாஜி அவர்கள், ''இந்த மாதிரி விஷயத்தை நம்முடைய பத்திரிகையில் ஏன் போடக் கூடாது?'' என்று 'கல்கி' நண்பர்களிடம் சொன்னாராம்.

இந்த ஆன்மிகக் கரு அவனுக்கு ஏற்படக் காரணம் திருமுருக கிருபானந்த வாரியாரின் சொற்பொழிவுகள். அவற்றைக் கேட்ட பின்னர் தான் அவனது மத உணர்ச்சியே பெரும் அளவில் தலை தூக்கியது.

அந்தச் சொற்பொழிவுகளைக் கேட்டால் எந்த மூடனுமே ஞானியாவான். அவனது அறிவுக்குத் தீனி போட்ட அற்புதமான சொற்பொழிவுகள் அவை.

இதோ அவரும் எழுபத்தைந்து வயதை எட்டிவிட்டார். சொற்பொழிவுகளிலிருந்து மீண்டு தவ பீடத்திற்குச் செல்லவிருக்கிறார். ஆன்மிகத்தில் அவர் என் குருதேவர். அவரது இடத்தை யாரும் நிறைவு செய்ய முடியாது.

இன்றைய இளைஞன் ஆன்மீகத்தையே நாடும்படி ஏராளமான நூல்களை எழுத அவன் ஆசைப்பட்டான். அரசியல் குறுக்கீடுகளும் தீய பழக்க வழக்கங்களும் அப்படிச் செய்யவொட்டாமல் தடுத்தன. ஆனால் வாரியாரிடம் தான் வாங்கி நட்ட விதை, ஆலாகத் தழைப்பதை அவனால் காண முடிகிறது.

சக்தி வாய்ந்த இந்து மதத்துக்குப் புது மெருகு கூட்டும் பொற் கொல்லர்களில் சிறியவனை தானும் சேர்த்தது பற்றி, அவன் பெருமைப்படாமல் முடியாது.

ஆயினும், அன்றாட உணர்ச்சி நதியிலேயே படகு விட்டுப் பழகிய அவன், அடிக்கடி அரசியலை நோக்கித் தன் பார்வையைச் செலுத்திய பாவத்தையும் அவன் மறுக்க முடியாது.

எதிர்கால வரலாற்று மாணவனுக்கு 'கண்ணதாசன் யார்' என்ற கேள்வியே குழப்பமாக இருக்கக் கூடும். அதனை அவனது இந்த வாக்குமூலமே தெளிவு செய்ய வேண்டும்.

(வளரும்)

கடுக் பதில்கள்

ஆண்கள் சமைப்பது பாவமா?



✠ கே. ரகுபதி, கும்பகோணம்.

கே: கடுகு என்ற பெயரில் ஒரு பத்திரிகை ஆரம்பித்தால் என்ன?

ப: எழுத்தாளன் சொந்தப் பத்திரிகை ஆரம்பித்தால் அவருடைய எழுத்து உலகம் சொந்தப் பத்திரிகைக்குள் நசுங்கி விடும். ஒரு நடிகன் சொந்தப் படம் எடுத்தால் வெளியார் ஒதுக்க ஆரம்பித்து விடுவார்கள். சொந்தப் படம் தோல்வியடைந்து விட்ட பிறகு சொந்தப் படமும் எடுக்க முடியாது. வெளி சான்ஸும் வராது. சொந்தப் பத்திரிகை ஆரம்பித்த எழுத்தாளர்கள் பலர் சந்தோஷமாக இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?

✠ குமாரி வி. சௌந்திரநாயகி, சென்னை-15.

கே: மனம்விட்டுச் சொல்லுங்கள். ஆண்கள் சமைப்பது பாவமா?

ப: இல்லை.... ஆனால் ஐயோ பாவம்!

✠ ஆர். சாம்பசிவம், மாமல்லபுரம்.

கே: சிரிக்கத் தெரிந்தவர்தான் கவலையை மறக்கத் தெரிந்தவர் என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

ப: மறைக்கத் தெரிந்தவர்கள் என்று சொன்னால் ஒத்துக் கொள்வேன்.

✠ கவிஞர் முத்துலிங்கம், சென்னை-18.

கே: தாங்கள் ரசித்ததாகக் கூறிய புதுக்கவிதைகளை எழுதியவர் முத்துலிங்கம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். முத்துராமலிங்கமாக இருக்கலாம். நான் மரபுக் கவிதைகள் எழுதுபவன். இலக்கண கட்டுக் கோப்புகளுள் நின்று, சிந்தனைகளையும், கருத்துக்களையும் வெளிக்காட்டத் தெரியாதவர்கள்தான் புதுக்கவிதை என்று கூறுவார்கள்.



ப: இலக்கணம் எல்லாம் நீங்களும் நானும் வைத்துக் கொண்டது தானே. அப்படிப் பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் கவிதை எழுதினால் தப்பொன்றுமில்லை. கவிதை நம்மைக் கவர வேண்டும். இலக்கண வரம்புக்குள் நின்று எழுதி விட்டால் உயர்ந்ததாகி விடாது. இரண்டு கோடுகளைப் போட்டு அதற்குள் லெட்டரிங் சிலர் செய்கிறார்கள். கோபுலுவோ சும்மா பிரஷ்ஷை எடுத்துக் கைபோன போக்கில் கதைத் தலைப்பு எழுதுகிறார். வரம்புக்குள் நிற்காவிட்டாலும் கோபுலுவின் கைவண்ணத்தை ரசிக்க முடிகிறதல்லவா? ஆகவே புதுக் கவிதை ஒன்றும் தரக் குறைவான விஷயமல்ல.

✠ கே. ராஜராஜசோழன், சென்னை-20.

கே. மூன்றாவது உலக யுத்தம் வருமா?

ப: ஒருவிதத்தில் பார்க்கப் போனால் யுத்தம்வந்தாலே தேவலை என்று தோன்றுகிறது. யுத்தம் வருகிறது என்ற பீதியால் ஏற்படும் தொல்லைகளைக் கவனிக்கும்போது. (ஆமாம், உங்கள் பெயர் உண்மையிலேயே ராஜ ராஜ சோழனா?)

✠ கு. அருள்மொழி வர்மன், திருப்போரூர்.

கே. புதிதாக 'கட்டி' என்கிற பத்திரிகையைப் பார்த்தீர்களா?

ப: இல்லை. 'கட்டி' நன்றாகத் திட்டி எழுதியதைப் பார்த்தேன். அது குட்டிப் பத்திரிகையாகத் தெரியவில்லை. குட்டும் பத்திரிகையாகத் தோன்றுகிறது. (உங்கள் பெயரும் நிஜப் பெயர்தானா?)

✠ வி. நாகலக்ஷ்மி, சென்னை-33

கே: ஆர். எஸ். எஸ். என்பதின் விரிவு என்ன?

ப: ராஷ்ட்ரீய சுயம் சேவக் என்பதாகும். இப்படித்தான் பல சுருக்கங்கள் முழுப்பெயரை விடப் பிரபலம் அடைந்து விட்டன. யுனிசெப், யுனெஸ்கோ, பி.பி.சி, எம்.யு.சி. என்று எத்தனையோ.

✠ முருகேஷ், பெரியபாளையம்

கே: எவ்வளவு கவனமாகச் செய்தாலும் தவறு ஏற்பட்டு விடுகிறதே?

ப: தவறு வருமோ என்று பயந்துகொண்டே செய்தால் நிஜமாகத் தவறு வந்துவிடும். தவறுகள் சகஜம் என்று எண்ணிக் கொண்டு செயல்படுங்கள். ஒரு சின்ன 'பிட்' தருகிறேன். சந்திரனில் காலடி வைத்த ஆர்ம்ஸ்ட்ராங் அங்கு ஒரு பட்டயத்தை வைத்து விட்டு வந்தார். அதில் ''ஜூலை, 1969 ஏ.டி'' என்று தவறாகப் பொறித்து விட்டிருந்தார்கள். ஜூலை ஏ.டி. 1969 என்பது



தான் சரி. ஆகவே, தவறுகளைக் கண்டு தளர்ந்து விடாதீர்கள்.

பரிசு பெறுபவர்:

கே. ரகுபதி
2—3ஏ II முத்தையா நகர்,
வட்டி பிள்ளையார் கோவில் தெரு,
கும்பகோணம்-612 001



பன்னைகள்

1, சிவகாமியின் சபதம்; 2. காவிரி தந்த கலைச் செல்வி; 3. சித்திரப் பாவை; 4. பஸ்மாஸுர மோகினி; 5. ஞானப் பழம்; 6. அரை மணிக்குள் ராமாயணம்; 7. பாஞ்சாலி சபதம்; 8. பார்வதி திருமணம்; 9. பத்மாவதி திருமணம்; 10. பூமகள் திருமணம்; 11. முத்தழகி; 12. சாவித்திரி; 13. கங்கா—கௌரி; 14. சிங்கமும் எருதுகளும்; 15. கடை எழு வள்ளல்கள்; 16. மீனாட்சி திருமணம்; 17. தட்ச யக்ஞம்; 18. கன்யா குமரி என்று இத்தனை நாட்டிய நாடகக் கவிதைகளை இயற்றிப் பல்வேறு நடனமணிகளும் குழந்தைகளும் அரங்கேற்ற உதவியிருக்கிறார் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்.

• • •

மகா கவி சுப்பிரமணிய பாரதியார் ஸ்ரீ ராமரையும், ஸ்ரீ கிருஷ்ணரையும் துதி செய்து இரண்டு வடமொழிப் பாட்டுக்கள் பாடியிருக்கிறார். ஆதாரம்: சகுந்தலா பாரதி எழுதிய ''என் தந்தை''.

• • •

இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் பாடியிருக்கும் பன்னிரண்டு பாரதியார்பாடல்களைத் தொகுத்து ஒரே எல். பி. இசைத்தட்டாக வெளியிட்டிருக்கிறது எச். எம். வி. நிறுவனம். பாரதியார் நூற்றாண்டையொட்டி வெளியாகும் இந்த இசைத்தட்டைப் பாரதப் பிரதமரைச் சந்தித்துத் தமிழ் மக்கள் சார்பில் அன்பளிப்பாக வழங்கினார் சீர்காழி.

—ஏ. சுவாமிநாதன்



செய்திகள்

திருமண கேக்!

சார்லஸுக்கும் டயானாவுக்கு ஜூலை 29 திருமணம் நடக்கப் போகிறதல்லவா?

இதற்காக பலப்பல பேக்கரிகளும் திருமணகேக் தயாரித்து அன்பளிப்பாக வழங்க இப்போது முதலே திட்டமிட்டு வடிவமைப்புச் சித்திரங்களைத் தீட்டத் தொடங்கிவிட்டன. திருமணத்துக்கு வந்து சேரப் போகிற ஏராளமான கேக்குகளில் எதை பிரதான நிகழ்ச்சிக்கு அரச குடும்பம் தேர்ந்தெடுக்குமோ தெரியாது. இருப்பினும் பேக்கரிகள் போட்டி போட ஆரம்பித்து விட்டன!

பிரிட்டனின் தெற்குக் கோடியில் போர்ன்மவுத் என்னும் ஊரில் தயாராகும் ஒரு கேக்கின் தயாரிப்புச் செலவு ரூ58,000க்கும் அதிகம். அதனை லண்டனுக்கு இரண்டு ரோல்ஸ் ராய்ஸ் கார்களில் போலீஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப் போகிறார்கள்! 1500 மணி நேர உழைப்பை விழுங்கிய கேக் இரண்டு அடுக்குகளை உடையதாய் எட்டு அடி உயரமும் 200 பவுண்டு எடையும் கொண்டதாக இருக்கும்.



வழியில் தப்பித்தவறி ஏதாவது அதிர்ச்சியில் கேக் உடைந்து விடுமானால் செப்பனிட உபரி பாகங்களுடனும் பழுது பார்க்கும் கருவிகளுடனும் கேக் நிபுணர் உடன் செல்வார்!

— வாஷிங்டன் போஸ்ட்



நடந்து வந்த பாதை



"இருபது வருடங்களுக்கு முன்பு இருந்த வீடு இன்று எப்படி இருக்குமோ பார்க்க எனக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது" என்று எங்களுடன் கிளம்பினார் மனோரமா. எல்டாம்ஸ் சாலைக்குப் பின்புறம் அவர் ஒரு காலத்தில் வசித்து வந்த அந்த வீடு இருக்கிறது. அன்று இருந்த ஒருசிலர் இன்னும் அதே வீட்டில் வசிக்கிறார்கள்.

காரை விட்டு மனோரமா இறங்குவதைப் பார்த்தவுடன் பலத்த வரவேற்பு. உள்ளே நுழையும்போதே "நானிருந்த போர்ஷனில் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

"வணக்கம், வாங்க! நான் நாடக நடிகன். என் பேர் உதய குமார். இது என் மனைவி. இது என் தங்கை விஜயசாந்தி. இவளும் சில படங்களிலே நடிக்கிறா" என்று அவர் கேள்விக்கு விவரமாகவே பதில் கிடைத்தது.

"ரொம்ப சந்தோஷம்" என்றார் மனோரமா. வீட்டைச் சுற்றி வந்தன அவர் கண்கள். "இப்பவும் அதே மாதிரி தான் இருக்கு. இந்தப் போர்ஷனுக்கு அப்பொழுது நான் கொடுத்த வாடகை நாற்பது ரூபாய்... இன்னிக்கு?" என்று உதயகுமாரைப் பார்க்க "இருநூறு ரூபாய்" என்றார் அவர்.

"இந்த ஹாலில்தான் ஓரமாகக் கயிற்றுக் கட்டில் போட்டிருந்தேன். 'யானைப் பாகன்' படத்தில் நடித்தபோது ஏற்பட்ட ஒரு விபத்தில் கை காலில் அடி! பிராக்சர் ஆனதால் படப் பிடிப்பு ரத்தாகியது. கட்டுக்களுடன் நான்பாட்டுக்குப் படுத்துக் கொண்டிருப்பேன். தெரிந்தவர்கள் வரிசையாக வந்து என்னைப் பார்த்துவிட்டுப் போவார்கள். ஏதோ கண் காட்சியில் வைக்கப்பட்ட பொருள் மாதிரி எனக்கு இருந்தது!"

ஹாலுக்கு வலதுபுறம் ஒரு சிறுஅறை. அதற்குப் பக்கத்தில் சமையல் அறை. "இந்த இரண்டு அறைகளிலும்தான் நான் அதிகமாகக் குடியிருப்பேன். ஏனெனில் அன்று நான்தான் சமையல். எனக்கு எல்லா விதச் சமையலும் செய்யத் தெரியும். ஆமா இன்று என்ன சமையல்?" என்று கேட்டுக் கொண்டே சமையல் அறைக்குள் நுழைந்தார் மனோரமா.

கத்தரிக்காய், வெங்காயம் ஆகியவை ஓரத்தில் வைக்கப் பட்டிருந்தன. உள்ளே நுழைந்தவர் பக்கத்தில் சாத்தப் பட்டிருந்த அரிவாள் மனையை எடுத்து வைத்துக் கொண்டு மளமளவென்று கத்தரிக்காயை நறுக்க ஆரம்பித்தார். "வெங்காய சாம்பார், கத்தரிக்காய்ப் பொரியல். அதைத் தான் நானும் செய்ய நினைத்திருந்தேன்" எனக் கூறிக்

⁕ உதயகுமார் தம்பதியுடன்

⁕ "மாலை நேரங்களில் பொழுது போக்க நான் விரும்புமிடம் இதுதான்!"

கொண்டே வந்தார் திருமதி உதயகுமார். மனோரமா வெங்காயம் உரிக்க ஆரம் பித்த போது "போதும் போதும் போதும். எனக்குக் கொஞ்சம் வேலை பாக்கி வையுங்க. சமையலையே செய்து முடிச்சுடுவீங்க போலிருக்கே" என்று சிரித்துக் கொண்டே கூறி மனோரமா கையிலிருந்தவற்றை வாங்கி வைத்தார்.

ஹாலின் மற்றொரு கோடியிலிருக்கும் இன்னொரு அறைக்கு எல்லோரும் சென்றோம். "இந்த அறைக்கு ஆல் பர்ப்பஸ் அறை என்று பெயர். நீங்கள் என்ன பெயரிட்டு அழைத்தாலும்

அவர்கள் இல்லா விட்டால் நான் எங்கே?





✖ கத்திரிக்காய் பொரியல்... வெங்காய சாம்பார்...

பொருந்தும். அதாவது ஸ்டோர் ரூமாகவோ, டைனிங் ரூமாகவோ எப்படி வேண்டுமானாலும் இதை உபயோகித்துக் கொள்ளலாம். நான் அப்பொழுது பூஜை அறையாகவும் உபயோகித்து வந்தேன். அதனால் ஆல் பர்ப்பஸ் அறை என்று சொல்வேன். அது சரி... மாடிப் படி எங்கே? மேலே இன்னும் மொட்டை மாடியாகத்தான் இருக்கிறதா?'' என்று கேட்டார். அவர் விருப்பப்படி மாடிக்குச் செல்ல முடிவு செய்தோம்.

மாடிக்குப் போகும் வழியில் குளியலறையைப் பார்த்து திகைத்து, அப்படியே நின்று விட்டார். ஏனென்றால் அதன் கதவில் அவ்வளவு பொத்தல்! ''நல்லவேளை நான் வசித்த நாட்களில் ஓட்டைகள் இல்லை'' என்று நடுக்கத்துடன் கூறியபடியே மாடி ஏறினார். பத்துப் படிகள் ஏறியதும் உட்கார்ந்து விட்டார். ஒரு புத்தகத்தையும் ஒரு டிரான்சிஸ் [illegible] வாங்கிக் கொண்டார். படியிலேயே உட்கார்ந்து கொண்டு ''இது தான் நான் மாலை வேளைகளில் பொழுது போக்க விரும்பும் இடம். டிரான்ஸிஸ்டரை இலேசாக ஆன் பண்ணிவிட்டுப் புத்தகம் படித்தபடி இருப்பேன். மொட்டை மாடியிலிருந்து காற்று ஜில்லென்று வீசும். ஏர் கண்டிஷன் கெட்டது போங்க'' என்றார்.

பிறகு மீதிப் படிகளைக் கடந்து மேலே ஏறினார். ''இங்கும் அறைகள் கட்டிவிட்டார்களா?'' என ஆச்சரியப்பட்டார். ''அப்பவெல்லாம் மொட்டை மாடிதான். கோடைக் காலத்தில் இங்கேதான படுப்போம். கீழே குடியிருப்பவர்கள் அனைவரும் மேலே வந்து விடுவார்கள். பேசிக்கொண்டே தூங்கிவிடுவோம்'' என்றார்.

மறுபடி கீழே இறங்கி வந்தால் ஓர் இன்ப அதிர்ச்சி! எங்கு நோக்கினும் மக்கள் தலைகள்! வீதியில் உள்ள அனைவருமே திரளாக வந்து விட்டனர். எல்லோருமே மனோரமாவைப் பார்க்க, இன்ன ஆசைப்பட்டார்கள். மிகவும் கஷ்டப்பட்டு காரில் அவரை ஏற்றி அழைத்து வருவதற்குள் எனக்குக் கவலையாகவும், கொஞ்சம் பயமாகவும் கூட ஆகிவிட்டது!

மனோரமா வீடு திரும்பியதும் நான் விடை பெறுகையில், ''என்ன மக்கள் கூட்டம்! அப்படி வந்து மொய்ச்சுட்டாங்களே! ரொம்பச் சிரமமாப் போச்சா? ஸாரி'' என்றேன். அதற்கு மனோரமா, ''வருத்தப்படாதீர்கள் ஸார்! அவர்கள் இல்லாவிட்டால் நான் எங்கே? அவர்கள் என்னைப் பார்க்க ஆவலோடு கூடினால்தானே எனக்குப் பெருமை!'' என்றாரே பார்க்கலாம்!

—சலன்

படங்கள்: ஏ. வி. பாஸ்கர்

✖ ''ஆல் பர்ப்பஸ் அறை!''



காந்தியின் குரலிலே கவிஞனின் பாட்டு!



1910 க்குப் பின் களம் ஓய்ந்து விட்டது. தீவிரவாதிகள் எல்லாம் சிறைச்சாலைகளில் அடைபட்டதால்! களம் பாடிய கவிஞனுக்கும் 'ஓய்வு' கிடைக்கிறது. இந்த ஓய்வைப் பயன்படுத்தி அதுவரை தேச பக்திப் பாடல்களைப் புனைந்து வந்த பாரதி, தெய்வ பக்திப் பாடல்களைப் புனைந்தளிக்கிறான்.

புதுவையில் உள்ள மணக்குட விநாயகருக்கு 'நான்மணி மாலை' புனைந்து சூட்டுகிறான்.

'கண்ணன் பாட்டு' என்னும் பொதுத் தலைப்பிலே எண்ணற்ற பக்திப் பாடல்களைப் படைக்கிறான். அவற்றிலே பல அகப்பொருள் பாடல்களாகவும் அமைகின்றன. பராசக்தி மீது மனமுருகிப் பாடுகிறான்.

'பாஞ்சாலி சபதம்', 'குயில் பாட்டு' ஆகிய குறுங் காப்பியங்களையும் படைக்கிறான். இன்னும் 'மலைமகள்', 'கலைமகள்', 'அலைமகள்' ஆகிய பெண் தெய்வங்களின் மீதும் பாடல்களைப் புனைகிறான். முத்து மாரிக்கும் பாமாலை சூட்டுகிறான். 'புதிய ஆத்திச்சூடி' என்னும் பெயரில் நீதி நூலும் படைக்கிறான். தனது சுயசரிதையையும் தொட்டு முடிக்காமல் முடிக்கிறான்.

இவ்வளவும் நாட்டில் விடுதலைப் போர் நின்றிருந்த நேரத்தில் பாரதி பாடியவை.

1915ல் சென்னை வாசியான அன்னி பெசன்ட் அம்மையார் சுயாட்சிக் கிளர்ச்சி ஒன்றைத் தொடங்குகிறார். அது, தேசம் முழுவதிலும் பரவுகிறது. அம்மையாரின் செல்வாக்கு பாரத மெங்கணும் கொடி கட்டிப் பறக்கிறது. பாரதியார் சுயாட்சிக் கிளர்ச்சியால் கவர்ச்சி யடையவில்லை.

களம் ஓய்ந்து விட்டதால் 1918ல் புதுவை என்னும் பரணை விட்டு இறங்கி, தமிழகம் என்னும் தாய் நிலத்தில் கவிஞன் பாரதி கால் வைத்தான். அவனை கடலூரில் சிறை பிடித்தது பறங்கியர் ஆட்சி. சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு பாரதி விடுதலை பெற்றார். ஆம். அரசியலில் ஈடுபடுவதில்லை என்பது பிரதான நிபந்தனை.

இதனால், 1919ல் நிகழ்ந்த பஞ்சாப் படுகொலை பற்றியும், அதே ஆண்டில் காந்தியடிகள் தொடங்கிய ரௌலட் சட்ட எதிர்ப்பு சத்தியாக்கிரகம் பற்றியும் பாடல் புனையவில்லை பாரதியார்! ஆயினும் காந்தி பஞ்சகம் பாடுகிறார். பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிரான ஒத்துழையாமை இயக்கத்தைச் சித்தாந்த ரீதியில் வரவேற்று, அது வெற்றி பெற வாழ்த்துக் கூறுகிறார்.

''கடுதலும் குளிரும் உயிருக்கில்லை;
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை;
எடுமினோ அறப்போர்'

என்று காந்திஜியின் குரலிலே கவிஞன் பாரதி பாடக் கேட்கிறது நாடு.

பாரதியார் காலத்திலே குமரி முதல் இமயம் வரையுள்ள பாரதப் பெருநாடு முழுவதும் ஒரு தளபதியின் கீழ் — நன்கு வகுக்கப்பட்ட போர் முறைப்படி — விடுதலைப் போர் நடைபெறவில்லை. அப்படி ஒரு போர் தொடங்கியது 1921ல்தான். அந்த ஆண்டிலே பாரதி மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறான். அந்த ஆண்டின் பிற்பகுதியிலே மரணத்தைத் தழுவிவிடுகிறான். அதனால் ஒத்துழையாமைப் போர்க் களத்தைப் பாட அவனுக்கு அதிர்ஷ்டமில்லாமல் போய்விட்டது. அந்த அதிர்ஷ்டத்தைப் பாரதியின் வாரிசாக நின்று நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை சந்திக்கிறார்.

''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது; சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்'' என்பது உப்பு சத்தியாக்கிரகத்தின்போது, நாமக்கல் கவிஞர் புனைந்த பாடல்.

அவரே, ''சங்க நாதம் கேட்குது; சாந்த காந்தி சத்தியத்தின் சங்கநாதம் கேட்குது'' என்ற மற்றொரு பாடலையும் படைக்கிறார்.

இவை இரண்டும் விடுதலைப் போரில் ஈடுபடுமாறு மக்களுக்கு நேரடியாக அழைப்பு விடுகின்றன. இப்படி அழைப்பு விடும் பிரசாரப் பாடல்களைப் படைக்க விடுதலைப் போர்க் களத்தின் முதற் புலவனான பாரதிக்கு அதிர்ஷ்டமில்லாது போய்விட்டது!

(மயிலை இலக்கிய வட்டம் பாரதிய வித்யாபவன் சொற்பொழிவிலிருந்து)

ம.பொ.சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press. Race Course, Road, Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran


விசேஷ சலுகை!
இலவசம்!
மைசூர்
ஸாண்டல் சோப்
Point
Net Weight 1000 gms
for sparkling white
and brilliant colour
washes
FREE!
Mysore Sandal Soap
ஒவ்வொரு
1000 கிராம்
பாக்கெட் மீதும்
இச் சலுகை கையிருப்பு
உள்ள வரையில்
சலுகையில்லாமலும் கிடைக்கின்றன
பாய்ண்ட்
உயர்தரமான
டிட்டர்ஜெண்ட் சலவைப் பவுடர்
MCA-PDP-64 Tam.
கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட் லிமிடெட் அளிக்கும் தரமான தயாரிப்பு விற்பனை செய்பவர்கள் : மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.



REGISTERED No. 4392
Registered as a Newspaper in Sri Lanka
சிங்காரச் சேலை
சிருங்கார் லீலை
100% பாலியெஸ்டர், ஜார்ஜெட், டிஷ்லான் டிஷ்யூ எனப் பல சிங்காரச் சேலைகள். பாலியெஸ்டர் டிரெஸ் ஃபேப்ரிக் அணிவகுப்பு
பாம்பே டையிங்
புதுப்புது பாணிகள். நூறாண்டுகளுக்கு மேலாக.